


# கம்பன் மலர்



கம்பன் கழகம், கோவை

2012

# கம்பன் மலர்

## 2012




**40 ஆம் ஆண்டு**

**கம்பன் விழா வெளியீடு**

**கம்பன் கழகம்**

மணி மேல்நிலைப்பள்ளி வளாகம்
பாப்பநாயக்கன்பாளையம்
கோவை – 641 037.



## கடவுள் வாழ்த்து

"பேர் ஆயிரங்கள் உடையாய் ; பிறந்த
பொருள் தோறும் நிற்றி ; பிரியாய்
தீராய் ; பிரிந்து திரிவாய் ; திறம் தொறும்
அவைதோறும் என்று தெரியாய் ;
கூர் ஆழி அம்கைஉடையாய் திரண்டு ஓர்
உரு ஆதி ; கோடல் உரிபோல்
ஆராயின் ; ஏதும் இலை ஆதி – ஆர் இவ்
அதிரேகமாயை அறிவார்? "

(ஆயிரம் திருப்பெயர்களை உடையவனான நீ, தோன்றிய பொருள்கள் எல்லாவற்றிலும் பிரியாமல் கலந்து நிற்கிறாய். அறிவு அற்றவனாகிய நீ, பல்வேறு அவதாரங்களில் உன் உண்மை சொருபத்தில் இருந்து பிரிந்து வந்து திரிகின்றாய். உன் உண்மை நிலையை அறியும்படி தெரியப்படாத நிலையில் உள்ளாய். அனைத்து பொருள்களிலும் திரண்டு ஓர் உருவம் ஆகிறாய். எண்ணிப் பார்க்கும்பொழுது, வெண்காந்தள் கிழங்கை உரிப்பதைப்போல் ஒன்றும் இல்லாதவன் ஆகின்றாய். உன்னுடைய இந்த அதிரேக மாயை – மிகுதியான மாயச் செயல்களை யார்தான் அறிவார்கள்!)

– (யுத். நாகபாசப் படலம்
கருடன் துதி – 8262)

# கம்பன் அறநிலை

## அறங்காவலர் குழு

திரு. S. பதி தலைவர்
திரு. C. சௌந்திரராஜ் அறங்காவலர்
திரு. V. செல்வபதி ”
திரு. சுனிதா சாந்தாராம் ”
திரு. R.R. பாலசுந்தரம் ”
திரு. நா. நஞ்சுண்டன் ”

# கம்பன் கழகம்

கோவை

## நிர்வாகக் குழு

| | | |
|---|---|---|
| நிறுவனர் | : | அமரர் ஜி.கே. சுந்தரம் |
| தலைவர் | : | முத்தமிழ்க் காவலர் திரு, சி. சௌந்திரராஜ் |
| துணைத் தலைவர்கள் | : | "கம்பர் சீர்பரவுவார்" திரு. வீ. செல்வபதி |
| | | திருமதி சுனிதா சாந்தாராம் |
| செயலாளர் | : | கம்பன் கலைச்செம்மல் திரு. நா.நஞ்சுண்டன் |
| பொருளாளர் | : | திரு. ஆர்.ஆர். பாலசுந்தரம் |
| இணைச் செயலர் | : | முனைவர் திரு. க. முருகேசன் |
| துணைச் செயலர் | : | புலவர் திரு. க. முரளீ |

## மலர்ப் பதிப்பாசிரியர்

திரு. நா. நஞ்சுண்டன்

# பொருளடக்கம்

40 - ஆம் ஆண்டு  கம்பன் விழா

உ

உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே

# 40 - ஆம் ஆண்டு கம்பன் விழா

அன்புடையீர்,

வணக்கம்

2012 - ஆம் ஆண்டு **பிப்ரவரி** மாதம் 11, 12 - ஆம் தேதிகளில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு தினங்களில் கோவை, பாப்பநாயக்கன்பாளையம், மணி மேல்நிலைப்பள்ளி, **நானி கலையரங்கில், கம்பன் விழா** நடைபெற இருக்கிறது.

முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமச் சீராளர் பலர் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர்.

கம்பன் புகழ் பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கத் தாங்கள் விழாவில் நண்பர் குழாத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

S. பதி
தலைவர், கம்பன் அறநிலை

சி. சௌந்திரராஜ்
தலைவர், கம்பன் கழகம்

40 - ஆம் ஆண்டு  கம்பன் விழா

11.2.2012 - சனிக்கிழமை மாலை 5.45 மணி

# விழா மங்கலம்

தலைவர் : நீதியரசர் **வி. இராமசுப்பிரமணியம்**
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை

| | | |
|---|---|---|
| இறைவணக்கம் | : | திருமதி சுவர்ணலட்சுமி |
| வரவேற்புரை | : | 'முத்தமிழ்க் காவலர்' திரு. சி. சௌந்திரராஜ் தலைவர், கம்பன் கழகம் |
| மலர் வெளியீடு | : | கவிஞர் திரு. பெ. சிதம்பரநாதன் பொறுப்பாசிரியர், ஓம் சக்தி |
| மலர் பெறுதலும் வாழ்த்தும் | : | திரு. ஸ்டாலின் நிகழ்ச்சி அமைப்பாளர் கோவை வானொலி நிலையம் |
| தலைமை உரை | : | நீதியரசர் வி. இராமசுப்பிரமணியம் |
| சிறப்புரை | : | முனைவர் ம. இராசேந்திரன் மேனாள் துணைவேந்தர் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை |
| பொருள் | : | "சொல்லினால் சுடுவேன்" |
| நன்றியுரை | : | திரு. நா. நஞ்சுண்டன் செயலர், கம்பன் கழகம் |

நிகழ்ச்சி ஏற்பு : லட்சுமி கார்டு குளோத்திங் மேனுபாக்சரிங் கம்பெனி (பி) லிட்

12.2.2012 - ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி

# சொல்லரங்கம்

தலைவர் : முனைவர் இரா. விஜயன்
தமிழ்ப் பேராசிரியர்
டாக்டர் என்.ஜி.பி. கல்லூரி

தலைப்பு : "பாலகாண்டத்தில் என்னைக் கவர்ந்த பாத்திரம்"

| பாத்திரம் | | பங்கேற்பு |
|---|---|---|
| வசிட்டர் | : | செல்வன் வே. சிவகுமார் |
| தயரதன் | : | செல்வன் ம. விவேக் பிரபு |
| திரிசங்கு | : | செல்வி சி. மதுமதி |
| சனகன் | : | செல்வி செ. சுசித்ரா |
| விசுவாமித்திரர் | : | செல்வன் கோ. மனோஜ் குமார் |
| தாடகை | : | செல்வி வா. சுபாஷிணி |

நிகழ்ச்சி ஏற்பு : ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி அறக்கொடை அறநிலை

40 - ஆம் ஆண்டு கம்பன் விழா

12.2.2012 - ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணி

# சுவை அரங்கம்

**தலைவர் : முனைவர் தெ. ஞானசுந்தரம்**

**தலைப்பு : கம்பனில் பேசாதன பேசினால்...**

| பேசாதவை | | பேசுபவர் |
|---|---|---|
| கல் | : | புலவர் மு. இராசரத்தினம் |
| வில் | : | கவிஞர் அரு. நாகப்பன் |
| பாதுகை | : | மரபின் மைந்தன் முத்தையா |
| அரியணை | : | முனைவர் அ. அறிவுநம்பி |

நிகழ்ச்சி ஏற்பு : ஸ்ரீ அனந்தகுமார் மில்ஸ் லிமிடெட்

---

12.2.2012 - ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45 மணி

# கம்பராமாயண நாட்டிய நாடகம்
# கிட்கிந்தா காண்டம்

| | | |
|---|---|---|
| கருத்தாக்கம் | : | முனைவர் கோ. சத்யநாராயணன் |
| நடன அமைப்பு | : | திரு. ஆர்.பி. பொன்னம்பலம் |
| இசை | : | திருமதி சுவர்ணலட்சுமி, செல்வி ஆர். தீபா |
| பங்கேற்பு | : | மணி மேல்நிலைப் பள்ளி, இராசகொண்டலார் மெட்ரிக் பள்ளி மாணவியர் |

நிகழ்ச்சி ஏற்பு : பொங்கலூர் பயனீர் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிட்
சுபா ஹிந்துமா புரோடக்ட்ஸ்

40 - ஆம் ஆண்டு கம்பன் விழா

12.2.2012 - ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி

# பட்டி மண்டபம்

நடுவர் : திரு. கவியரசர் பேரா. அப்துல் காதர்

தலைப்பு

## வள்ளுவர் வழியில் கம்பன் குரல் ஓங்கி ஒலிப்பது...

### பால காண்டத்திலே!

கவிஞர் அரு. நாகப்பன்

கவிஞர் திருமதி அம்சவேணி

### அயோத்தியா காண்டத்திலே!

முனைவர் அ. அறிவுநம்பி

முனைவர் பி. லதா

### சுந்தர காண்டத்திலே!

புலவர் மு. இராசரத்தினம்

முனைவர் கோ. புவனேஸ்வரி

நடுவர் தீர்ப்பு

நன்றியுரை : முனைவர் க. முருகேசன்
இணைச்செயலர், கம்பன் கழகம்.

நிகழ்ச்சி ஏற்பு : CRI பம்ப்ஸ், கோவை

# 40-ஆம் ஆண்டு கம்பன் விழா நிகழ்ச்சிகளுக்கு

பெருநிதி வழங்கி நிகழ்ச்சிகளை ஏற்ற தொழிலதிபர்கள்

திரு. G. சௌந்திரராஜ், நிர்வாக இயக்குநர்
C.R.I. பம்ப்ஸ் பி.லிட், கோவை.

திரு. R. சாந்தாராம், நிர்வாக இயக்குநர்
லக்ஷ்மி கார்டு குளோத்திங் மானுபாக்சரிங் கம்பெனி (பி) லிட்

திரு. ரதீந்திரன், நிர்வாக இயக்குநர்
ஸ்ரீ அனந்தகுமார் மில்ஸ் லிமிடெட்

திரு. K. வேலு, நிர்வாக அறங்காவலர்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்வி அறக்கொடை அறநிலை

திரு. வீ. செல்வபதி, நிர்வாக அறங்காவலர்
பொங்கலூர் பயனீர் டெக்ஸ்டைல்ஸ் (பி) லிட்

மற்றும்

நாளிதழ் விளம்பரங்களை ஏற்ற

திரு. மகேந்திரா ராம்தாஸ், நிர்வாக இயக்குநர்
மகேந்திரா பம்ப்ஸ், கோவை

திரு. M. கிருஷ்ணன், நிர்வாக இயக்குநர்
ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

நிகழ்ச்சி ஏற்பு மற்றும் அழைப்பிதழ்கள் அச்சிட்டு அளித்த
சுபா ஹிந்துமா புராடெக்ஸ்

திரு. R.R. பாலசுந்தரம்

ஆகியோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

S. பதி
தலைவர், கம்பன் அறநிலை

சி. சௌந்திரராஜ்
தலைவர், கம்பன் கழகம்

# தோரண வாயில்

காலங்களைக் கடந்து, இன்றும் மக்கள் மத்தியிலே நின்று நிலைத்து, தன் பெருமையை நிலைநாட்டியவன் கம்பன் என்ற மாபெரும் கவிஞன். வடமொழியில் வான்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்தை தான் வாழ்ந்த காலத்திற்கேற்ப, காப்பியத்திலே வேண்டிய மாற்றங்களைச் செய்தும், நாட்டு வளத்தையும், அரசர் பெருங்குடிச் சிறப்பையும் சொல்லி, நாம் எவ்வாறு வாழவேண்டும் என்பதை இராமாவதார காப்பியத்தின் மூலம் விளக்கியவன் கம்பன். எனவேதான் பாரதி “கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்” என்று புகழின் உச்சிக்கே கொண்டு சென்றான். இன்றைக்குச் சரியாக 1126 ஆண்டுகளுக்கு முன்பு தனது இராம காதையை வெண்ணைநல்லூரிலே அரங்கேற்றி, புலவர் பெருமக்களால் “கவிச் சக்கரவர்த்தி” எனும் பாராட்டும் அவனுக்குக் கிடைத்தது.

கோவைக் கம்பன் கழகம் 1979 ஆம் ஆண்டு முதல் கம்பன் மலரை வெளியிட்டுக் கொண்டு வருகிறது. உங்கள் கையில் தவழும் இம்மலர் 34 ஆம் மலராகும். இதுவரையில் பல்வேறு கட்டுரைகள், வெளியாகாத அறிஞர் பெருமக்களின் கட்டுரைகளைத் தேடி எடுத்து, மலரில் பிரசுரம் செய்துள்ளோம். மலர் வெறும் விளம்பர மலராக இல்லாமல் கட்டுரைத் தொகுப்பாக இருக்குமாறு வந்திருப்பதை ரசிகர்கள் அறிவார்கள்.

இவ்வாண்டு மலரில் 8 கட்டுரைகள் வெளிவந்துள்ளன. முதலாவது கட்டுரை “கம்பனில் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம்” என்பது. இதனை பேரா. இராசகோபாலன் எழுதியுள்ளார்கள். ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட கம்பன் வெவ்வேறு சுவைகளைத் தக்க இடங்களிலே வைத்து பெருமைப்படுத்துகிறான் என்பதைத் தக்கவாறு எடுத்துக்காட்டி இருக்கிறார். அடுத்து “போர்க்களம்” பற்றிய கட்டுரை வாழியூர் ராசவேலன் எழுதியது. 4000 பாடல்களுக்கு மேல் இருக்கும் போர்க்களக் காட்சிகளில் சிலவற்றைத் தொகுத்து விளக்கியிருக்கிறார். பகீரத முயற்சி. “தையல் சொல் கேளேல்” கட்டுரை பாண்டி – பாவலர் சித்தனின் கைவண்ணம். பெண்கள் சொற்களைக் கேட்டதால் வந்த சீர்கேடுகளையும் விளைவுகளையும் சுருக்கமாக எடுத்துச் சொல்லுகிறார், பல திருப்புமுனைகளுக்கு அவை காரணமாக அமைந்ததையும் சுட்டுகிறார்.

அடுத்த இரண்டு கட்டுரைகள் 1941 ஆம் ஆண்டில் காரைக்குடி கம்பன் விழாவில் பேசியதன் சுருக்கம். 71 ஆண்டுகளுக்குப்பிறகு அவை திரும்ப வெளியிடப்படுகின்றன. "கவிதா தீபம்" கட்டுரையை எழுதியவர் வி.ஆர்.எம். செட்டியார். இவர் பன்மொழிப்புலமை வாய்ந்தவர். ஆங்கில இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும், கம்பனையும் ஊன்றிக் கற்றவர். கட்டுரையைப் படித்தாலே அவரது புலமையை உணர்ந்து கொள்ளலாம். "கம்பனும் துளசியும்" கட்டுரை, கலைமகள் துணை ஆசிரியராக இருந்த கா.ஸ்ரீ.ஸ்ரீ. எழுதியது. மராத்தி, ஹிந்தி, வடமொழி ஆகியவற்றில் புலமை மிக்கவர். வி.ச. காண்டேகரின் நாவல்களை மொழியாக்கம் செய்தவர். துளசியின் இராமாயணத்தை கம்பனோடு ஒப்பீடு செய்கிறார். சுவைத்துப் பாருங்கள். "சரயு என்பது" பேரா. ஐ.கே.எஸ். அவர்களின் கட்டுரை. கம்பன் பல்வேறு நதிகளைத் தன் காப்பியத்தில் சொல்கிறான். அதில் "சரயு" நதி பற்றிய வர்ணனை எவ்வாறு நம்மை ஆட்கொள்கிறது என்பதைக் கட்டுரையாசிரியர் எடுத்துச் சொல்லும் பாங்கு, வியப்பாக, பிரமிக்கத் தக்கதாய் இருக்கிறது. "அவதாரத்துள் அவதாரம் " என்ற கட்டுரை பதிப்பாசிரியரால் எழுதப்பட்டது. வாமனாவதாரம் பற்றிய கம்பனுடைய கண்ணோட்டத்தை – ஆழ்வார்கள் வழிகொண்டு செல்வதைக் கட்டுரையில் காணலாம். "கம்பனில் மூன்று மாயங்கள்" என்ற தலைப்பில் இணைச் செயலர் க. முருகேசனின் கட்டுரை மாயமான், மாயா சனகன், மாயா சீதை ஆகிய நிகழ்ச்சிகளைக் கொண்டு கம்பனை இனங்காட்டும் கட்டுரையாகும். "கம்பன் கவியே கவி" என்ற கவிதை துணைச்செயலர் புலவர் சு. முரளியின் கைவண்ணம். மலரில் வெளிவந்திருக்கும் அத்தனை கட்டுரைகளும் தெவிட்டாத இன்னமுதமாக, செவி நுகர் கனிகளாக இருக்கின்றன. கம்பனை புதிய, புதிய கோணங்களில் பார்ப்பதற்கு இவை துணை புரியும் என நம்புகிறோம்.

கம்பன் மலருக்கு விளம்பரம் கொடுத்துதவிய நிறுவனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் மலரைச் சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த கீதாஞ்சலி அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

என்றும் கம்பன் பணியில்

நா. நஞ்சுண்டன்
செயலர்
மலர்ப் பதிப்பாசிரியர்

கோவை
11.02.2012

# கம்பனில் ஆழ்ந்திருக்கும் கவியுளம்

பேராசிரியர் தி. இராசகோபாலன்

கோபுரத்தின் மேல் நிற்கும் கலசங்கள், எங்கிருந்து பார்த்தாலும் பார்ப்போரின் கண்களுக்குத் தெற்றெனத் தென்படும். ஆனால், கோபுரத்தையும் கோவிலையும் தாங்கி நிற்கும் கடைகால் கண்ணுக்குத் தென்படா ! கரிகாலன் கட்டிய கல்லணையும், இராச இராச சோழன் கட்டிய பெருவுடையார் கோவிலும், பல இயற்கையின் சீற்றங்களையும் தாண்டி, வலுவோடு நிற்கின்றன என்றால், அவற்றைத் தாங்கி நிற்கும் கடைகால்களின் உறுதியும் திண்மையுமே காரணம் எனலாம். அவ்வாறே கம்பனுடைய காவியம் அனல் வாதம் புனல் வாதத்திற்குப் பிறகும், ஓங்கி வளர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம், அதன் கடைகாலாகத் திகழும் முன்னோர்கள் மொழிந்த மொழியும் பொருளுமே எனலாம்.

பாயிரம் பாடுகின்ற பொழுதே '...... தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே' எனத் தொடங்குகின்றார். சரணாகதி எல்லாச் சமயத்தார்க்கும் ஏற்புடைய ஒரு கொள்கையாக இருந்தாலும், அதுவொரு கோட்பாடாகக் (பிரபத்தி) கருதப்படுவது, வைணவம் ஒன்றில்தான். கம்பர் 'தலைவர்' எனச் சொல்லியது ஏற்புடைக் கடவுள் என்றாலும், வழிபடு கடவுள் என்றாலும், சரணாகதி என்பது கம்பரது இறைநெறிக் கொள்கையாகும்.

'இரத்னாகரன்' எனும் பெயருடைய வேடனுக்குச் சப்தரிஷிகள் (ஏழு முனிவர்கள்) இராமநாமத்தின் மகிமையை ஓதுவித்தார்கள். 'இராம' எனும் நாமத்தை அவ்வேடனால் உச்சரிக்க முடியாவிட்டாலும், அவன் எதிர் நின்ற மரா மரத்தின் பெயரை உச்சரிக்க முடிந்தது. அந்த 'இராம' நாமமே ஒரு வேடனை ஆதிகவி ஆக்கியது. சப்தரிஷிகள் ஓதுவித்ததை, வான்மீகியும் உச்சரித்து, உயர்ந்ததை ஊடுருவிப் பார்த்த கம்பர், 'முந்திய நாவினான் உரையின்படி' என்று அவ்வாதிகவிக்குக் குருவணக்கம் செலுத்துகின்றார்.

தொடர்ந்து, ஆழ்வார் பெருமக்களில் முதன்மை பெற்ற நம்மாழ்வாரின் திருவடியைப் போற்றுகின்றார் கம்பர். (குருகைநாதன் குரைகழல் காப்பதே). மேலும் சடகோபர் மேல் ஓர் அந்தாதியும் பாடியிருப்பதால், கம்ப ராமாயணத்தின் அடிநாதமாக உறைந்து கிடக்கும், மானுடம் பாடமறுத்த மாக்கவிகளையும் உணரமுடிகிறது. கம்பர் தமது காவியத்தை கி.பி.887 ஆம் ஆண்டு திருவரங்கத்தில், மேட்டழகருக்கு முன்னர் அரங்கேற்றியிருக்கிறார். அந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர், வைணவ ஆச்சாரியரான நாதமுனிகள். அந்த ஆச்சாரியப் பெருமகனார் இராமகாதையின் ஆழ்நிலையில் உறைந்து கிடக்கும் வைணவக் கோட்பாடுகளைக் கண்டு, அதனையும் நாலாயிரத்தோடு இணைக்க முயன்றதாக ஒரு

செவிவழிச் செய்தியுண்டு. நாரணன் புகழ் மட்டுமே நடமாடும் நாலாயிரத்தில், வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலைப் பற்றிய புகழுரைகளும் அடங்கிய இராமகாதையைச் சேர்ப்பதில் எழுந்த சர்ச்சையால், அம்முயற்சி கைவிடப்பட்டிருக்கலாம்.

கம்பருக்கு இராமகாதை முற்றுப்பெற்ற பிறகு, நாராயணீயமும் பாடவேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்கும் போலும் ! ஆனால், பல்பிணியும் சில் வாழ்நாளும் உடைய மனிதப் பிறவியில், அதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தினால், இராமகாதையைப் பாடும்போதே தம் அவாவை அவ்வப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். திருமலைக்குச் செல்ல முடியாதவர்கள், திருச்சானூரிலேயே தமது நேர்த்திக் கடனை முடித்துக் கொண்டு திரும்புதல் போல், இராமகாதையிலேயே நாராயணீயம் பாடுவதற்குரிய வேட்கையையும் தணித்துக் கொண்டிருக்கிறார், கம்பர்.

இரணியன் வதைப் படலத்தில், எட்டெழுத்தின் பெருமையை இரணியனுக்கு எடுத்துரைக்க முயன்ற பிரகலாதன், "... செந்தழல் முகந்த ஓமவேள்வியில் உறுபதம் உய்ப்பதும், ஒருவன் நாமம் ; "அன்னது கேள் ! நமோ நாராயணாய" என்று பேசுகிறான். இராம காதையில் 'நமோ நாராயணா' எனும் மந்திரத்தை உச்சரிப்பதற்காகவே, இரணியன் வதைப்படலத்தை உருவாக்கிக் கொண்டார் போலும், கவிஞர். கிட்கிந்தா காண்டத்திலும் நட்புக்கோட் படலத்தில், தம் அவாவை நிறைவேற்றிக் கொள்கிறார், கம்பர். இராமன் திருமாலின் அவதாரமே என்பதைச் சுக்கிரீவனுக்குத் தெளிவிப்பதற்காகச் "சங்கு சக்கரக் குறியுள தடக்கையில், தாளில் எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை" எனத் திருமால் பெருமை பேசுவான் அனுமன் ! பெருமாளின் சங்கு சக்கரப் பெருமையைப் பேசுவதோடு ஆயிரம் தாமரை போன்ற திருவடியின் மகிமையையும் எடுத்துச் சொல்கிறான், அனுமன் ! மற்றும் நாகபாசப் படலத்தில், கருடன் இராமனைத் துதிக்கின்றபொழுது, 'கூராழி அங்கை உடையாய்' என்று, இராமன் கோதண்டபாணியாக இருந்தாலும், அவன் திருமாலின் அவதாரமே என்பதைச், 'சக்கரதாரி' எனும் சொல்லாட்சியின் மூலம் புலப்படுத்துகின்றார். நாராயண பட்டதிரி பாடிய நாராயணீயத்தைக் கம்பரால் முழுமையாகப் பாட முடியாவிட்டாலும், ஒப்பற்ற ஓவியக்காரன் ஒரு சில கோடுகளிலேயே தம் வித்தையைக் காட்டிவிட்டுப் போவதைப் போல் கம்பரும் ஒரு படலத்திலேயோ ஒரு பாட்டிலேயோ காட்டிச் சென்றிருக்கிறார் !

சுகர் ஏழு நாட்களில் பரிட்சித்துக்குச் சொன்ன பாகவதத்தைத் தாமும் தமிழில் பாடவேண்டும் என்ற எண்ணம் கம்பர் மனத்திலும் உதித்திருக்கிறது. அன்று எனில், வான்மீகி பாடாத இரணியன் வதைப் படலத்தைக் கம்பர் பாடவேண்டிய அவசியம் இல்லை. வாழ்க்கையில் வைரத்தாலேயே மாலை செய்து அணிய வேண்டும் எண்ணிய ஒரு பெண்ணிற்கு அது கிட்டாத பொழுது, ஒரு வைரக்கல்லை மூக்குத்தியில் பதித்து, நானும் வைரமூக்குத்தி

அணிந்திருக்கிறேன் பார்' எனக் காட்டுவதுபோல், இரணியன் வதைப் படலத்தைப் பாடித் தம் தாகத்தைத் தணித்துக் கொண்டிருக்கிறார், கம்பர்.

திருமால் இவ்வுலகத்தில் அனைத்தையும் தோற்றுவித்து, அவற்றின் உள்ளேயும் அந்தர்யாமியாய் உறைகின்றான் என்பது வைணவக் கோட்பாடு. அக்கோட்பாட்டை இரணியனுக்கு உரைக்கும் முகத்தான், "தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து, அவை தன்னுள்ளே நின்று, தான் அவற்றுள் தங்குவான், பின்னிலன் ; முன்னிலன் ஒருவன்" எனப் பிரகலாதன் மூலம் வெளிப்படுத்துகிறார். ஒரு கடலிலே தோன்றும் அலைகள், அக்கடலுக்குள்ளேயே அடங்குவது போன்று, இறைவன் தோற்றுவித்த அனைத்தும் அவனிடத்தே அடங்குகின்றன எனத் திருமழிசை ஆழ்வார் விளக்கமாகப் பாடியதைச் சுருக்கமாக எடுத்துரைக்கிறார். ("தன்னுளே திரைத்து எழும் தரங்க வெண்தடங்கடல், தன்னுளே திரைத்து எழுந்து அடங்குகின்ற தன்மைபோல், நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும் நின்னுளே அடங்குகின்ற நீர்மை நின்கண் நின்றதே" என்பது திருமழிசைபிரான் அருளிச் செய்த பாசுரம்)

பாகவதத்தில் மிகவும் சுவையான பகுதி, கிருஷ்ணாவதாரம் ! கல்கி அவதாரமே வந்தால் கூட, கிருஷ்ணாவதாரமே பரிபூரணாவதாரம் என ஆழ்வாராதிகளால் பாராட்டப் பெறுகிறது. இராமாவதாரத்தைப் பாடுகின்றபொழுது, இனி அடுத்து வரப் போகின்ற அவதாரத்தைப் பற்றிப் பேசுவது வழக்காறன்று என்றாலும், மகாகவிகளுக்கேயுரிய (பொயட்டிக் லைசன்ஸ்) விசேட உரிமையைப் பயன்படுத்திக் கம்பர், கண்ணனையும் பாடிவிடுகிறார். வெகுண்டெழுந்த தன்னுடைய அருமந்த பிள்ளையாகிய பிரகலாதனைக் கல்லின் கட்டிக், கடலில் தூக்கி எறிய ஆணையிடுகின்றான் இரணியன். அவ்வாறு எறியப்பட்ட பிள்ளை, பிரளய காலத்திலே ஓர் ஆல இலையின் மீது படுத்திருக்கின்ற பாலகனைப்போல் காணப்பட்டான் எனக் கம்பர் பாடுகின்றார். ("...........சிலையில் திண்புனலில், சினை ஆலின் இலையில் பிள்ளை எனப் பொலிகின்றான்" இரணியன் வதைப் படலம் – பாட்டு : 102)

ஆலிலையின் மேல் பாலகனாய் படுத்திருந்த அப்பரம்பொருளைப் பெரியாழ்வார் அகம் மகிழ்ந்து பாடியிருக்கிறார். "பாலகன் என்று பரிபவம் செய்யேல், பண்டொரு நாள் ஆலிலை வளர்ந்த சிறுக்கண், அவன் இவன் (பாசுரம் : 60) எனும் பெரியாழ்வார் பாசுரத்தைக் கம்பரும் படித்துச் சுவைத்திருக்கவேண்டும். அதனால்தான், அவரால், 'ஆலிலையில் பிள்ளையெனப் பொலிந்தான்' என ஈடுபாட்டோடு பாட முடிந்தது.

கம்பருக்குக் கண்ணனுடைய கீதாயுபதேசத்தையும் பாடவேண்டும் எனும் பெரு விருப்பம் இருந்திருக்கிறது. இந்திரஜித் விடுத்த நாகாஸ்த்திரத்தால் பலரும் மயக்குண்டு

கிடக்கின்றனர். கருடாழ்வார் வந்து மயக்கத்தைப் போக்கி, திருமாலைத் துதிக்கத் தொடங்குகின்றனர். குருஷேத்திரத்தில் பாசத்தால் சோர்ந்து நின்ற அர்ச்சுனனை, "எடுடா ! காண்டீபத்தை ! நீ சத்திரியன் ! கர்மயோகம் செய்யவேண்டியது உன் கடமை ! எதிரிகளைக் கொல்" எனக் கூறினான், கிருஷ்ணன். அதனைப் பாட நினைத்த கம்பர், ".....வில் ஒன்று எடுத்தி, சரம் ஒன்று தொடுத்தி ; .... கொல் என்று உரைத்தி ; கொலையுண்டு நிற்றி ! கொடியாய் ! உன் மாயை அறியேன்" என்று கருடன் பரம்பொருளைத் துதிப்பது போல் நுட்பமாகப் பாடுகிறார், கம்பர்.

கம்பருடைய உபாசனாமூர்த்தி, நரசிம்ம மூர்த்தமாக இருந்திருக்கக்கூடும் என்பது பல ஆய்வாளர்களின் கருத்தாகும். எவ்வாறு எனில், கம்பத்தைப் பிளந்துகொண்டு அந் நரசிம்ம மூர்த்தம் வெளிப்படுவதைக் கம்பர் வருணிக்கும்போது, வாசகர்கள் ஒரு நாடகக் காட்சியைக் காண்பது போல் உணருகிறார்கள். "பிறந்தது தூணும் ; ஆங்கே பிறந்தது சீயம் ; பின்னை வளர்ந்தது, திசைகள் எட்டும், பகிரண்டம் முதல மற்றும் அளந்தது ; அப்புறத்துச் செய்கை யார் அறிந்து அறையகிற்பார்? கிளர்ந்தது ககன முட்டை கிழிந்தது, கீழும் மேலும் " எனும் பாசுரத்தைக் கம்பர் எழுதும்போது நடித்துக்கொண்டே எழுதியிருக்கவேண்டும். நரசிம்மம் உபாசனா மூர்த்தி என்பதால், கம்பர் மிகுந்த உக்கிரத்தோடு எழுதியிருப்பார் போலும்!

கம்பர் இராமாயணத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றிய போது, அதிலே இரணியன் வதைப் படலத்தை அவர் படித்தபோது, எதிரே இருந்த மேட்டழகர் தலையை அசைத்து அசைத்துக் கேட்டு மகிழ்ந்ததாக ஒரு செவிவழிச் செய்தி உண்டு. கம்பத்திலிருந்து புறப்பட்ட நரசிங்கத்தை உபாசனாமூர்த்தியாகக் கொண்டதால், அவருக்குக் 'கம்பர்' என்பது காரணப் பெயராகக் கூட இருந்திருக்கக்கூடும் (சான்று : எம். இராதாகிருஷ்ணப்பிள்ளை – கம்பர்) என்கிறார், ஓர் அறிஞர். எப்படியோ பாகவதத்தில் ஓர் அம்சமான நரசிம்மாவதாரத்தைப் பாடியதில், கம்பருக்கு ஒரு மனநிறைவு ஏற்பட்டிருக்கவேண்டும் !

சீதா கல்யாணம் முடிந்து வரும்போது, பரசுராமர் ஆவேசத்தோடு ஓடி வருவதைக் கம்பர் ஒன்பது பாசுரங்களில், ஒரு படச்சுருள் போல் ஓட்டிக் காட்டுவார். பாகவதத்தில் ஆவேச அவதாரம் என வருணிக்கப்படுவது, பரசுராமர் அவதாரம். கம்பருக்குப் பாகவதத்தில் மற்றுமோர் அவதாரத்தையும் பாடியதில் மேலும் மனநிறைவு ஏற்பட்டிருக்கவேண்டும். விசுவாமித்திரர் வேள்வி காக்க இராம–இலக்குவரை அழைத்துக்கொண்டு போகும்போது, வேள்விப் படலத்தில் வாமனாவதாரத்தையும் பாடுவதற்குக் கம்பருக்கு ஓர் களம் கிடைக்கின்றது.

"முழுநிலவே ! இளஞ்சிங்கம் போன்ற பிள்ளைமையைப் பார்த்து, சிறுபிள்ளை என்று

இகழவேண்டா ! இவனின் சிறுமை – பெருமையை அறிய மாவலியிடம் சென்று கேள்'' எனப் பெரியாழ்வார் பிள்ளைத் தமிழ் முறையாலே, வாமனாவதாரத்தின் பெருமையைப் பேசுகின்றார். (''சிறியன் என்று என் இளஞ்சிங்கத்தை இகழேல் கண்டாய் ! சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச் சென்று கேள்'' என்பது பாசுரம் : எண் : 61)

பாகவதத்தில் அம்சாவதாரம் எனப் பாராட்டப்படுகின்ற 'வாமானவதாரத்தை' இரத்தினச் சுருக்கமாகப் பாடுகிறார், கம்பர். வாமனின் உருவம், பெற்ற தாயால் கூட வெறுக்கப்படும் ஒன்றாகும். ஆனால், அவ்வுருவம் வானையே அளக்கின்ற அளவுக்கு வளருகின்றது. அதனைக் கம்பர், ''பயந்தவர்களும் இகழ் குறளன் ; பார்த்து எதிர் வியந்தவர் வெருக் கொள, விசும்பின் ஓங்கினான்'' எனப் பட்டுக் கத்தரித்தது போல் பாடியிருக்கிறார். நந்தவனத்தில் அழகிலே மயங்கிய அரசகுமாரி, நந்தவனத்திலே உள்ள அத்தனைப் பூக்களையும் பறிக்க முடியவில்லை என்றாலும், ஒரு சில பூக்களைப் பறித்துத் தன் தலையில் சூடிக் கொண்டு செல்வதைப் போல, கம்பன் எனும் மகாகவிஞன், பாகவதம் முழுமையும் பாட முடியவில்லை என்றாலும், அதிலுள்ள ஒரு சில பூக்களைப் பறித்து, இராமகாதை எனும் கூந்தலிலே அங்கங்கே சொருகிச் சென்றிருக்கிறார்.

பந்தத்தினால், பாசத்தினால் வைணவக் கோட்பாடுகளை எழுதிப் பார்த்த மகாகவி கம்பர், சொந்த வாழ்க்கையிலும் வைணவ எல்லையில் வாழ்ந்து பார்த்திருக்கிறார். சீதா கல்யாணத்தின் மூலம், கம்பநாட்டாழ்வாரது அன்றாட வாழ்க்கையும் நுணுக்கமாக வெளிப்படுகிறது. சீதா கல்யாணத்திற்குத் தன்னை அலங்கரித்துக் கொண்டு புறப்படுகின்ற இராமன் நெற்றியில் திருமண் அணிந்து கொண்டுப் புறப்படுகின்றான். அதனைக் கம்பர், ''என்றும் நான்முகன் முதல் யாரும், யாவையும், நின்ற பேரிருளை நீக்கி, நீள்நெறி, சென்று மீளாக் குறி சேரச் சேர்த்திடு தன்திரு நாமத்தைத் தானும் சாத்தியே'' என வருணிப்பார். ஆனால், இப்பாசுரத்தைப் பதிப்பாளர்கள் சிலர் மிகைப் பாடல்களில் சேர்த்துள்ளனர். திருமண் இடுதலின் பெருமை, நாலாயிரத்தில் பரக்கப் பேசப்படுகின்றது. கோகுலத்தில் கண்ணன் தெருவழியே நடந்து போகும்போது, நெற்றியில் திருமண்ணும், நெற்றிப் பட்டமும் தவழ நடந்து போவான் என்பதைப் பெரியாழ்வார், ''சிந்துரம் இலங்கத் திருநெற்றி மேல் திருத்திய கோறம்பும் திருக்குழலும், அந்தர முழவத் தண்தழைக் காவின்கீழ்.... அந்தமொன்று இல்லாத ஆயப்பிள்ளை'' (பாசுரம் எண் : 259) என அருளித் செய்தார்.

மேலும் இரண்டு இடங்களில் திருமண் பெருமையை எடுத்துரைக்கின்றார். நாயகன் நாயகி பாவத்தில் பாடும்போது நம்மாழ்வார், ''திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே எனக் குறிப்பிடுகின்றார். திருவுடை என்பதற்கு அரசலட்சணங்களையுடைய என்று ஒருபொருளும், நெற்றியிலே திருமண்ணைத் தாங்கிய என்று மற்றொரு பொருளும்

உண்டு. பிறிதொரு பாசுரம், "நெற்றியுள் நின்று என்னை ஆளும் நிரை மலர்ப் பாதங்கள் சூடி" என்பதாகும். "நான் நெற்றியில் அணிந்திருக்கும் திருமண்ணையும் நோக்கி என்னை ஆண்டருள் செய்யும் நாயகனே" என்பது இதன் பொருள் ஆகும். இத்தனையும் கம்பர், 'தன் திரு நாமத்தைத் தானும் சாத்தியே' எனப் பாடியதற்குச் சூழ உறைந்து கிடக்கும் கவியுள்ளங்கள் ஆகும்.

கவிதையிலே சில புதிய முயற்சிகளைச் செய்வதற்குக், கம்பருக்கு ஆழ்வார்கள் பெரிதும் கைகொடுத்திருக்கிறார்கள். 'ஐயோ' எனும் சொல் தமிழிலக்கியத்தில் முதன் முதலில் புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது. போர்க்களத்தில் வீரமரணம் அடைந்திருக்கின்ற தலைவனுடைய பூதவுடலைக் கண்ட தலைவி, 'ஐயோ ! இப்படியே இவ்வுடல் கிடந்தால், ஏதாவது புலி வந்து தின்றுவிட்டால் என் செய்வது' எனப் புலம்புகின்றாள். "ஐயோ ! எனில் யான் புலி அஞ்சுவலே" என்பது வன்பரணர் பாடிய புறநானூற்றுப் பாடலாகும். (பாடல் எண் : 255) இலக்கிய ஆட்சியிலும் வழக்காற்றிலும் 'ஐயோ' எனும் சொல் இதுவரை அச்ச உணர்ச்சியில் தான் கையாளப்பட்டிருக்கிறது.

ஆனால், அச்சொல்லை முதன் முதலில் வியப்பு உணர்ச்சியில் அல்லது ஆச்சரியத்தில் கையாண்டவர், திருப்பாணாழ்வார் ஆவார். திருவரங்கத்தில் பாம்பணையின் மேல் பள்ளிகொண்டிருக்கும் பெருமாள், பாங்குற அணிந்திருக்கும் பன்மணி ஆரமும், முத்துமாலையும், எல்லையற்ற எழிலோவியத் திருமேனியின் அழகும், ஐயோ என் மனவடக்கத்தை மட்டு மீறிவிட்டதே எனும் பொருளில், "... அரங்கத்து அரவின் அணையான் கோலமா மணி ஆரமும், முத்துத் தாமமும் முடிவில்லது ஓர் எழில் நீலமேனி, ஐயோ ! நிறைகொண்டது என் நெஞ்சினையே" என அருளிச் செய்திருக்கிறார், திருப்பாணாழ்வார்.

திருப்பாணாழ்வார் வியப்புணர்ச்சியில் பயன்படுத்திய 'ஐயோ' எனும் சொல்லாட்சியை அப்படியே உள்வாங்கிக் கொண்டிருக்கிறார், கம்பநாட்டாழ்வார். கங்கைக் கரையில் சீதை இலக்குவனரோடு நடந்து செல்கையில், இராமபிரானது அழகைக் கம்பர் வருணிக்கிறார். "வெய்யோன் ஒளி தன்மேனியில் விரிசோதியின் மறைய.... மையோ, மரகதமோ, மறிகடலோ, மழைமுகிலோ, ஐயோ ! இவன் வடிவு என்பதோர், அழியா அழகுடையான்" எனக் கம்பர் இராமனுடைய அழகில் வாசகர்களை மயங்கி நிற்கச் செய்வதோடு, தானும் மயங்கி நிற்கிறார். திருப்பாணாழ்வாரை அர்ச்சாவதாரம் ஆச்சரியத்தில் மூழ்கடித்தது ; கம்பரை இராமாவதாரம் மூழ்க அடித்திருக்கிறது.

திருவேங்கடத்துள் எழுந்தருளியுள்ள பெருமாளை ஒரு புதிய கோணத்தில் பார்க்கிறார், நம்மாழ்வார். பெருமாள் நம்பக்கம் வருவதுபோல், தோற்றமளித்துவிட்டு, வராமல்

போய்விடுவான் ! ஆனால், அவன் வரவே மாட்டான் என நினைத்திருக்கையில் நம் அருகே வந்து நிற்பான். இது இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்று ! அதனை நம்மாழ்வார், "வந்தாய் போல வாராதாய் ! வாராதாய் போல வருவானே" எனத் திருவாய்மொழியில் அருளிச் செய்திருக்கிறார். நம்மாழ்வாரின் கருதுகோளைக் கம்பர் வெகு லாவகமாகக் கையாண்டிருக்கிறார். இறைவன் வராதது போல நாம் நினைத்திருக்கையில், அவன் வெகு வேகமாக நம்பக்கம் வந்து நிற்பான் எனப் பாடிவிட்டால், அருத்தாபத்தியால், வருவது போல் வாராமலும் இருந்துவிடுவான் என்பது பெறப்படும் அல்லவா?

விராதன் இராமபிரானைத் துதிக்கும்போது, "வாராதே வரவல்ல திருமாலே ! இந்த உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் நீ அறிந்து வைத்திருக்கிறாய் ! ஆனால், அவை உன்னை அறிய மாட்டா ! ஏனென்றால், நீ வருவதும் தெரியாது ; போவதும் தெரியாது!" எனக் குறிப்பிடுகின்றான். "தாய் தன்னை அறியாத கன்றில்லை ; தன் கன்றை ஆயும் அறியும் ; உலகின் தாய் ஆகின்,ஐய ! நீ அறிதி எப்பொருளும் ; அவை உன்னை நிலையறியா ; மாயை இது என்கொலோ? வாராதே வர வல்லாய்" என்பது விராதன் மூலம், கம்பர் தந்த வாக்குமூலம் ஆகும். இதில் நம்மாழ்வார் இறைவனை, வந்தால் போல வருபவனாகவும், வாராதான் போல வருபவனாகவும் சொல்லி, ஒரு சாதாரண கல்லை, இருபக்கமும் ஒளிவீசக்கூடிய ஒரு வைரக் கல்லாய் மாற்றிக் காட்டினார். ஆனால், கம்பர் இறைவன் வாராதே வரவல்லவன் என்பதைச் சொல்லி, மறுபக்கத்தைச் சொல்லாமல் விட்டார் ! 'சொல்லப்பட்டது இனியானது ; சொல்லாமல் விட்டது அதைவிட இனிமையானதாகும்' என மேல்நாட்டு அறிஞன் கூறியதைப் போலக் கம்பர், சொல்லாமல் விட்டது மேலும் இனிமை சேர்க்கின்றது. நம்மாழ்வார் இருபக்கம் பட்டை தீட்டினார், கம்பரோ முப்பக்கம் பட்டை தீட்டி அழகுக்கு அழகு சேர்த்திருக்கிறார்.

முன்னோர்கள் மொழிந்த மொழிகளை மட்டுமன்றி, அவர்கள் சொன்ன பொருள்களையும் பொன்னே போல் போற்றவேண்டும் என்பது ஒரு முதுமொழி ! கம்ப நாட்டாழ்வார் நுட்பமும் திட்பமும் பொருந்திய முன்னோர்கள் மொழிபொருளை லாவகமாகக் கையாள்வதில், கைதேர்ந்தவர் எனலாம். திருமங்கையாழ்வார், திருக்காழிச் சீராம விண்ணகரத்தின் செழிப்பை மிக அற்புதமாக வருணித்திருக்கிறார். அங்கு வயல்களில் களை பறிக்கும் பெண்கள் காவிய நயத்தோடு திகழ்கிறார்கள். களையெடுக்க வந்த மருதநிலத்துப் பெண்கள், களைகளைப் பறிக்காமல் வயல்களை விட்டு வெளியேறுகிறார்கள். காரணம் என்ன தெரியுமா?

வயல்களில் காணப்படும் கருங்குவளை மலர்கள் அந்த உழத்தியருடைய கண்களைப்போல் காட்சியளித்தனவாம் ; ஆம்பல் மலர்கள் அவர்களுடைய செவ்விய வாயினைப் போலத் தோன்றியனவாம் ; எனவே தம் உறுப்புக்கள் போலத் தோற்றமளித்த

களைகளைக் களையாமல் மருதநிலத்துப் பெண்கள் வெளியேறினார்கள் என்று திருமங்கையாழ்வார் விளம்புகின்றார். "வையணைந்த ..... நெய்தலோடு மையணைந்த குவளைகள் தம் கண்கள் என்றும், மலர்க்குமுதம் வாய் என்றும், கடைசிமார்கள் செய்அணைந்து, களை களையாது ஏறும் காழிச் சீராம விண்ணகரே " என்பது பாசுரம் : எண்.1180 திருமங்கையாழ்வாருடைய பாசுரத்தை நன்கு ஓதியிருக்கிறார், கம்பர் ; அதனைத் காப்பியத்தில் பயன்படுத்தவும் செய்கிறார் : ஆனால், கம்பர் பயன்படுத்திய விதத்தைத் திருமங்கையாழ்வாரே பார்த்தால் வியந்து நிற்பார்.

ஆழ்வாரின் வயல்களில் உழவுப் பணியைப் பார்த்தவர்கள், பெண்கள், ஆனால், கம்பரோ உழவர்களைக் களையெடுக்க வைக்கிறார் : அந்த உழவர்களோ கள்ளுண் களிப்பில் இருப்பவர்கள். அந்த மயக்கத்தோடு, காம மயக்கமும் அவர்கள் தலைக்கு ஏறுகிறது. அதனால், குவளை மலர்கள் பண்வாய் உழத்தியரின் கண்கள் போன்று காட்சியளிக்கின்றனவாம் ; தாமரை மலர்கள் அவர்கள் முகங்கள் போல் முன் நிற்கின்றனவாம்; ஆம்பல் மலர்கள் அவ்வுழத்தியரின் வாயினைப் போல் விளங்கினவாம் ; அதனால், அந்தக் காமுகர்கள் களைகளைப் பறிக்காமல் அங்கே உலவிக் கொண்டிருந்தார்களாம். "பண்கள் வாய் மிழற்றும் இன்சொல் கடைசியர் பரந்து நீண்ட கண், கை, கால், முகம், வாய் ஒக்கும் களை அலால் களை இலாமை, உண் கள்வார் கடைவாய் மள்ளர் களைகலாது உலாவி நிற்பர்; பெண்கள் பால் வைத்த நேயம் பிழைப்பரோ, சிறியோர் பெற்றால்" என்பது பாசுரம் : 41)

கள்ளுண்ட மள்ளர்கள் காமவெறிப்பட்டு நின்றதை வைத்துக் கம்பர், ஓர் உயர்ந்த நீதியை உலகத்துக்கே வழங்குகின்றார். இத்தகைய பெண்பித்தர்கள் ஒரு நாளும் பிழைக்கமாட்டார்கள் ; ஒழிந்தே போவார்கள் என்றொரு நீதிக் கருத்தையும் நாட்டு வளத்தைப் பாடுகின்றபோதே, சொல்லிச் செல்கிறார், கம்பர் ! திருமங்கை ஓர் அருளாளர் என்பதால், கோயிலுக்குள்ளே இருக்கும் பெருமாள் எவ்வளவு அருள் நோக்கம் உடையவர் என்பதைக் காட்டுவதற்காக, வெளியே நிற்கும் உழத்தியர்களின் அருள்உள்ளத்தையும் முன்னோட்டமாகப் பாடிச் செல்கிறார். கம்பர் ஒரு சமுதாயக் காவலர் என்பதால் கள்ளும் காமமும் ஒரு வீறார்ந்த சமூகத்திற்கு விரோதிகள் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். கம்பர் ஒரு சமூகவியல்வாதியாகவும் திகழ்வதால், திருமங்கையாழ்வார் தந்த ஓர் ஆயுதத்தைப் போரிடும் வாளாகவும் மாற்றுகிறார் ; எதிரிகளுடைய ஈட்டியைத் தாங்கும் கேடயமாகவும் மாற்றுகிறார். கம்பர் ஓர் உலகநாயகன் அல்லவா?

மகா காவியங்கள் அனைத்தும் தனிமனித சிந்தனையிலிருந்து உதித்திருந்தாலும், அச்சிந்தனைகள், அந்தந்த மண்ணின் ஓராயிரம் வருடத்தின் சாரத்தைத் தாங்கியனவாக

இருக்கும். ஜான் மில்டனின்'இழந்த சொர்க்கம்' (பேரடேஸ் லாஸ்ட்) விவிலியத்தின் சாரத்தையும் சத்தையும் தாங்கி நிற்கின்ற ஒன்றாகும். ஹோமரின் 'இலியத்' காப்பியம், காலம் காலமாகக் கிரேக்கத்தில் வழங்கி வந்த கிளைக்கதைகளின் – வாய்மொழி வரலாற்றின் வேர்களைத் தாங்கியது ஆகும். அவ்வாறே, இராமகாதை, ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும் ஆச்சாரியப் பெருமக்களின் அருட்செயலையும் ஆதார சுருதியாகக் கொண்டதாகும்.

திரிவேணி சங்கமத்திற்குப் போனால், கங்கை கலங்கி நிற்கும் ; காசிமா நகரத்துக் கங்கை ஆழ அகலத்தோடு ஓடுவதால், அடித்தலத்தை எட்டிக்கூடப் பார்க்கமுடியாது. ஆனால், ஹரித்துவாரத்தில் பார்த்தால், கங்கை அடிவயிற்றில் அடக்கிக் கொண்டிருக்கும் அத்தனைக் கூழாங்கற்களையும் எண்ணிச் சொல்லிவிடலாம். ரிஷிகேசில் விட்டெறிந்த காசுகளைத் துணிச்சல் இருந்தால், இறங்கி எடுத்துவிடலாம். கங்கையைப் போலவே, இராமகாதையில் ஓடிக் கொண்டிருக்கும் கம்பர் என்ற ஜீவ நதியின் அடிவாரத்தில் நவமணிகள் கொட்டிக் கிடக்கின்றன. அந்த மணிகளும் முத்துக்களும் மலையிலிருந்தும் கடலிலிருந்தும் பிறந்தவை அல்ல !

ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் இருந்து பிறந்த மணிகள் ஆகும். சங்கப்புலவர்கள் தங்கள் மடியில் கட்டியிருந்தவைகளிலிருந்து, கொட்டியவை ஆகும். வான்மீகி முனிவரின் சிந்தனைகளிலிருந்து பிறந்த மணிகள் ஆகும். அணிசெய் காவியம் ஆயிரங்களில் தனித்தனியே காணப்படும் முத்துக்களையும் வைரங்களையும், கம்பர் ஒருவரிடத்திலேயே காணலாம். கம்பனில் ஆழங்காற்பட்டவர்கள், ஆழ்ந்திருக்கும் கவியுளத்தைக் காணுவார்கள் ! கம்பன் எனும் காவியக் கடலில் மூழ்குபவர்கள், யாரும் வெறுங்கையோடு திரும்பமாட்டார்கள்.

மூழ்குபவர்களின் திறமைக்கு ஏற்ப, ஆயிரம் இப்பிகள் சூழ்ந்த இடம்புரிச் சங்கைப் பெறலாம் ; இன்றும் சற்று ஆழத்திற்குப் போகின்றவர்கள், ஆயிரம் இடம்புரிச் சங்குகள் சூழ வருகின்ற ஓர் வலம்புரிச் சங்கைப் பெறலாம் ; இன்னும் அடிமண் அளவிற்குப் போகின்றவர்கள், ஆயிரம் வலம்புரிகள் சூழ வலம் வருகின்ற பாஞ்சசன்யத்தையே பெறலாம்.

# கம்பன் கண்ட போர்க்களங்கள்

வாழியூர்.வே.இராசவேலன், எம்.ஏ., எம்.எட்.,

## நுழைவு வாயில் :

களம் என்றால் இடம் என்பதாகும். நெல் அடிக்கக்கூடிய (அ) உலர்த்தக்கூடிய களம் என்றால் அது நெற்களம். அதேபோல் போர் நடக்கக்கூடிய களம் போர்க்களம் என்பதாகும். கம்பராமாயணத்தில் இத்தகைய போர்க்களங்கள் பலவுண்டு. இராமனுக்கும் தாடகைக்கும் போர் நடந்த இடம், விராதனுக்கும் இராமஇலக்குவர்க்கும் போர் நடந்த இடம், கரனுக்கும் இராமருக்கும் போர் நடந்த இடம், கும்பகருணனுக்கும் இராமருக்கும் போர் நடந்த இடம், வாலிக்கும், சுக்கிரிவனுக்கும் போர் நடந்த இடம், ஜடாயுவுக்கும் இராவணனுக்கும் போர் நடந்த இடம், இலக்குவருக்கும் இந்திரஜித்துக்கும் போர் நடந்த இடம், இராவணனுக்கும் இராமனுக்கும் போர் நடந்த இடம் இவை அனைத்தும் போர்க்களங்களே ஆகும். கம்பன் இத்தகைய போர்க்களங்களை எவ்வாறு சொல்கிறான் என்பதைப் பார்ப்போம்.

## இராமன் – தடாகைப் போர் :

கம்பராமாயணத்தில் நாம் முதன்முதலாகக் காணக்கூடிய போர்க்களம் தாடகை– இராமன் சண்டையிட்ட போர்க்களம் ஆகும். இராமனுக்கு இது கன்னிப்போராகும். ஆம், இராமனுக்கு இது முதல் போர், இராமனுக்கு திருமணத்திற்கு முன்பே நடந்த போர் இதுவாகும்.

இராமன் போரிட்டது ஐந்து பேருடன். இதில் கரனுடனும், விராதனுடனும் போரிடும்போது சீதை அருகில் இருந்தாள். தாடகையுடன் போரிடும்போது இராமனுக்கு திருமணம் நடக்கவில்லை. கும்பகருணன் மற்றும் இராவணனுடன் போரிடும்போது மனைவி பக்கத்திலில்லை.

விசுவாமித்திரருடன் இராமஇலக்குவர் சென்றனர். அவருடைய வேள்வியைக் காப்பதற்காகச் சென்றனர். அவர் செய்யக்கூடிய யாகத்திற்கு தாடகை ஊறு விளைவிக்கின்றாள். அவளைக் கொல்லும்படி முனிவர் கூறினார். இராமன் தாடகை பெண் என்பதால் தயங்கி நின்றான். முனிவர் இவள் பெண் அல்ல. இவளைக் கொல்வதில் தவறில்லை என்றார்.

இராமன் உள்ளத்தில் இருப்பதை அறிந்துகொண்ட முனிவர் "இவளைப் பெண் என்று நினைக்காதே ! இவள் பெரிய அரக்கி ! இப்படிப்பட்ட பெண்ணைக் கொல்வது தவறாகாது", மேலும் கேள், "பிருகு முனிவரின் மனைவி கியாதி என்பவள் அசுரர்களுக்கு

உதவியாக இருந்தாள், குமுதி என்ற கொடியவளை இந்திரன் கொன்றான். ஆகவே இவளைக் கொல்வது பாவமாகாது" என்றார். இராமன் ஒரு அம்பை அவள்மீது எய்தான். அம்பு தாடகையின் மார்பை துளைத்து மீண்டும் இராமனிடம் வந்தது. அதற்கு கம்பர் ஒரு நல்ல உதாரணம் தருகிறார்,

*கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது*
*அப்புறம் கழன்று, கல்லாப்*
*புல்லர்க்கு நல்லோர் சொன்னப்*
*பொருள்என போயிற்று அன்றே (388)*

என்கிறார் கம்பர்.

## விராதன் போர் :

தன் சிற்றன்னையின் வரத்தால் தந்தையின் வாய்மையைக் காக்க இராமன் கானகம் செல்கிறான். உடன் இலக்குவனும், சீதையும் செல்கின்றனர். மூவரையும் அத்திரி முனிவரும், அனுசுயையும் வரவேற்கின்றனர். அனுசுயை சீதைக்கு அணிகலன்களை அளிக்கிறார்.

மூவரும் தண்டகவனம் சென்றனர். ஆரண்யத்தில் முதன்முதலாக எதிரியைக் கொல்வது விராதனைத்தான். அவன் சீதையைக் கவர்ந்துகொள்ள நினைத்தான். இராமன் எதிர்த்தான். அவன் சீதையைவிட்டு விட்டு இராமனுடன் போர்செய்ய வந்தான். இருவருக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது.

பின்னர் விராதன் இராமஇலக்குவர்களை ஒரு கருடனைப்போல் ஆகாயத்தில் எடுத்துச் சென்றான். சீதை தவித்தாள். இராமன் விராதனின் தோள்களை வெட்டித்தள்ளி அவனைக் காலால் எற்றித் தள்ளினான். விராதன் சுய உரு பெற்றான்.

## கரன் போர் :

இராமன் இல்லாதபோது சூர்ப்பனகை சீதையைக் கவர்ந்து செல்ல முயன்றாள். இப்பொழுது இலக்குவன் வந்தான். சூர்ப்பனகையின் மூக்கு முதலியவற்றை அரிந்தான். அவள் அழுதுகொண்டே கரனிடம் சென்று சொன்னாள். கரன் வெகுண்டு எழுந்தான். அப்பொழுது அவனுடைய படைவீரர்கள் பதினான்கு பேர் "நாங்கள் சென்று வென்று வருகிறோம்" என்றனர். அவர்கள் இராமனுடன் போரிட்டு உயிர் துறந்தனர். அடுத்து திரிசிரனும், கரன் தம்பி தூடணனும், கரனுடன் போருக்கு வந்தனர்.

இப்படையின் எழுச்சி கண்ட இலக்குவன் போருக்கு எழுந்தான். போருக்கு தானே செல்வதாகக் கூறினான். அதற்கு இராமன், "நான்தான் அரக்கர்களை அழிப்பதாக

முனிவர்களுக்கு கூறினேன். நீ சீதைக்கு காவலாக இரு' என இலக்குவனிடம் கூறிவிட்டு போருக்கு புறப்பட்டான்.

இராமன், பர்ணசாலையிலிருந்து வெளியே வந்தான். கரனுடைய படைகளைப் பார்த்தான். அப்படைக்குள் சூர்ப்பனகையும் நின்று கொண்டிருந்தாள். இக்காட்சியைக் கம்பன் அருமையாக வர்ணிப்பான். "ஆகாயம் அளவு வளர்ந்த மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் உண்டாகும் நெருப்பு அம்மூங்கில்கள் அனைத்தையும் அழித்தலைப்போலத் தான் தொடர்புகொண்ட அரக்கர் குலம் முழுவதையும் அழிப்பதுபோல் சூர்ப்பணகை நின்றுகொண்டிருந்தாள்".

*வான் தொடர் மூங்கில் தந்த*
*வயங்கு வெம்தீஇது என்னத்*
*தான் தொடர் குலத்தை யெல்லாம்*
*தொலைக்குமா சமைத்து நின்றாள். (2940)*

என்கிறார் கம்பர்.

கரன்படை இராமனை வளைத்தது. சிங்கம் ஒன்றை யானைகள் வெகுண்டு நெருங்கினாற்போல் அரசர்க்கரசனான தசரதன் மகனை வளைத்தன. அரக்கர் படைகள் இராமனை வளைத்தபோது இராமனின் வில்லும் வளைந்தது. இராமனின் அம்புகளால் சூலம் அற்றன ; முப்படைகள் அற்றன ; வாள்கள் அறுபட்டன ; பிண்டிபாலம் அற்றன ; அம்புகளும் உடைந்தன ; வேலாயுதங்களும் அற்றன ; வில்லும் பல்லம் என்ற படையும் அற்றன.

இராகவனுடைய அம்புகள் கரன் படைகளைக் கொன்று மலைபோல் குவித்தன. கரன் படைகளும் இராமன்மேல் அம்புமாரி பொழிந்தன. கரன் மாயப்போர் புரிந்தான். இராமனை அம்புகளால் மறைத்தான். இராமன் சினந்தான். இப்பொழுதே கரனைக் கொல்வேன் என அம்பை வில்லில் பூட்டி இழுத்தான். வில் ஒடிந்துவிட்டது.

இராமன் தன் கையைப் பின்னால் நீட்டினான். அப்பொழுது வில் ஒன்று அவன் கைக்கு வந்தது. அந்த வில்லை வாங்கி கரனுடன் போரிட்டான். முதலில் கரனது வலக்கரத்தை துண்டித்தான். கடைசியாக ஒரு கணையால் கரனை வீழ்த்தினான். கரன் அழிந்தான். கரனின் அழிவு இராவணன் மரபு அழிவதற்கு ஒரு தொடக்கமாகும்.

*வரம் அரக்கன் படைத்தலின் மாயையின்*
*உரமுடைத் தன்மையால் உலகு ஏழையும்*
*பரம் முருக்கிய பாவத்தினால் வலக்*
*கரம்என, கரன் கண்டம் உற்றான் அரோ*

என்றும், இதற்குமுன் தாடகை இறந்து வீழ்ந்தபோது, "தலைகள் தோறும் முடியுடையரக்கற்கு அந்நாள் முந்துஉற்பாதமாகப் படியிடையற்று வீழ்ந்த வெற்றியம்பதாகை யொத்தாள்" (390) எனவும், சூர்ப்பனகையின் மூக்கு முதலியவற்றை இலக்குவன் நீக்கியதனைக் கூறுமிடத்து, "மூக்கினை நீக்கிய முறைமை மலை துமித்தன, இராவணன் மணி உடை மகுடம் தலை துமித்தற்கு நாட்கொண்டது ஒத்தது" (2827) எனவும் கூறினார். இங்கும் "அரக்கன் வலக்கரம் எனக் கரன் தண்டம் உற்றான்" என்கிறார்.

## ஜடாயு-இராவணன் போர் :

இராவணன் சீதையை அவள் இருந்த பர்ணசாலையோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு தேரில் இலங்கை நோக்கி சென்றான். வழியில் ஜடாயு சீதையை விடுவிக்கக் கருதி அவனைத் தடுத்து சண்டையிடுகிறான். ஜடாயுவின் போரை கம்பன் 21 பாடல்களால் விவரிக்கிறான். இராவணன் ஜடாயுவின் மீது அம்புகளை விடுகிறான். ஜடாயு அந்த அம்புகளில் சிலவற்றை சிறகுகளாலும், சிலவற்றைக் கால்களாலும் துண்டு துண்டாக்கினான்.

பல தலைகளையுடைய அனந்தன் என்னும் நாகத்தை வாடச் செய்யும் கருடனைப்போல் பத்து தலைகளை உடைய இராவணன் வாடுமாறு அவன்மேல் ஜடாயு பாய்ந்தான்.

*மீட்டும்அணுகா நெடுவெங்கன் அனந்த நாகம்*
*வாட்டும் கலுழன்என வன்தலை பத்தின்மீதும்*
*நீட்டும் நெடுமூக்கு எனும்நேமியன் சேமவில்கால*
*கோட்டும்அளவில் மணிக்குண்டாம் கொண்டு எழுந்தான் (3426)*

இராவணன் பத்து தலைகளுக்கும் அனந்தன் என்ற பாம்பு உவமை. அநந்தன் பல தலைகளை உடையது. எட்டு பெரிய பாம்புகளில் ஒன்று இது (மற்றைய பாம்புகள் வாசுகி, தக்கன், சங்கன், குறிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடன்). கடைசியாக இராவணன் பொன்மயமான தண்டாயுதத்தை எடுத்து ஜடாயுவை அடித்தான். ஜடாயு பெரியமலையைப்போல் மண்மேல் சாய்ந்தான். இராவணன் இலங்கை நோக்கிச் சென்றான்.

## கிட்கிந்தையின் யுத்தகளம் :

வாலிக்கும், சுக்கிரீவனுக்கும் போர் ! கடுமையான போர் ! வாலி சுக்கிரீவன் போரின்போது வாலி "தம்பியை எடுத்துப் பாரிடை எற்றுவென் பற்றி" என்று இளவல் கடித்தலத்தினும், கழுத்தினும் தன் இரு கரங்கள் மடுத்து, மீக்கொண்ட வாலிமேல் கோல் ஒன்று வாங்கித் தொடுத்து நாணொடு தோள் உறுத்து இராகவன் துரந்தான். இந்த அம்பு சென்ற

258



விதத்தைக் கம்பர்

*கார்உணர் கவைக்கதலியின் கனியினைக் கழியக்*
*சேரும் ஊசியின் சென்றது, நின்றது என்செய்ய?*
*நீரும்நீர்தரு நெருப்பும், வண்காற்றும், கீழ்நிவந்த*
*பாரும் சார்வலி படைத்தவன் உரத்தை அப்பகழி (4000)*

இருவருக்கும் கடுமையான உரையாடல் நிகழ்ந்தது. கடைசியில் வாலி தன் தவறை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு மண்ணில் சாய்கிறான். அவன் உயிர் பிரிகிறது.

அடுத்து களத்தினைக் காண இலங்கை செல்வோம் வாருங்கள்.

அனுமன் அசோகவனத்தை அழித்தான். அரக்கர்சேனை அனுமனுடன் போரிட்டு மடிந்தனர். அக்க குமாரன் வந்தான். அவனை போர்க்களத்தில் கண்ட அனுமன் “இந்திரனோ? இராவணனோ” என ஐயலுற்றான். அக்க குமாரன் அனுமனைக் கண்டு அலட்சியமாக பேசினான். அதற்கு அவன் சாரதி “அப்படி அலட்சியமாகப் பேசாதே, இராமனை எதிர்த்தது வாலி என்ற குரங்குதானே” என்றான். அக்க குமாரனுக்கும் அனுமனுக்கும் சண்டை நடக்கிறது. அரக்கர் சேனையை அனுமன் கலக்கினான். அனுமன் அழித்த படைகளின் குருதி ஆறாக ஓடியது. கடை தாழியில் உள்ள மத்துபோல அனுமன் அனைவரையும் கலக்கினான்.

*ஆழிப்பொருபடை நிருகப் பெருவலி*
*அடலோர் ஆய்மகள் அடுபேழ் வாய்த்கேழ்*
*தாழிப்படு தயிர் ஒத்தார் ; மாருதி*
*தனிமத்து என்பது ஓர்தகை ஆனான் ;*
*ஏழ் புவனமும் மிடைவாழ் உயிர்களும்*
*எறிவேல் இளையவர் இனம் ஆக*
*ஊழிப் பெயர்வது ஓர்புனல் ஒத்தார் : அனல்*
*ஒத்தான் ; மாருதம் ஒத்தானே ; (5697)*

போர்க்களம் தயிர்த் தாளியாகவும் அக்களத்தில் அகப்பட்ட அரக்க வீரர்கள் தாழியில் உள்ள தயிராகவும், அனுமன் அத்தயிரைக் கடையும் மத்தாகவும் உருவகப்படுத்தி உள்ளார். எஞ்சிய வீரர்கள் உயிர் தப்பினால் போதும் என்று ஓடினர். சிலர் மீனாகவும், சிலர் பசுவாகவும், சிலர் பறவையாகவும், சிலர் மங்கையராகவும் உருவெடுத்து உயிர்தப்பி ஓடினர். சிலர் செம்பட்டை முடிகளை கருஞ்சாயம் தோய்த்துக்கொண்டு “நாங்கள் அரக்கர் அல்ல” என்று ஓடினர்.

கலிங்கத்துப் பரணியில் ஒரு நிகழ்ச்சியை இங்கு நினைவுகூர்வோம்.

கலிங்கத்துக்கும், சோழநாட்டிற்கும் கடுமையான போர். சோழப்படைகள் கருணாகரத் தொண்டைமானின் தலைமையில் கலிங்கத்துக்குச் செல்கிறது. போரிடுகிறது. கருணாகரத் தொண்டைமான் முதற்குலோத்துங்கனின் அமைச்சன், படைத்தலைவன். அப்போரில் தப்பிய சிலர் மாறுவேடத்தில் ஓடி ஒளிகின்றனர். சிலர் தாங்கள் திகம்பரர் என்கின்றனர். சிலர் வேதியர் என்று சொல்லி தப்பிச் செல்கின்றனர் என்று பாடுவார் ஜெயங்கொண்டார்.

## கும்பகருணன் போர் :

முதல்நாள் போரில் இராவணன் அனைத்தையும் இழந்து நின்றான். இராமன் இராவணனைப் பார்த்து "இன்றுபோய் போர்க்கு நாளை வா !" என்றான். இராமனுக்கும் கும்பகருணனுக்கும் கடுமையான போர் ! கம்பன் எல்லாப் போர்களையும் விட கும்பகருணன் போர் செய்வதை மிகவும் சிறப்பாகப் பாடுகிறான். கும்பகருணனை இராமன் நிராயுதபாணியாக்கினான். அவனுடனிருந்த எல்லாப் படைகளும், படைக்கலங்களும் அழிக்கப்பட்டன. அப்பொழுது இராமன்.

*ஏதியோடு எதிர் பெருந்துணை இழந்தனை ;*
*எதிர் ஒரு தனி நின்றாய் ;*
*நீதியோனுடன் பிறந்தனை ஆதலின்*
*நின் உயிர் நினக்கு ஈவென்*
*போதியோ ? பின்றை வருதியோ ! அன்றுஎனின்*
*போர்புரிந்து இப்போதே*
*சாதியோ ! உனக்கு கூறுவது சொல்லுத்*
*சமைவுறத் தெரிந்து அம்மா ! (7594)*

என்று கும்பகர்ணனை பார்த்துக் கூறினான்.

கும்பகருணன் இராமனுடன் போரிட்டான். வலக்கையினால் பெரிய மலையை எடுத்து வீசினான். இராமன் அதனைப் பொடிப்பொடியாக்கினான். கும்பகருணன் வாளையும், கேடயத்தையும் கையில் எடுத்தான். இராமன் அக்கையை துண்டித்தான். கும்பகருணன் வாயினால் மலையைக் கௌவி எடுத்து வீசினான். உருண்டு சென்று பல குரங்குப்படைகளை அழித்தான். கும்பகருணன் போர்செய்வதை இராமன் பார்த்து ரசித்தான். இதனைக் கம்பன் "வள்ளலும் மலர்க்கரம் விதிர்ப்புற்றான்" என்பான்.

கும்பகருணனுக்கு இராமன்பால் பக்தி தோன்றியது. இராமனிடம் பல வரங்களை வேண்டிய கடைசியாக "தன்னுடைய கழுத்தை அறுத்து தலையைக் கடலில் கொண்டு சேர்ப்பாயாக" என்றான். இராமன் அவன் கேட்டபடியே செய்தான். பின்னர் இந்திரஜித் வந்து மாயப்போர் புரிகிறான். இலக்குவன் அம்பால் அழிகிறான். அடுத்து வந்த மூலப்படையும்

அழிகிறது. கடைசியில் இராவணன் போர்க்களம் வந்தான்.

## இராவணன் - இராமன் போர் :

இராமனும் இராவணனும் மும்முரமாகச் சண்டையிட்டனர். அது நல்வினையும், தீவினையும் ஒன்றையொன்று தாக்கிக்கொண்டதைப்போல இருந்ததாம். அவர்கள் இருவரும் போரிடுவது ஆதிசேடனும் கருடனும் போரிடுவதைப் போலவும், இரவும் பகலும் போரிடுவது போலவும், திருமாலும் சிவனும் போரிடுவது போலவும் இருந்ததாம். பின் விண்ணிலே போர் நடந்தது. இராவணன் மாயப்போர் புரிந்தான். இராமன் அறிவுக்கணை செலுத்தி அதை விலக்கினார். இராவணன் முத்தலைச் சூலத்தை இராமன்மேல் வீசினான். இராமன் அதையும் விலக்கினார்.

எஇராமன் கடைசியாக இராவணன் மீது நான்முகக் கணையைச் செலுத்தினார். அது இராவணனின் மார்பில் பாய்ந்தது. அவனுடைய உயிரை உண்டு அப்புறம் சென்றது.

*முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய*
*பெருந் தவமும் முதல்வன் முன்நாள்*
*எக் கோடியாராலும் வெலப்படாய்*
*எனக் கொடுத்த வரமும், ஏனைத்*
*திக்கோடும் உலகு அனைத்தும் செருக்கடந்த*
*புயவலியும் தின்று மார்பில்*
*புக்குஓடி உயிர் பருகி புறம்போயிற்று*
*இராகவன் தன்புனித வாளி.*

## முடிப்புரை :

இவ்வாறு கம்பன் பல போர்க்களங்களைக் காட்டி பலவிதமான போர்களையும் காட்டுகிறான். அதனை முழுவதும் படித்து இன்புறலாம்.

கம்ப இராமாயணத்தில் வரக்கூடிய **கதை மாந்தர்கள் எத்தனை பேர்** என்று உங்களுக்குத் தெரியுமா?

தெரியவில்லையெனில் தெரிந்துகொள்ளுங்கள்.

**மொத்தக் கதை மாந்தர்கள் 340 பேர்கள்**

ஆதாரம் : கம்பராமாயண பெயர்க் களஞ்சியம் –
தொகுப்பு கோ. செல்வம்

# தையல் சொல் கேளேல்

**தமிழ்மாமணி - பாவலர் மணி சித்தன், புதுவை**

கவிச்சக்கரவர்த்தி கம்பர் எழுதிய இராமாயணம் "அறிவுடை மாந்தர்க்கெல்லாம் அமிழ்தம் ஒத்து இருக்கும்" என்றார் ஒரு புலவர். இராமாயணம் இராமனின் கதை.

வால்மீகி முனிவர் இது "சீதையின் பெருங்கதை" என்றார். (சீதாயாச் சரிதம் மகத் – என்று) முதல் நூலில் சொல்லப்பட்டதைத் தம் அவையடக்கத்தில் கம்பர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை" என்று. மாக்கதை – திருமகளின் கதை, தோம் – குற்றம் : அறு – அற்ற : மா – திருமகள் – கதை – காப்பியம். (மா– திருமகள் ; அழகு ; செல்வம் ; தாய் எனப் பலபொருள் குறிக்கும் ஓர் எழுத்து)

கம்பர், முனிவரின் கருத்தை ஏற்றுப் போற்றியுள்ளார். எனவே இது ஒரு பெண்ணின் கதை என்றாகிறது.

கம்ப நாடகத்தைத் தொடங்கி நடத்தியவர்கள் நான்கு பெண்கள் தாம். மற்றவர்களுக்கு இரண்டாவது இடமே என்று கூறின் பிழையாகாது என்று நினைக்கின்றேன்.

இராமன் மணிமுடி சூடியபின் நாட்டை ஆள்வான் எனில் இராமாவதாரம் எதற்கு? இராவணனை வெல்வதற்காக : இதை நாரணன் விளையாட்டென்றார் தனியனில். இனி அவதார நேக்கம் நிறைவேற வேண்டும். அதை நிறைவேற்றியவர்கள் பெண்களே !

இராம நாடகம் இராவண வதத்துடன் முடியவேண்டும். அதற்கு இலங்கை செல்லவேண்டும். அரசு கட்டில் ஏறிய இராமனை இலங்கைக்கு அனுப்பவேண்டும். அதற்கு அடிகோலியவள் கூனியே !

உறங்கும் கைகேயியை "பேர் இடர் வந்தது உறக்கம் தவிர்" என்று கூறி எழுப்பி

*"வீழ்ந்தது நின் நலம் : திருவும் வீழ்ந்தது*
*வாழ்ந்தனள் கோசலை மதியினால்.......என்றாள் கூனி !*

(அயோ – மந்தரை – 56)

கூனியின் செயல் சரியா?

*"பண்டை நாள் இராகவன் பாணியில் உமிழ்*
*உண்டை உண்டதனைத் தன் உள்ளத்து உன்னினாள்"* : பழிக்குப் பழி :
"உண்டை - உண்டையில்"

அதனால் கைகேயியின் நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டாள்.

*இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ?* என்று பேசிய கைகேயியைக் கூனி மனம் மாறச் செய்தாள். அதனால்

*"நல் அருள் துறந்தனள் தூமொழி மடமான்"* தன்னைக் காண வந்த இராமனிடம் கைகேயி.

*"ஆழிசூழ் உலகை பரதன் ஆள, நீ பூழிவெங்கானம் நண்ணிப்*
*புண்ணியத்துறைகள் ஆடிஏழ் இரண்டு ஆண்டின்வா"*
*என்று அரசன் இயம்பினன்"* என்றாள்.

அவ்வுரை கேட்ட இராமன் வந்த வேலைக்கு வழி திறந்தது என்று மகிழ்ந்தான்.

*"மின் ஒளிர் கானம் இன்றே போகின்றேன்"* என்று கூறி விடைகொண்டான்.

இராமனின் அவதார நோக்கம் நிறைவேறத் தொடக்கவிழா நடத்தியவள் கூனி : அதற்கு அடிப்படை அமைத்தவள் கைகேயி !

அடுத்தவள் சீதை.

இராமபிரான், சீதையிருக்குமிடத்தைச் சேர்ந்து. "என் தம்பி புவி காப்பான் ; நான் வனம் போய் வருவேன் ; நீ வருந்தாதே" என்றான். சீதை – இக்கொடிய சொல் காதைச் சுட வருந்துவாளாயினாள். "தானும் உடன் வருவேன்" என்றாள். "கானகம் – அரக்கின் உருக்குப் போல் வெப்பமானது. உன் செம்பஞ் சூட்டிய சேவடிகள் தாங்கும் தன்மையானவை அல்ல" என்றான்.

அப்பெரிய காடு நின் பிரிவினுஞ் சுடுமோ? என்றாள் சீதை. இங்குக் கவிக் கூற்றாகக் கம்பர் தரும் செய்தி ; "அறத்தை நிலை நிறுத்தும் பொருட்டுத் திருப்பாற் கடலிலிருந்து வந்து திருமால் இராமனாகத் திருவவதரித்தபோது அவனைவிட்டுப் பிரியாதிருக்கவேண்டு மென்னுங் கருத்தினாலேயே தான் சீதையாகத் திருவவதரித்த திருமகள் – "உன்னைவிட்டுப் பிரிந்து போவேன்" என்று கூறிய சொல்லுக்கு ஆற்றுவனோ? என்பது.

*"துறந்து போம்" எனச் சொன்ன சொல் தேறுமோ?*
*உறைந்த பாற்கடல் சேக்கை உடன் ஒரீஇ*
*அறம் திறம்பும் என்று ஐயன் அயோத்தியில்*
*பிறந்த பின்பும், பிரியலள் ஆயினாள்"*

*(அயோ - நகர் - 219)*

அவ்வளவில் சீதை மரவுரி புனைந்து இராமன் அருகில் வந்து கரம் பற்றி நின்றாள். இனி, சீதையின் கதை ; நகர் நீங்குபடலம். சூர்ப்பணகை வருகை.

இராமன் இருந்த இடத்துக்கு சூர்ப்பணகை வருகிறாள். இராமனைக் காண்கிறாள். "கற்றைச் சடைமுடி கண்ணுதல் கண்ணில் பட்டு மன்மதன் இற்றனன். அவன் மீண்டும் தவம் புரிந்து நல்லுருப் பெற்றனன் போலும்" என்று இராமன் பேரழகில் தோய்கிறாள்.

*"தோன்றல்தன் சுடர்மணித் தோளில் நாட்டங்கள் ஊன்றினள்"*

*"இருந்தவன் நெடிய மார்பகம் ஒன்றுவென்*
*அன்று எனின் அமுதம் உண்ணினும் பொன்றுவன்"*

என்று காமவெறிமிக முடிவு செய்கிறாள்.

தன் உருவை மாற்றி – வஞ்சமகள் அழகியாக இராமன் முன் சென்றாள். மோகவெறியில் புலம்பினாள். இராமனும் இலக்குவனும் அவள் மாயம் உணர்ந்தனர். சூர்ப்பணகை தன் பகையாகச் சீதையைக் காண்கிறாள். அவளைப் பிரிக்க எண்ணுகிறாள். சீதையைத் தூக்கிச் செல்ல முயல்கிறாள். இலக்குவன் சினந்து உறுப்புக்களை அறுக்க அவள் அவர்களை அச்சுறுத்தி அகல்கிறாள் ; அழுதுபுலம்பி இலங்கை சென்றாள் ; இராவணனிடம் சீதையின் அழகை விரித்துரைத்து அவனைக் காமுகனாக ஆக்கினாள். அதன் விளைவே இராவணன் பன்னசாலையோடு எடுத்துத் தன்தேரில் சீதையை வைத்து – இலங்கை சென்று சிறை வைத்தான். இனி – சீதையின் தவம்.

இந்த நான்கு பெண்களும் இராம நாடகத்தின் வேராக விளங்கியவர்கள். கதையை முடித்து வைக்கின்றனர்.

இனி இராமன் தந்தை உரையைப் போற்றக் கானகத்துக்கு வந்த நிலையில் சூர்ப்பணகை அப்பெருமானிடம் காதல் கொண்டு முறையற்ற செயல்களைச் செய்து, அதனால் அங்க பங்கஞ் செய்யப் பெற்று இலங்கை சென்று இராவணனிடம் சீதையின் அழகைப் புகழ்ந்து கூறிக் காதலை மூட்டினள். அதனால் அவன் கற்பரசியான சீதையைக் சிறையிட்டான். அதன் விளைவே அவன் வதத்திற்குக் காரணமாயிற்று. அவன் முடிவு தேவர்கட்கு நன்மை விளைவித்தது. இது மண்டோதரியின் புலம்பல்.

*"காந்தையருக்கு அணி அனைய சானகியார்*
*பேர் அழகும் அவர்தம் கற்பும்*
*ஏந்து புயத்து இராவணனார் காதலும் அச்*
*சூர்ப்பணகை இழந்த மூக்கும்*
*வேந்தர் பிரான் தயரதனார் பணியதனால்*
*வெங்கானில் விரதம் பூண்டு*
*போந்ததுவும் ................................"* (இரா – வதை – 239)

இராவண வதத்திற்குக் காரணமாயிற்றென்பது மண்டோதரியின் கணிப்பு.

இனி, தையல் சொல் கேளேல் : இந்தப் பழமொழிக்குப் "பெண்களின் பேச்சைக் கேட்காதீர்கள்" என்று பொருள் சொன்னவர் உளர். பழமொழியைத் தந்தவர் ஔவைப் பிராட்டியன்றோ? அவர் இப்படிச் சிந்தித்திருப்பாரா?

பழமொழியின் உண்மைப் பொருள் : தையல் = பெண் :
சொல்கேள் = சொல்வதைக் கேள். ஏல் = அங்கீகரி.
(ஒப்புக் கொள் என்பதே) (தையல் சொல் + கேள் + ஏல்)

கூனியின் சொல்லைக் கைகேயி ஏற்றாள்.
கைகேயின் சொல்லை இராமன் ஒப்புக்கொண்டான்.
சீதையின் பேச்சை அங்கீகரித்து இராமன் காட்டிற்கு அழைத்துச் சென்றான்.

சூர்ப்பணகையின் பேச்சைக் கேட்டு இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான்.
இராம காதையின் அடிப்படை இந்நான்கு பெண்களால் அமைக்கப்பட்டதே !

---

இனி தையல் சொல் கேளாதவர் முடிவு என்னாயிற்று ?
வாலி தன் தம்பி சுக்கிரீவன் மனைவி உருமையைக் கவர்ந்தான்.
நீதி கேட்க வந்த சுக்கிரீவனைத் தன் ஆட்சிக் குட்பட்ட நிலத்திலிருந்தே விரட்டினான்.

சுக்கிரீவனுக்கு அனுமன் உதவியால் இராமபிரான் நட்பு கிடைக்கிறது. இராமன், அனுமன், சுக்கிரீவன் மூவரும் பேசி எடுத்த முடிவின்படி வாலியைச் சுக்கிரீவன் போருக்கழைத்தான். வாலி சினந்து போருக்கெழுந்தான்.

அப்போது வாலியின் மனைவி தாரை அவனைத் தடுத்து, "கொற்றவா, சுக்கிரீவன் உம் வலிமைக்கு அஞ்சி ஓடியவன். இன்று "பெயர்த்தும் போர் செயற்கு உற்றது நெடுந்துணை உடைமையால்".

"ஆயவற்கு இன் உயிர் நட்பு அமைந்து இராமன் என்பவன் உன்உயிர் கோடலுக்கு உடன் வந்தான்" என்றாள். அவள் பேச்சைக் கேட்டுச் சினமடைந்த வாலி.

*"...............இயல்பு அல இயம்பி என் செய்தாய்?*
*பிழைத்தனை பாவி. உன் பெண்மையால்*

என்று தாரையைக் கடிந்துரைத்துச் சென்று இராமன் அம்புக்கு இரையாகி வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான்.

தையல்சொல் கேளாததன் விளைவே வாலியின் முடிவுக்குக் காரணமாயிற்று.

மற்றொரு நிகழ்ச்சி : இராமனுடன் நடந்த இறுதிப் போரில் இராவணன் உயிர் துறந்தான். அப்போது மண்டோதரி சொல்லி அழுததைக் கம்பரில் காண்கிறோம் :

*"அன்னையவள் சீதை அனைத்துலகும் ஈன்றாள்" என்று*
*உன்னி உரைத்தேன்(என்) உரைகேளாது உத்தமனே !*
*பின்னை இராமன் சரத்தால் பிளப்புண்டாய்".*

என்று. "ஆராவமுதாய் அலைகடலில் கண்துயிலும் நாராயணன் என்றிருப்பேன் இராமனைநான்" என்று பேசியவளன்றோ அவள்.

மண்டோதரியின் சொல்லை இராவணன் ஏற்றான் அல்லன். அதனால் அவன் வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும் மண்மகளைத் தழுவின. "எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை காண்" என்பது பாரதி வாக்கு :

---

இனி, இந்தப் பழமொழிக்கு வேறு பொருளும் காணலாம்.

தையல் = தைத்தல் – தையல்சொல் = நெஞ்சில் தைக்கும் கடுஞ்சொல். நம்மைச் சுடுசொற்களால் இகழ்ந்து ஒருவர் பேசினால் ஓரளவே பொறுக்கலாம். மீறினால் பதிலடி தரவேண்டும்.

சிசுபாலன் கண்ணனைப் பார்க்கும்போதெல்லாம் இகழ்ந்து பேசினான். கண்ணன் – சிசுபாலன் தாயிடம் முறையிட அவள் நூறு முறை பொறுத்துக்கொள்ளக் கண்ணனைக் கேட்டுக்கொண்டாள்.

நூறு முறை கடந்தும் இகழ்ந்தான் சிசுபாலன். உறவையும் கருதாது தன் கையிலிருந்த சக்கரத்தால் சிசுபாலன் தலையைக் கண்ணன் கொய்தான். "தையல் சொல்கேளேல்" எனும் இப்பழமொழிக்கு உரிய பொருளாக இதனையும் கொள்ளலாம்.

---

"காராளும் மேனி கருணாகர மூர்த்திக்கு
ஆராதனை என் அறியாமை ஒன்றுமே !"

# கவிதா தீபம்

வி.ஆர்.எம். செட்டியார், பி.ஏ.

(1941–ல் காரைக்குடி கம்பன் திருநாளில் ஆற்றிய உரை)

கம்பர் ஒரு கவிதா தீபம். அவர் மகா கவிகளில் ஒருவர். அவர் கவி மிகவும் சிறப்பு வாய்ந்தது. அவர் உண்மைக் கவிதையை உணர்ந்தவர். உண்மைக்கவிதை யாது? அழகுதான் கவிதை ; உண்மைதான் கவிதை ; வெறும் வார்த்தைகள் கவிதையல்ல. அழகையும் உண்மையையும் ஆராதிப்பவனே உண்மைக் கவி.

அழகுச் சுடர், ஒரு கவியின் சன்னதம் நிறைந்த அகக்கண்ணில், ஒளிபரப்பி ஒசை வடிவமாகின்றது. கவி ஹிருதயம் தனிப்பட்ட பண்புடையது. கவியின் கண்ணுக்குத் தோன்றும் காட்சியெல்லாம் அற்புதங்களாய் அமைகின்றன. ஒரு பறவையை எடுத்துக்கொள்ளுவோம். கவியினுடைய கண்ணுக்கு அது பல தோற்றங்களை அளிக்கிறது. அது ஜிவ்வென்று சிறகடித்து, விண்ணிற் பறக்கும்போது, சிறகற்ற மனிதனைக் கண்டு நகைப்பதுபோலத் தோன்றுகிறது. என்ன அழகு! அஸ்தமிக்கும் சூரியன் கொலைக்களமாக உலகத்தைச் சித்திரிக்கின்றான். சந்திரிகை, காதலைக் கிளறி, உணர்ச்சிக் கடலின் கொந்தளிப்பை வளர்க்கின்றது. இரவு, மௌன விழாவைக் கொண்டாடுகிறது. நட்சத்திரங்கள் ஒரு கவியின் உள்ளத்திற்புகுந்து ஜோதிச் சுடர் வீசி சொற் சித்திரங்களாக வந்து குவிகின்றன. கவி ஹிருதயம் இயற்கையைப் படமாகப் பிடிக்கிறது.

கம்பனிலிருந்து ஒரு கற்பனைச் சித்திரத்தை, இயற்கைக் காட்சியை எடுத்துக் கொள்ளுவோம். இராமன் முடிசூட்டு விழாவை அலங்கரிப்பதற்கு, ஆகாய வீதியில் நட்சத்திரக் கூட்டங்கள் அழகிய பந்தர்போல் அமைந்து மின்னிப் பொழிந்தன. ஆனால், கொடிய கைகேசியின் தடையால் விழா நின்றதும், விழாவுக்குப் போட்ட பந்தரைப் பிரித்ததுபோல் நட்சத்திரங்கள் வானில் மறைந்து ஒழிந்தன.

*'விரித்த பந்தர் பிரித்த தாமென*
*மீனொ ளித்தன வானமே"*

இது கம்பரின் அற்புத வாக்கு. என்ன கற்பனை ! எவ்வளவு அழகிய சித்திரம் ! எப்படி இன்பமும் துன்பமும் கலந்து காட்சியளிக்கின்றன? சிந்தியுங்கள்.

காதற்கனலால் உருகி வாடித் தயங்கி நிற்கும் சீதையின் உள்ளத்தில் அந்தி மாலை எழுப்பும் சிந்தனைக் கடலை ஆழ்ந்து நோக்குங்கள். அவள் மனக்குழப்பத்தைப் பாருங்கள். கவி எப்படி வருணிக்கிறார் ? "ஆஹா ! என்ன இருட்டு ! 'கருங்கும்' என்று இருக்கிறது.

விஷம் தான் இப்படிக் கருமை நிறத்துடன் வந்திருக்கிறதோ ? அல்லது நீலக்கடல்தான் இங்கு நீண்டு வந்ததோ? இராமன் நீல நிறமே இவ்விருளாய்ப் போந்ததோ? காலன் நிறந்தான் இதுவாய்ச் சமைந்ததோ? என்னே ! என் மனத்தைத் துன்புறுத்தும் இவ்விருளை எப்படி வருணிப்பது? தொலையாத இவ்விருள் விடமாகவும் கூற்றாகவும் தோன்றி என் உயிரை மாய்க்கின்றதே ! இராமன் நிறத்தை நினைவூட்டி வருத்துகின்றதே' என்று சோர்வுக் கடலில் மூழ்குகிறாள் :

*"ஆலம் உலகிற் பரந்ததுவோ ?*
*ஆழி கிளர்ந்த தோ? அவர் தம்*
*நீல நிறத்தை எல்லாரும்*
*நினைக்க அதுவாய் நிரம்பியதோ?*
*காலன் நிறத்தை அஞ்சனத்திற்*
*கலந்து குழைத்து ஆகாயத்தின்*
*மேலும் நிலத்தும் மெழுகியதோ ?*
*விளங்கும் இருளாய் விளைந்ததுவே !"*

இந்தக் கவி ஒரு சித்திர ரூபமாகக் காட்சியளிக்கிறதல்லவா? படிக்கும்போது படம் எழுதவேண்டுமென்ற நினைப்பு வருகிறது. ஆனால் ஐயோ ! என்று எழுதுகோல் சாய்கிறது! எந்த ஓவியக்காரனும் எழுத முடியாதென்பது தெரிகிறது.

பொங்கும் இருளும், பொலியும் சந்திரனும், சீதையின் காதல்தீ நிறைந்த உள்ளத்தை எப்படி வாட்டுகின்றன பாருங்கள் ! கம்பன் பாஷையில் இருள் கருநெருப்பாகிறது ; சந்திரிகை வெண்ணெருப்பாகிறது. என்ன மாற்றம் ! என்ன உணர்ச்சி !

*"ஓங்கா நின்ற இருளாய்வந்து*
*உலகை விழுங்கி மென்மேலும்*
*வீங்கா நின்ற கருநெருப்பி*
*னிடையே எழுந்த வெண்ணெருப்பே."*

இது ஓர் அபூர்வமான வாக்காகும். (Rare expression.)

கவியும் ஓசையும் இணைப்புடையவை ; ஓசையுடைந்தால் கவி உடையும் ; சொற்கள் சிதறும்போது எண்ணங்கள் சிதறும் ; சொற்களின் ரீங்காரத்தின்போது எண்ணங்கள் பாடும்; இசை ததும்பும். யுத்த காண்டத்தில் மூலவதைப் படலத்திலுள்ள ஒரு கவியைப் பார்ப்போம்.

"படுமத கரி, பரி சிந்தின ;
பனிவரை இரதம விந்தன ;
விடுதிசை செவிடு பிளந்தன ;
விரிகடல் அளற தெழுந்தன ;
அடுபுலி அவுணர்தம் மங்கையர்
அவர்விழி அருவிகள் சிந்தின ;
கடுமணி நெடிய எனும்சிலை
கண, கண, கண, கணெனும்தொறும்"

இக்கவியில் இசை துள்ளிக் குதிக்கிறது ; தாள அறுதி தெரிகிறது. யானை விழுகிறது ; குதிரை சாய்கிறது ; இரதம் ஒடிகிறது ; யாவும் தவிடு பொடியாகின்றன ! எங்கும் பேரொலி ! எங்கும் இரத்தப் பெருக்கு ! எதிரிகள் யாவரும் மடிகின்றனர். அவர்தம் மங்கையர் அழுது கண்ணீர் வடிக்கின்றனர். சிலை நாண் 'கண கண' என்ற சப்தத்தோடு சப்திக்கும், ஒவ்வொரு க்ஷணமும் எங்கும் துடிதுடிப்பு, பரபரப்பு, கூக்குரல், அழுகை, அழுகை ! கம்பன் சொற்கள் எப்படி வேகமாய்ப் பாய்கின்றன, பாருங்கள் ! இதுவல்லவா அமர்க்களம் ! நல்ல சொற்போர் ! இதற்கிணையாக எந்தக் கவியை ஒப்பிட முடியும்? இப்பாட்டில் கம்பர் மொழி உயருகின்றது ; பாஷை இடிக்கின்றது, நகைக்கின்றது, மின்னுகின்றது ; உலகத்தைச் சொல்லின் மின்சாரத்தில் நடுங்கச் செய்கின்றது. இவைதாம் மின் மொழிகள். இந்தக் 'கணகண' எனும் ஓசையைப்போல் ஷேக்ஸ்பியர் சொல் முழக்கம் ஒன்று நினைவுக்கு வருகிறது. 'மாக்பெத்' நாடகத்தில் மூன்று மந்திரவாதப் பெண்கள் பல ஜீவராசிகளைச் சோதித்துக் கொப்பரையில் காய்ச்சும்போது, ஒலிக்கும் ஓசையைப் பாருங்கள் ;

"Double, double, toil and trouble ;
Fire burn, and cauldron bublle."

சீதையைக் காணாது இராமன் மனம் சுழன்ற நிலையைக் கவனியுங்கள் ; இது ஒரு விசித்திரம்.

"மண் சுழன்றது ; மால்வரை சுழன்றது ; மதியோ(டு)
எண் சுழன்றது ; சுழன்றது அவ்வெறி கடலேழும்
விண்சுழன்றது ; வேதம் சுழன்றது ; விரிஞ்சன்
கண்சுழன்றது ; சுழன்றது கதிரொடு மதியும்"

எங்கும் சுழற்சி, எல்லாம் சுழற்சி ! கவியே சுழல்கின்றது ! நாமும் சுழல்கின்றோம், நம் மனமும் சுழல்கின்றது. ஒரு சன்னதக் கவியின் மின்னல் மொழி "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் போன்றது." கம்பர் இயற்கையின் இதயத்தில் ஆழ்ந்து உறங்கி விழித்துக் கவிதை வருஷிக்கும் மன மோகன மின்னற்கவி, சொற்கள், இதயத்தின் தங்கக் குகையினின்று சுடர் வீசிக்கொண்டு பவனி வருகின்றன.

மகா கவிகளுடைய திறன்களெல்லாம் கம்பனில் பிரதிபலிக்கின்றன. ஷேக்ஸ்பியரின் நாடகச் சுவையும், மில்டனின் காம்பீரியமும், பைரனின் விறுவிறுப்பும், கீட்ஸின் சிற்பநடையும், டெனிசனின் இசையோவியமும், ஷெல்லியின் ஓடைநடையும், வோர்ட்ஸ்வொர்த்தின் சுடர் நடையும், ஹோமரின் வீரச்சுவையும், வர்ஜில் தாந்தேயின் அருளினிமையும் கம்பனில் கலந்து இலங்குகின்றன. கம்பன்போல் எல்லா ஆற்றலையும் ஒருங்கே காண்கின்றோம்.

ஷேக்ஸ்பியர் தமது நாடகப் பாத்திரங்களின் உள்ளத்தை நன்கு அளந்து உணர்ச்சி விந்தைகளை நன்றாய் வெளிப்படுத்தியிருக்கின்றார். "As You Like it" என்ற நாடகத்தில் காதற்பித்தேறிய ஆர்லண்டோ, தன் காதலி ரோசலிண்டின் பேரைக் காட்டு மரங்களின் பச்சை முதுகில் பொறித்து வைக்கிறான் ; அதே நினைவாயிருக்கிறான். பிரிவாற்றாமையாற் பாடிய காதற்பாக்களைச் செடிகளில் சுட்டகிறான். ஏன் என்பதை எண்ணவே இல்லை ; இது காதல் மயக்கத்தின் முடிவு. செடியும் கொடியும் மரமும் இவனுக்கு என்ன துணை செய்யும் என்பதை இவன் கருதவேயில்லை. ஆனால், காதல் ஜெயம்தான் அவன் மனத்தில் ஊறித் ததும்புகிறது. ரோசலிண்டு காதற்பெருக்கிற் சிக்குண்ட உள்ளத்துடன் சொல்லுகின்றாள் : "There is a man haunts the forest, that abuses our young plants with carving Rosalind on their barks ; hangs odes upon hawthorns, and elegies on brambles ; all, forsooth, deifying the name of Rosalind : if I could meet that fancy-monger, I would give him some good counsel, for he seems to have the quotidian of love upon him."

சீதையைத் தேடி ராமன் செல்லும்போது அவள் பிரிவாற்றாமை கருதி உருகிப்பேசும் ஒரு இடத்தை இங்கு ஒப்பு நோக்குவோம். ஒரு பொய்கையைப் பார்த்து, 'ஏ, பொய்கையே ! சீதை முகம்போலும் தாமரையையும், கண் போலும் குவளையையும் காட்டி என் மன வருத்தத்தை ஓர் அளவு மாற்றும் நீ, ஏன் வடிவம் முழுதும் காட்டக்கூடாது?' என்று தன் பிரிவைப் பொய்கையின்பாற்புகுத்தி, மலர்களால் சிறிது மாற்றிக்கொள்ளுகிறான் :

*"வண்ண நறுந்தா மரைமலரும்*
*வாசக் குவளை நாண்மலரும்*
*புண்ணி னெரியு மொருநெஞ்சம்*
*பொதியு மருந்திற் றரும்பொய்காய்*
*கண்ணு முகமுங் காட்டுவாய்*
*வடிவு மொருகாற் காட்டாயோ*
*ஒண்ணு மென்னின் அஃதுதவாது*
*உலோவி னாரு முயர்ந்தாரோ."*

பிறகு மயிலோடு பேசுகிறான் : 'ஏ மயிலே, உன் ஓட்டத்தின் பொருளும் ஆட்டத்தின் அர்த்தமும் எனக்கு நன்றாகத் தெரியும். சீதையின் சாயலுக்குத் தோற்றுப்போன நீ,

இப்பொழுது பழிக்குப்பழி வாங்கியது போல் அல்லவா, அவள் பரிதாபமான பிரிவைக் கண்டு சந்தோஷம் கொண்டாடுகின்றாய். ஆயிரங் கண்ணுடைய நீ, அதை ஒளிக்க முடியுமா? சொல். இப்பொழுதுதான் உனது உடல் குளிர்ந்தது போலும்! சீதை போன வழி தெரிந்துதான் என்னைப் பார்த்து மனமுவந்து ஆடுகிறாய்' எனத் தன் துயரத்தை மயிலோடு பொருத்தி மனமயங்குவது எவ்வளவு ருசியாயிருக்கிறது.

*"ஓடா நின்ற, களிமயிலே*
*சாயற் கொதுங்கி உள்ளழிந்து*
*கூடா தாரிற் றிரிகின்ற*
*நீயு மாகங் குளிர்ந்தாயோ*
*தேடா நின்ற வென்னுயிரைத்*
*தெரியக் கண்டாய் சிந்தையுவந்*
*தாடா நின்றா யாயிரங்கண்*
*ணுடையாய்க் கொளிக்கு மாறுண்டோ?"*

ஷேக்ஸ்பியரின் ரோமியோ – ஜூலியட் (Romeo and Juliet) நாடகத்தில், ரோமியோ ஜூலியட்டைப் பார்க்கும்போது, 'ஆ, அந்த ஜன்னலின் வழியே வரும் ஒளி, என்னே, என்னே! கீழ்த்திசை, கீழ்த்திசை ! ஆம், ஆம் ; உதயசூரியன், உதயசூரியன் ! ஓஹோ ! ஜூலியட், ஜூலியட்! என்று அப்பெண்ணின் வருகையை சூரியோதயத்திற்கு ஒப்பிடுகின்றார்.

"But soft, what light through yonder window breaks?
It is the East, and Juliet is the Sun."

கம்பன், 'சாளரந்தோறும் தோன்றும் சந்திர உதயங்கண்டார்,' என்று கூறுவது இதனுடன் ஒப்பு நோக்கற்பாலது ; மாதர்களுடைய முகங்கள் ஜன்னல்களின் வழியே சந்திரன் போல் மலர்ந்தன என்பது ஒப்பு.

இயற்கை, அறிவூட்டும் ஆற்றலுடையது என்பதை ஷேக்ஸ்பியரும் கம்பரும் அடிக்கடி அனுபவித்து வற்புறுத்துகிறார்கள்.

ஷேக்ஸ்பியர், 'மரம் பேசுகிறது ; கல் உபதேசிக்கிறது ; ஓடையும் ஒரு நூல்,' என்று கூறுகிறார்.

"Finds tongues in trees, books in the running brooks,
Sermons in stones, and good in everything."
(As You Like it.) Act. 2, Sc.I

இயற்கையின் மொழியில், கவலை மாறி உண்மையின் ஒளியால் உள்ளம் பூரித்து உயர்கிறது.

கம்பர், சீதையின் அழகைக் கண்டு, 'கல் உருகுகிறது, புல் கசிகிறது, குன்றும் கனிகிறது' என்று கூறி அவைகளுக்கு உயிரும் உணர்வும் ஊட்டிவிடுகிறார். கம்பரின் சரயு நதி, ஜீவநதியாகவும் நீதிச் சுரங்கமாகவும் தாய்ப்பாலாகவும் அமைகிறது.

அமுதிற்கோல் தோய்த்து அவயம் அமைக்குந் தன்மையறியாது திகைக்கும் மதனற்கும் எழுதவொண்ணாச் சித்திரத்தைக் கம்பன் புகழ்வதுபோல், ஷேக்ஸ்பியரும் 'ஒதெல்லோ' நாடகத்தில் டெஸ்டிமோனாவின் (Desdemona) அழகை அருமையாக அமைக்கின்றார் ;

".... ..... ..... ..... a maid
That paragons description and wild fame ;
One that excels the quirks of blazoning pens,
And in the essential vesture of creation
Does tire the ingener."

புகழ் மண்டிய நிகரற்ற டெஸ்டிமோனாவின் அழகைச் சிருஷ்டித்த சக்தியே, அழகு சமைக்கும் விந்தையில் ஈடுபட்டுச் சோர்வடைந்தது என்று ஷேக்ஸ்பியர் கூறுவது ஒப்பு. டெஸ்டிமோனாவின் பேரிலே, ஓர் ஓசையின்பம் உயிரைத் தழுவி ஓடுகின்றது.

ஒரு மகா கவி ஜீவநதி போன்றவன் ; உலகத்தை உள்ளடக்கிய மாமுனி ; அவனே தீர்க்கதரிசி ; சௌந்தரிய ஞானி. கம்பன் கோதாவரி எனக் கிடந்த கவியாகிப் பிரகாசிக்கின்றான். கம்பன் தமிழுக்குச் செய்த உதவி மிகப் பெரியதாகும். மேல் நாட்டில் ஷேக்ஸ்பியர் பழைய கவிகளை நன்கு கற்று அவர்களுடைய காவிய இரத்தத்தில் ஊறி உறங்கி விழித்தார். புதுக்கவி தோன்றிற்று. அதுபோல் கம்பனும் நம் நாட்டில் பழைய இலக்கியங்கள் பலவற்றையும் பருகிப் புது இலக்கிய மறுமலர்ச்சியை உண்டாக்கினான். கம்பன் காவியம் ஓர் உணர்ச்சி கோபுரம் ; அக்கோபுரத்தில் கவிதா தீபம் ஜ்வலிக்கிறது ; சௌந்தரிய தேவதை தாண்டவமாடுகிறாள்.

கம்பர் எந்த ஜாதியாய் இருந்தாலும் நமக்குக் கவலையில்லை. உலகில் தலைசிறந்த ஜாதியைச் சேர்ந்தவர் அவர் என்பது உண்மை. அதாவது **கவிச்சக்கரவர்த்தி – ஜாதி.** காளிதாசன், தாகூர், ஷேக்ஸ்பியர், ஹோமர் – இவர்களுடைய ஜாதிதான் – கம்பர் ஜாதி. இதற்கு மேலான ஜாதி இருக்கமுடியாது.

– ரசிகமணி டி.கே.சி.

# கம்பனும் துளசியும்

கா.ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார்

(1941–ல் காரைக்குடி கம்பன் திருநாளில் ஆற்றிய உரை)

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' – என்னும் பொருள் நிரம்பிய மங்கல மதுரத் திருவாக்குடன் கம்பனின் இராம கதை ஆரம்பமாகிறது. பிரம்ம சூத்திர உரை ஆசிரியரான ஸ்ரீராமாநுஜாசாரியரின் ஸ்ரீபாஷ்ய மங்களா சரணம் சொல்லிலும் கருத்திலும் இச்செய்யுளை முற்றும் ஒத்திருக்கிறது. துளசிதாஸர் தமது ராம சரித மானஸத்தைப் பலவகைப் புராணங்கள், வேதங்கள், ஆகமங்கள் ஆகியவைகளுக்குச் சம்மதமானது என்கிறார். அவருடைய ராமாயணம் ஒரு பெரிய மத நூல். இதன் முன்னுரையைப் படிப்பதிலே நாம் பல பக்கங்களைத் தாண்டிவிடுகிறோம். பல கிளைக் கதைகளும், உலக தர்மங்களும், பரந்த நீதி வாக்கியங்களும், இயற்கை வருணனைகளும், ஒழுக்க முறைகளைப்பற்றிய உபதேசங்களும், பக்தி வெள்ளமும் ஒன்றுகூடித் துளசி ராமாயணத்தை, ராமசரிதமானஸம் என்ற அதன் பெயருக்கேற்ப, ஒரு பெரிய அகன்ற நீர்ப்பரப்பாக்கிவிடுகின்றன. கம்பராமாயணமோ காம்பீர்யமான நடையில், ஓர் உயர்ந்த காவியத்துக்குரிய சகல லக்ஷணங்களும் அமைந்து, நாடகக் காட்சிகளைப் போலத் துரிதமாகவும், மனிதனின் உள்ளத்தில் மாறி மாறி இயங்கும் உணர்ச்சிகளனைத்தையும் வர்ண ஓவியங்களாலே உள்ளவாறு வர்ணித்துக்கொண்டும் செல்லுகிறது. துளசிதாஸர் தமது ஆரம்ப வணக்கத்தில் உலகம் முழுவதையும் ஸீதா ராம மயமாக அறிந்து எல்லோரையும் அன்புடன் வணங்குகிறார். ஆரம்பத்திலேயே கம்பனுக்கும் துளசிக்கும் உள்ள ஓர் ஒற்றுமையை நாம் காண்கிறோம். இறைவன் உலகத்தைப் படைத்து, அதில் உறைந்து நின்று காப்பதை இருவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருவரும் தம் காப்புச் செய்யுளில் உபநிஷத்தின் ஒரு தத்துவார்த்தத்தை விளக்கியிருக்கிறார்கள்.

குமரகுருபர சுவாமிகள் காசியில் கம்பராமாயணம் பிரசங்கம் செய்து வந்ததாகவும், அதைக் கேட்டுவந்த துளசிதாஸர் தம் ராமாயணத்தில் கம்பனின் சில கருத்துகளை அமைத்ததாகவும், நாட்டில் ஒரு கர்ணபரம்பரைச் செய்தி உலாவி வருகிறது.

கம்பனுக்கும் துளசிக்கும் உள்ள ஒற்றுமைகளுக்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று, இருவருமே அகில இந்தியாவின் கலைப்பண்பை வளர்க்க உதித்தவர்கள். இராமனை வர்ணிக்கும்போது 'தென்சொற்கடந்தான், வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்கிறார் கம்பர். இரண்டாவது, இருவருமே வான்மீகியின் ஆதி காவியத்தைத் தம் முதல் நூலாகக் கொண்டு, இராம கதையைத் தம் கட்டுக்கோப்பிலே அமைத்தவர்கள். அவ்வாறு அமைக்கும்போது இருவரும் சில கட்டங்களில் வால்மீகியினின்றும் வேறுபட்டிருக்கிறார்கள்.

வால்மீகி பழைய உலக வழக்கை அனுசரித்து, இராமனும் சீதையும் மணந்த பின்பே அவர்களின் காதலை வளர்க்கிறார். ஆனால், கம்பனும் துளசியும், திருமணத்துக்கு முன்னமே காதலர்களின் முதல் சந்திப்பை வருணித்துத் தமது கதைக்கு ஒரு காதல் நிறம் தீட்டுகிறார்கள்.

மிதிலை மாநகர் வீதியில் நடந்து சென்ற நம்பி, கன்னிமாடத்தின் மேடையிலே நின்ற சீதையைக் கண்டு, மாளிகையடைந்த பின்பு, அவளே தன் கண்ணிலும் கருத்திலும் இலங்குவதைக் காண்கிறான். அண்ணலும் நோக்கினான் ; அவளும் நோக்கினாள் ; சீதையும் தன் கண்வழிப் புகுந்த காதல்நோய் பாலுறுபிரையெனப் பரவ, வீதியிலே கண்ட வீரத் திருக்கோலத்தைத் தன் உள்ளத்தில் வரைகிறாள். காலையிலே கதிரவனின் கிரணங்களால் அலர்ந்த செந்தாமரையில், அவள் தன் காதலனின் கண்ணின் நிறத்தையும் மேனியின் நிறத்தையும் கண்டு, ஒருவாறு ஆறுதல் பெற்று, தன் வாட்டத்தைத் தீர்த்த கமலப்பொய்கையை நோக்கி,

*"பெண்இவள் உற்ற தென்னும்*
*பெருமையால் அருமை யான*
*வண்ணமும் இலைக ளாலே*
*காட்டலால் வாட்டத் தீர்ந்தேன்*
*தண்ணறுங் கமலங் காள் ! என்*
*தளிர்நிற முண்ட கண்ணன்*
*உண்ணிறங் காட்டி நீர்என்*
*உயிர்தர உலாவினீரே !"*

என்கிறாள். இது கம்பன் கண்ட காட்சி.

துளசியோ, ஜனகனின் பூஞ்சோலையில் சீதா இராமர்களின் காதல் உதயமாவதைக் காண்கிறார். ராமனும் சீதையும் ஒருவர் மற்றொருவரின் இவ்வுலகிலேயே காணக்கிடைக்காத ஸௌந்தரியத்தைக் கண்டு உவகை கொள்ளுகின்றனர். துளசி தம் வர்ணனையில் ராமகதையின் தூய்மைக்கும் உலக மரியாதைக்கும் எவ்விதக் குறையும் நேராமல் பார்த்துக் கொள்ளுகிறார்.

இராமன் மண வில்லை இறுக்கும் கட்டம். இராமனால் வில்லை ஒடிக்க முடியுமோ, முடியாதோ என்ற ஓர் ஐயம் எழுகின்றது, சீதையின் மனத்திலே. அவள் மனத்தில் நிகழும் இச்சந்தேகப் புயலை வெகு மனோஹரமாக வர்ணிக்கிறார் துளசி. ஆனால் இந்தக் கட்டத்திலே, கம்பர் தம் முதனூலின் ஆசிரியரான வால்மீகியையும் வென்றவராகச் சொல்லப்பட்ட துளசியையும் ஒருங்கே தோற்கடித்து விடுகிறார். இராமனின் வடிவழகை முடியக் காண இயலுமா? அவனைக் கண்டவர்களின் நிலை என்ன?

“தோள்கண்டார் தோளே கண்டார்
தொடுகழற் கமல மன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
தடக்கைகண் டாரு மஃதே
வாள்கண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கண்ட சமயத் தன்னா
னுருவுகண் டாரை யொத்தார்”

சபையில் கூடியிருந்த சீதையின் தோழிகள் ஞான முனியான விசுவாமித்திரனையும், ஜனகராஜனையும் பழிக்கலாயினர்.

இத்தனை நிந்தைப் பேச்சுகளுக்கும் சந்தேகங்களுக்கும், இராமன் மாக மடங்கலும், மால்விடையும் பொன் நாகமும் நாண நடந்து வந்து, ஒரு நொடியிலே விடையிறுத்துவிடுகிறான். வில்லையிறுத்து, தடுத்திமையாமலிருந்தவர் தாளின் மடுத்ததும் நாணுதி வைத்ததும் நோக்கார் கடுப்பினை யாரும் அறிந்திலர். ஒரு கண்ணிமைப் பொழுதில் எல்லாம் நிகழ்ந்துவிட்டது. கையால் எடுத்தது கண்டனர். இற்றது கேட்டனர். வால்மீகிக்கு இந்த ஓர் அடியைக் குறிப்பிடுவதற்கு நான்கு அடிகள் வேண்டியிருந்தன.

துளசி தாஸர், இராமன் வில்லிறுத்த பின்பு சீதையின் மனத்தில் தோன்றிய மன நிகழ்ச்சிகளை விவரிக்கத் தொடங்கிவிட்டாரேயொழிய வில்லிறுத்த தொழிலை அவர் பிரமாதமாக நினைக்கவில்லை. இராமனை அவர் ஒவ்வோரிடத்திலும் கடவுளாகப் போற்றி வருவதுதான் இதற்குக் காரணம்.

துளசியும் பல இடங்களில் மனித உள்ளத்தில் தோன்றும் சூட்சும எழுச்சிகளைச் சித்திரித்துக் காட்டுகிறார். ஆனால் அவர் முதலில் மிகப்பெரிய பக்தர், பின்புதான் கவி. அவர் ஒரு பக்த கவி, ஹிந்தியிலேயே புரந்தரதாஸர், கவி என்ற ஹோதாவில் துளசிக்கும் மேம்பட்டவர். ஆனால் துளசிதாஸர் வேதங்கள், வேதாந்தங்கள், வேத அங்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவைகளின் கருத்துக்களை எல்லாம் சுருக்கி, அவைகளை விரஜபாடி அவதீ, போஜபுரி, புந்தேல்கண்டி, ராஜ்புதான் முதலிய கிளை மொழிகளின் சொற்கள் விரவிய ஒரு பொது பாஷையிலே அமைத்துத் தம் இராமாயணத்தை ஞானக்களஞ்சியமாக்கி விட்டார். ஆகவே பொதுஜனங்கள் அதைப் பெரிதும் ஆதரித்தார்கள். இன்றுவரையிலும் இந்நூல் ஹிந்து சமூகத்துக்கு இன்றியமையாத ஒரு கிரந்த ரத்தினமாக இருந்து வருகிறது.

வால்மீகியும் கம்பனும், திருமணமான பின்பு, அயோத்திக்குச் செல்லும் வழியில் பரசுராமனின் வருகையைக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் துளசி, விவாகத்துக்கு முன்பே,

வில்லொடித்த உடனேயே, அங்கே பரசுராமரைக் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார். இராமனின் வில்லிறுத்த வீரம் ஏற்கனவே சீதையின் காதலுக்கு உரமாயிருந்தது. உடனே பரசுராமனின் வருகை, அவ்வீரத்தன்மையைப் பின்னும் விளக்கிக் காட்ட மற்றுமொரு சந்தர்ப்பத்தை அளித்தது. உலகத்தையே வென்ற பரசுராமனின் ஒளி இராமனுக்கு முன்பு மங்கிப் போயிற்று. அப்போது சீதாராமர்களின் பரஸ்பர அன்பு எவ்வளவு உறுதி சான்றதாக இருந்திருக்கும். காதலும் வீரமும் இணைந்து நிற்பதைக் கற்பிக்கவே துளசிதாஸர், இங்கே வால்மீகியிலும் கம்பனிலும் இல்லாத ஒரு மாறுபாட்டை அமைத்திருக்கிறார் என்று சொல்லலாம்.

துளசி ராமாயணத்தில் அயோத்தியா காண்டம் மற்ற எல்லாக் காண்டங்களையும்விடச் சிறப்பானது. துளசியின் கவித்துவத்தைக் காண அதுதான் சிறந்த இடம். அவர் முதன் முதலில் ராமசரிதம் என்று பெயரிட்டு அயோத்தியா காண்டம்தான் எழுதினாரென்றும், பின்பு பாலகாண்டத்தின் கடைசிப் பகுதியை முடித்துவிட்டே அதன் முற்பகுதியை எழுதினாரென்றும் கருதுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. கவிதைச் சுவையும் பலவித அலங்காரங்களும் நிரம்பிய அயோத்தியா காண்டத்தைத் துளசிதாஸரின் கவிதைக்கு எல்லை நிலம் என்றே சொல்லிவிடலாம். அதில்தான் அவர் தமது முழுத் திறமையையும் கொட்டியிருக்கிறார். பால காண்டத்தில் சீதாராமர்களின் சந்திப்பிலிருந்து தொடங்கி அக்காண்டத்தின் முடிவு வரையிலுமுள்ள பகுதியை அதற்கு அடுத்தபடி சிறந்ததாகக் கூறலாம். அயோத்தியா காண்டம் வரையில் கவியரசராக இருந்த துளசி அதற்குப் பின்பு பக்த ராஜனாகவும், உலக நன்மையைக் கருதிய உபதேசச் சக்கரவர்த்தியாகவும் மாறிவிடுகிறார்.

கம்பனின் இராமகாதையும் அயோத்தியா காண்டத்தில்தான் ஆரம்பிக்கிறது. இங்கே வ.வே.சு. அய்யரின் கம்பராமாயண ரசனையிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் கூறுகிறேன். ராமாயணத்தின் வஸ்து, அதாவது பிரதான சம்பவம் ராவணவதம், அதற்கு நெருங்கிய காரணம் ஆரணியத்தில் நேரும் சீதா ராவண சந்திப்பாதலால், ராமன் சீதா ஸமேதனாய்க் காட்டுக்குச் செல்லுவதையே அந்த வஸ்துவுக்கு பீஜம், அதாவது விதை என்று கூறவேண்டும். அயோத்தியா காண்டத்தில்தான் இவ்விதை விதைக்கப்படுகிறது. ஆதலால் அதுவேதான் கதையின் உண்மையான தொடக்கம். அது முதற்கொண்டு கதையானது ஓர் அரண்மனைக் கட்டடம்போல் அழகாயும் கம்பீரமாயும் கிளம்பி, வஸ்து பூர்த்தியாகிற வரையில் ஒரே வளர்ச்சியாக வளர்ந்து செல்கின்றது. அயோத்தியா காண்டத்தினின்று கதையானது மத்தகஜத்தின் நடையோடு, கங்கா பிரவாகத்தின் கமனத்தோடு ராவண வதம்வரை செல்லுகிறது. உபாக்கியானங்களுக்காகவேனும் மந்திராலோசனைக்காகவேனும் கதை நிற்கிறதே என்றால், அது இயற்கையையொட்டியே அவ்வாறு நிற்கின்றது. வனராஜனான கஜேந்திரனும் அங்கங்கே ஆகாரத்திற்காக நிற்கிறான். அங்கே இளைப்பாறுகிறான். கங்கா

நதியும் சம தடத்தில் வேகம் குறைகிறது. யமுனை முதலிய உப நதிகளின் நீரை ஏற்றுக்கொள்ளுகையில் வேகத்தைத் திரும்பப் பெற்றுக் கண்டோர் வியக்கச் செல்லுகிறது. கிளை நதிகளையும் கால்வாய்களையும் நிரப்பிக்கொண்டு சற்று ஆலசியமாக நடக்கிறது. ஆனால், ஆலசியமெல்லாம் அடுத்த கட்டத்தில் இரண்டு பங்கு வேகமாகச் செல்லுவதற்காகத்தான். கடைசியில் சமுத்திர ராஜனோடு கலப்பதற்கு முன் கங்காதேவியின் அழகையும் காம்பீர்யத்தையும, வாயால் வர்ணித்துச் சொல்ல ஒண்ணுமோ? தேவர்களும் கண்டானந்திக்கத்தகும் காட்சியன்றோ கங்காதேவியின் சமுத்திர சங்கமம் ! இத்தகைய வேகமும், ஒட்டமும், பொலிவும் இருக்கின்றன கம்பராமாயணத்தில்.

அயோத்தியா காண்டம், ராமாயண சரித்திரத்தின் வேர் ; பரத சரித்திரத்தின் ஆரம்பம். பரதன், மாமன் வீடு சென்ற பின்புதான் இராமனுக்கு முடி சூட்டும் பிரஸ்தாபம் வருகிறது. பிறகு மந்தரைச் சூழ்ச்சி, இந்தக் கட்டத்தில் கம்பனும் துளசியும் ஒருவருக்கொருவர் தோற்றவரல்லர். இந்தச் சூழ்ச்சியின் பயன், ராமனுக்கு வனவாசம், தசரதன் இருதலைக் கொள்ளியினிடையே தாக்குண்டு வருந்துகிறான். ஒரு புறம், வரங்கள் இரண்டு ; மறுபுறம், ராம வாஞ்சை. புதல்வனின் மணிமுடி அணிந்த கோலத்தைக் காணக்கருதிய சமயத்தில், அவன் வனம்புக நேர்ந்ததைக் கண்டும் கலங்காதவளாகிய கோசலை 'வடித்தாய் கூந்தல், கேகயன் மாதே' என்று இரங்கிக் கூறும் நிலையிலே முடிகிறது அந்தத் தாக்குதல்.

பரத யாத்திரையை வால்மீகி, கம்பன், துளசி ஆகிய மூவருமே பரதனுடைய ராமபக்தியைச் சிறப்பித்துக் காட்டும் முறையிலே வர்ணித்திருக்கிறார்கள். பரதனும் குகனும் சந்திக்குமிடத்தில் சில வேறுபாடுகள் உள்ளன. பரதனின் பக்தியையே துளசி தமக்கு ஆதரிச மாக வைத்துக்கொண்டார். வால்மீகியும் கம்பரும் பரதனுடைய சிருஷ்டியில் எத்துணை அன்பை, எத்துணை பக்தியை, எத்துணைத் தியாகத்தை, எத்துணை ஆத்ம கண்டனத்தைப் புகுத்தி, பரதனை அனன்னிய சதிருசமான, இணையற்ற ஆத்ம வீரனாக்கிவிட்டார்கள் என்கிறார் வ.வே.சு. ஐயர். இத்தகைய மகா புருஷனைத்தான் துளசி தம் பக்திக்கு ஆதரிசமாகக் கொண்டார். இராமனிடம் உத்தரவு பெற்றுப் பரதன் ராஜ்ய சாஸனத்தை மேற்கொண்டான். ஆனால், அதன் பொறுப்பையெல்லாம் ராமனின் பாத பங்கயங்களிலே அர்ப்பணித்துத் தான் பற்றொழிந்தவனாகவே விளங்கினான். தான் நாட்டிலே வாழ்ந்திருந்தும் காட்டிலே வாழ்வதால் நேரும் துன்பங்களை எல்லாம் அனுபவித்தான்.

குகனை மகோன்னதமான ஒரு பாத்திரமாகச் சிருஷ்டித்திருப்பதில் கம்பன், மற்ற இருகவிகளிடமிருந்தும் மாறுபட்டிருக்கிறார். வெளிப்பார்வைக்கு வேடனாயிருந்தும், கண்ணீரும் கம்பலையுமாக உள்ளமுருக நின்ற கம்பருடைய குகன் அழியாத ஓர் உயிர்ச்சித்திரமாகும். இராஜகுமாரனான இராமனுடைய அலங்கோல நிலையைக் கண்டு "நின்னை இங்ஙனம் பார்த்த கண்ணை ஈர்கிலாக் கள்வனேன்" என்று குகன் கூறுவதாகக்

கம்பன் அமைத்திருக்கிறார். கங்கைக் கரையின் காட்டுப்புறத்து வேடனைக் கம்பர் இவ்வளவு உயர்த்தி வைத்திருப்பது கலைச்சூட்சுமம் தெரிந்தவர் அனைவரும் ரசிக்கக்கூடியதாகும். குகனைக் குன்றுபோல் உயர்த்தி, பரதனை அக்குன்றின் மேலிட்ட தீபமாகச் செய்திருக்கிறார் கம்பன். தமிழ் மண்ணில் பிறந்த ஒரு கம்பன்தான் ஒரு குகனைப் படைக்க முடியும்.

அயோத்தியா காண்டத்திற்குப் பின்பு ஓர் அழகிய அரச குமாரியுடன் இரண்டு வீரர்கள் வெஞ்சிலையே துணையாய் அழகிய காடுகளையும், மலைகளையும் கடந்து செல்லும் காட்சியை நமக்குக் காட்டுகிறார் துளசிதாஸர். அதன் பின்பு சீதையை ராவணன் கவர்ந்து செல்வதால் நேரும் பிரிவை நோக்கியவண்ணம், லங்கா தகனத்தின் அற்புதமும் பயங்கரமுமான காட்சிகளைப் பார்த்துக்கொண்டே நாம் ராமராவண ரணகளத்துக்குப் போய்ச் சேர்ந்து கடைசியில் ராமன் வெற்றி பெறுவதைக் காண்கிறோம். இடையிடையே சில கிளைக் கதைகளும் நம் மனத்தைக் கவராமல் இல்லை.

கம்பராமாயணத்திலோ, ராமாயணத்தின் மத்திய பாகமாகிய ஆரணிய காண்டம் மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. வால்மீகியின் ரசனையைக் கம்பன் மாற்றியிருக்கிற இடங்களெல்லாம் ரஸக்ஞர்களுக்கு நல் விருந்தாக இருப்பதை வ.வே.சு. ஐயரின் 'கம்பராமாயண ரசனை' என்ற கட்டுரையைப் படித்தோர் அறிந்தே இருப்பார்கள்.

கம்பன் சித்தரித்த மாரீச–ராவண சம்வாதம் ஹாஸ்ய ரஸத்துக்கு ஓர் இணையில்லா உதாரணம். அதற்கு ஏறக்குறைய சமமான ஹாஸ்யத்தை நாம் துளசியின் நாரத சரித்திரப் பிரசங்கத்தில் காண முடியும்.

சுந்தரகாண்டத்தில் சென்று சீதா – ராம – விரஹம் உச்ச ஸ்தானத்தை அடைந்துவிடுகிறது. சீதையைக் கண்டு வந்த அனுமன், "இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும், கற்பு எனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்" என்று செய்தியை இராமனுக்கு அறிவிக்கிறான்.

யுத்த காண்டத்தில் துளசி தாஸர் புராணங்களிலிருந்து அஹிராவணன் என்ற மயில் ராவணனின் கதையையும் சேர்த்துக்கொள்ளுகிறார். அஹிராவணன் ராமலெக்ஷ்மணர்களை இலங்கையினின்றும் பாதாளத்துக்கு எடுத்துச் சென்றுவிட அனுமான் சென்று அவர்களை மீட்டு வருகிறார்.

துளசிதாஸரின் பக்தி மார்க்கம் ஞானத்தையும் யோகத்தையும் தன் உள்ளே அடக்கிக் கொண்டிருக்கிறது. சாதகப் பறவை, மழையைப் பொழிவித்து உலகத்துக்கு சுபீக்ஷத்தை தரும் மேக மண்டலத்தைக் காண நோற்பது போல, அவரும் ராமபிரானின் லோகரஞ்ஜகமான திருவுருவத்தைக் காண விரும்புகிறார். மனித வாழ்க்கையின் எல்லா

நிலைகளையும் அவர் தமது மானஸத்திலே விளக்குகிறார். பால காண்டத்தில் ஆனந்தம் தன் எல்லை வரையிலும் போய் நிற்கின்றது. அயோத்தியா காண்டத்தில் இல்லற வாழ்க்கையில் தோன்றும் சிக்கலான பிரச்சினைகள் விவரிக்கப்படுகின்றன. அதற்குப் பின் மூன்று காண்டங்களில் கர்மயோகம், உழைப்பு ஆகியவைகளும், யுத்த காண்டத்திலும் உத்தரகாண்டத்திலும் செய்கைகளின் கடைசிப்படி, வெற்றி, ஐஸ்வரியம் ஆகியவைகளும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. பக்தி செய்வதால் நற்பயன் எய்தலாம், நற்கதி கிடைக்கும் என்று நினைத்துப் பக்தி செய்வதே தவறு. பக்தியின் ஆனந்தம் ஒன்றுதான் பக்தனாவதற்குப் பயன், வாழ்நாள் முழுவதும், தான் விரும்பிய தெய்வத்தைப் பலனைக் கருதாது வழிபடுவதே பக்தனுடைய வேலை. துளசிதாஸர் உண்மையான அன்புக்கு உதாரணமாக அடிக்கடி சாதகப் பறவையைத்தான் எடுத்துக் காட்டுகிறார். ஜடாயு மற்றோர் இணையற்ற உதாரணம்.

துளசிதாஸர் எப்போதும் ராமனை நாராயணனாகக் காண்கிறார்.

ஆதலால் அவர் தம் ராமாயணத்தைப் பக்தியைப் பரப்ப ஓர் உயர்ந்த சாதனமாகச் செய்துகொண்டார். அவர் வால்மீகி ராமாயணத்தைத் தவிர அத்தியாத்ம ராமாயணம், மகா ராமாயணம், பாகவதம், ஹனுமன் நாடகம், பிரசன்ன ராகவம், உத்தர ராமசரிதம் முதலிய பல நூல்களிலிருந்தும் கருத்துகளை எல்லாம் திரட்டித் தம் நூலிலே அவைகளுக்கு புதிய உருக்கொடுத்திருக்கிறார்.

துளசிதாஸர் பக்தரும் கவியும் மாத்திரமல்ல, அவருக்கு தாவர சாஸ்திரம் தெரியும். பிராணி சாஸ்திரத்திலே நிபுணர். கணக்கிலே தேர்ந்தவர். ஜோதிடமும் சங்கீதமும்கூட அவருக்குத் தெரியும். வர்ணனைகளில் அவர் கம்பனுக்குச் சளைத்தவரல்லர். ஜனகபுரி, அயோத்தி இலங்கை முதலிய பட்டணங்களையும் யுத்த ஸந்நாகங்களையும், திருமணச் சடங்குகளையும் அவர் வெகு நேர்த்தியாக வருணித்திருக்கிறார். அவர் ராமாயணத்தைக்காட்டிலும் அதிகமாகத் தமது கீதாவலீ என்ற நூலில் இராமனுடைய குழந்தைப் பருவத்தை மிகவும் ரசமாக வர்ணித்திருக்கிறார்.

கீதாவலீயில் மற்றோர் அழகான காட்சி.

ஜடாயு ராமனுடைய நிஷ்காம பக்தன். ஓர் உண்மையான அன்பனைப்போலவே, அவன் இராமனுக்கு எதிர்பாராமல் வந்த ஓர் ஆபத்தை விலக்க முயன்று உயிர் நீத்தான். சாகும் தருணத்திலும் அவனுக்கு ஒரே ஆவல்தானிருந்தது. ராமனுக்கு எவ்விதமேனும் சீதையின் சமாசாரத்தைச் சொல்லிவிட்டு இறக்கவேண்டும் என்பதே அந்த ஆவல். அப்போதும் அவன் தன் இனத்தாரைப்பற்றி நினைக்கவில்லை. தவவேடம் புரிந்த ராமனை ஒரு முறை தரிசித்துச் சீதையின் செய்தியை அவனுக்குச் சொல்லிவிடவேண்டும் என்பதிலேதான் அவன்

நினைப்பெல்லாம். ராமனுக்குத்தான் அவன்மீது என்ன அன்பு ! ராமன் அவனைச் சந்தித்து அவன் பேச்சைக் கேட்கிறான். உடனே அவனைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு "பட்சிராஜனே, நான் தந்தையை இழந்தவன். தாங்கள் இன்னும் சில காலம் உயிருடன் இருந்து என் தொண்டை ஏற்றுக்கொண்டு எனக்குத் தந்தையின்பத்தைத் தரலாகாதா?" என்கிறான்.

இராமாயணத்தில் ஒருபுறம் சகோதரனுக்காக ராஜ்யத்தைத் துறக்கும் பரதனுடைய சித்திரமும், மறுபுறத்தில் இராஜ்யத்துக்காகச் சகோதரனைத் கொன்ற சுக்ரீவ விபீஷணர்களின் சித்திரங்களும் இருக்கின்றன. துளசிதாஸர் இந்த இரண்டு விதச் சித்திரங்களையும் ஒருங்கே சேர்த்து ஒரு காட்சியை ஸ்ருஷ்டித்திருக்கிறார். தமது தோஹாவலீ என்ற நூலில். இலங்கையிலிருந்து திரும்பி வந்தவுடன் ராமன் பரதனைத் தன் தோழர்களுக்கு அறிமுகம் செய்விக்கிறான். பரதன் அவர்களைத் தழுவிக்கொள்ள முன் வருகிறான். ஆனால், சகோதரத் துரோகம் செய்த அவர்கள் பரதனின் தூய உடலுடன் தமது மாசு படிந்த உடல்களைத் தழுவ இடங்கொடுக்கவில்லை. அவர்களுடைய மனநிலையைத் துளசி எவ்வளவு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறார், பாருங்கள்.

பணமும் மனச்சந்தோஷமும் பெற்றுத் திரும்பிய திருடன் ஒருவன், தான் வரும் வழியில் இடுப்பில் கை வைப்பதுபோல் பாசாங்கு செய்து லேசாகப் பணத்தைத் தொட்டுப் பார்த்துக்கொள்வதுபோல, சுக்ரீவனும் விபீஷணனும் பரதனைச் சந்தித்தார்கள். துளசிதாஸர் மனோலோகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் ஆராய்ந்திருக்கிறார். மனத்தின் எந்த விஷயமும் எந்த அலையும் அவருக்குப் புறம்பானதல்ல. கம்பன் சுக்ரீவ விபீஷணர்களின் ராஜ்ய ஆசையைக் குறிப்பிட்டிருந்த போதிலும், அவர்களை உன்னத சிருஷ்டிகளாக்கியிருக்கிறார். இருவரிலும் விபீஷணரை உலகத்திற்கு வழிகாட்டியான ஒரு பெரிய சத்தியாக்கிரஹியாக அமைத்திருக்கிறார். கூடப்பிறந்த இரு சகோதரரைக் கொல்ல உதவியதுடன், வீர மைந்தன் இந்திரஜித்தைக் கொல்லவும் அவர் உதவி செய்தார். இந்திரஜித்தின் வெட்டுண்ட தலையைக் கண்டதும் இராமன், "லெக்ஷ்மணா, இது உன் வெற்றியல்ல, அனுமன் வெற்றியல்ல, வேறு யார் வெற்றியுமல்ல, வீடணன் தந்த வெற்றி ஈது" என்று கூறினான் என்றால், அதர்மத்தைக் கண்டு அஞ்சி விலகிடாமல் தர்மத்திற்குச் சகல தியாகங்களையும் விபீஷணரைப் போலவே செய்யவேண்டுமென்பதுதானே இராமன் கருத்து.

கம்பன் தம் காலத்துக்கு முன்பே ஆழ்வார்களும், நாயன்மார்களும் செப்பனிட்டு வைத்த வழியிலே சென்று, வடமொழிச் சொற்கள் பலவற்றையும் தமக்கு உரியனவாக்கிக்கொண்டு, வால்மீகியின் இராமகதையை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஒரு சொல்லோவியமாக, ஒரு கலைக்கோபுரமாக நிருமித்திருக்கிறார். கம்பனின் ராமசரிதையிலும் நீதி வாக்கியங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் அவைகள் கதைகளின் சந்தர்ப்பங்களுக்கு அழகு தருவனவாகவும் மிகச் சுருக்கமாகவும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

மாவலி வார்த்த நறும்புனல் கையில் தீண்டியவுடனே, வாமனன் உயர்ந்தவர்க்குதவிய உதவியொப்பவே ஓங்கி வளர்ந்து திரிவிக்கிரமனாகி விடுகிறான். வீடணனிடத்தில் முதலில் ஐயங்கொண்ட சுக்ரீவனையே, அவனைத் தன்னிடம் அழைத்துவரச் சொல்லுகிறான். இராமன். விபீடணன் சுக்கிரீவன் வரவையறிந்து அவனை எதிர்கொண்டு சொல்கிறான்.

கம்பனைப் பூரணமாக அறிவதற்கு வழி இதுதான். ஆறுகளும், சுனைகளும், அருவிகளும், மலைகளும், வனங்களும், வனாந்தரங்களும் நிரம்பிய ஒரு நாட்டை ஆகாய விமானத்தின் மூலம் சுற்றுவதுபோல் நாம் நம் ஹ்ருதய விமானத்திலிருந்து வால்மீகியின் ராமாயண தேசத்திலே ஸஞ்சரித்துவிட்டு, துளசியின் ராமசரிதமானஸமாகிய மானத வாவியிலே இறங்கி இளைப்புதீர நன்னீராடி அந்தக் குளிர்ச்சி பொருந்திய இன்பத்தை உணர்ந்த பின்பு, கம்பனின் கவிதைச் சோலையில் புகுந்தோமாயின் அப்போதுதான் அச்சோலையிலுள்ள பழங்களின் இனிமையையும் அருமையையும் நம்மால் பூரணமாய் அனுபவிக்க முடியும்.

இராமபக்தி துளசிதாஸருக்கு ஒருதத்துவக் கொள்கை மட்டுமன்று, ஒரு புனித வசீகரம் பொருந்திய திருஉருவத்தினிடம் இருதயத்தையும், மனோபாவத்தையும் அர்ப்பணித்து, அந்த அழகன் வாயிலாக உண்மையைத் தேடும் ஒரு சன்மார்க்கப் பெரு முயற்சியும் ஆகும். இத்தகைய பக்தியில் சன்மார்க்க லட்சியங்களுக்கும் சிறந்த இடம் உண்டு. துளசிதாஸரின் இராமச்சந்திரபக்தியில் சன்மார்க்க சந்திரிகையை மட்டும் நாம் காணவில்லை. நம்மீது அன்பு என்ற சூரிய ஒளியை வீசி நம்முடன் உறவுகொண்டாடி, உள்ளத்தை மலரச் செய்யும் அன்புக் கடவுளின் வழிபாட்டையும் காண்கிறோம். இத்தகைய கொள்கையைத் துளஸீதார் தமிழ்நாட்டு வைணத்திலிருந்தும், கம்பனின் இராமாவதாரக் கொள்கைகளிலிருந்தும் தெரிந்து கொண்டிருக்கக்கூடும் என்று துணிந்து கூறுவது தவறாகாது.

அறிஞர். பி. ஸ்ரீ.

# சரயு என்பது.....

முனைவர் கி. சுப்பிரமணியன் (ஐ.கே.எஸ்)

கம்பரின் புலமைத்திறம் தமிழகம் அறிந்தது. 'ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழின்' செழுமையையும் திட்பத்தையும் எழுத்துக்களில் வடித்த மாபெருங் கவியரசர் கம்பர் பெருமான். கண்ணில்படும் ஒவ்வொரு பொருளின் ஊடாகப் புகுந்து தம்முடைய படைப்புத் திறனால் அவற்றை வழிபடு பொருளாக ஆக்கும் வல்லமை பெற்ற கவிஞரின் இராமகாதை முழுவதிலும் இந்த ஆற்றலைக் கண்டு மகிழலாம். அந்த நோக்கில், இயற்கையாகக் கோசல நாட்டில் பாயும் சரயுநதி அவருள்ளே ஏற்படுத்திய பலவடிவங்களைக் கம்பர் வழி நின்று கண்டின்புறுவது இந்தக் கட்டுரையின் நோக்கம்.

ஆறு என்றால் என்ன? தமிழில் இதற்குப் பலபொருள்கள் உள்ளன. எண்ணிக்கை, வழி, நதி, ஒழுக்கநெறி என்பன போல அந்தச் சொல் வருமிடத்துக்கேற்பப் பொருள் கொள்ளவேண்டும். நதி என்னும்போது, நீர் வளம் கொண்டது ; மலையில் தோன்றிக் கடலில் கலப்பது ; வழிகளை அறுத்துச் செல்வது ; ஊர்கள் வழியாகப் பாய்ந்து பொய்கை, ஏரிகள், தடாகங்களை உருவாக்குவது ; வயல்களுக்கு நீர் தந்து உணவுப் பொருள்கள் விளையச் செய்வது. கரையோரங்களில் வளரும் மரங்கள் அடர்ந்த சோலைகளுக்கு உயிரூட்டும் ஊற்றாக இருப்பது. மலைபடு பொருள்களை அரித்து வந்து மக்களுக்குத் தருவது என்பன போல ஓர் ஆற்றின் இயல்புகளைப் பல வகையாகப் புனைந்து உரைக்கலாம். இது இலக்கிய மரபு. இவற்றையும் தாண்டி உள்ளுருவமாக, படிமமாக, உவமையாக ஆறு இருந்து உள்ளத்தில் பல உணர்ச்சி வெளிப்பாடுகளுக்குக் களனாக அமையும் விந்தை கவிஞர்க்கு மட்டும் கைவந்த கலையாகும். காப்பியங்களில் தமிழ் இதை ஏற்கெனவே கண்டு மகிழ்ந்ததுதான். கம்பர் காவியத்தில் 'சரயு' நதியைப் பார்த்துக் கம்பர் பாடும் அழகைப் பார்ப்போம்.

இராமபிரான் தோன்றிய சூரிய குலம் பெருமை மிக்கது. வாய்மையும் ஒழுக்கமும் நீதிதவறாத செங்கோன்மையும் அறக்கருணையும் உடையது. 'வாய்மையும் மரபும் காத்து' என்று அந்த மன்னர் பெருமையை வாலி போற்றுவான். அங்கு ஆட்சி செய்தவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் ஒழுக்கநெறி தவறாமல் வாழ்ந்தனர். தந்தை, மகன் என்ற அந்த வரிசையில் நல்லொழுக்கம் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்தது. எது போல? சரயு நதியின் நீரோட்டம் போல. 'இரவின் குலத்து .... பரவுநல் ஒழுக்கின்படி'... நதி ஓடியது. பருப்பொருளான நதியின் நீரோட்டத்தை, நுண்பொருளான ஒழுக்க நெறிக்கு ஒப்பிடும் கம்பனின் பாடல் வரியில் 'நீரின்றமையாது ஒழுக்கு' என்னும் திருக்குறளின் செறிவைக் காணலாம்.

இறைவனின் படைப்பில் தாய்மைக்கு மேலானது ஏதுமில்லை. ஓரறிவுயிர் தொடங்கி ஆறறிவுயிர் வரை இந்தப் பெரும்பண்பின் வெளிப்பாட்டைக் காண முடிகிறது. தன்னை

இழந்தாவது தன்னிடம் உயிர்களைக் காக்கும் முனைப்பு தாயிடம் நிறைவாக உள்ளது. 'பால்நினைந்தூட்டும் தாயை' ப் பாடாத கவிஞர் இல்லை. "சரயு என்பது தாய்முலை அன்னது" என்று மிகமிகச் சுருக்கமாக நறுக்கென்று ஒரு சொல் பிம்பத்தைக் கம்பர் உருவாக்கி விடுகிறார். மருத்துவ உலகம் தாய்ப்பாலின் சிறப்பை விரிவாக ஆராய்ந்து அதன் தேவையை வலியுறுத்தி வருகிறது. ஆறுகளை அழித்துவரும் இன்றைய மானுடன் தாய்ப்பாலை நஞ்சாக ஆக்குகிறானே என்ற ஏக்கம் இந்த வரியைப் படிக்கும்போது ஏற்படுகிறது. வேண்டியதை வேண்டிய அளவு, காலம் தவறாது தந்த சரயு ஆறு கோசலத்தைக் கொழிக்கச் செய்ததில் வியப்பில்லை.

ஆழிப்பேரலைகளும், புயல்மழையும் அவ்வப்போது தமிழகத்தைச் சீரழித்துவரும் காலத்தில் வாழ்கிறோம். இவை புதிதில்லை. அன்றும் இருந்தனவே. அதுபோல, மழைக்குப்பின் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்தோடித் துன்பங்கள் விளைப்பதும் உண்டு. சரயு நதியில் அப்படி ஒரு வெள்ளம் ஒரு சமயம் ஏற்பட்டது. வெள்ளத்துக்கு அஞ்சி மலைவாழ் வேடர்கள் ஊர்களைவிட்டு ஓடுகிறார்கள். அவர்களுடைய பெண்கள் வயிற்றில் அடித்துக்கொண்டு அஞ்சி அலறுகிறார்கள். அவர்கள் படும் வேதனைகள் கொஞ்சம் அல்ல.

எதுபோல? பகை மன்னன் ஒருவனுடைய ஆட்சியில் மக்கள் படும் துன்பம் போல. படையெடுத்து வருபவன் வெள்ளம் எனப் பேரெண் கொண்ட அளவில் வருவான். கூரிய கணைகள், வில், அம்பு இவற்றைப் பயன்படுத்தி மக்களை விரட்டுவான். மலை மூங்கில்களை வளைத்துக்கொண்டும், பெரிய மரக்கோல்களைத் தண்டுகள் போல வீசிக்கொண்டும் வருகின்ற சரயு நதியின் வெள்ளப் பெருக்கு போல. இது மருதநிலக் காட்சி.

புள்ளிகளையுடைய படத்தை உடையது ஆதிசேஷப் பாம்பு. அதன் மீது படுத்தும் ஆடியும் தன்னை வழிபடும் அடியார்களுக்கு எல்லாம் அருள்புரிபவன் 'ஆயர் குலத்தினில் தோன்றிய அணிவிளக்காகிய' கண்ணபிரான். ஆயர்பாடியில் குழந்தைக் கண்ணன் வீடுவீடாகச் சென்று, அங்குள்ள உறிகளிலிருந்து நெய், பால், வெண்ணெய், இவற்றை வாரி உண்கிறான். பிறகு குருந்த மரத்தில் ஏறி ஒடித்தும் மருதமரத்தைச் சாய்த்தும் விளையாடுகிறான். அவனைப் பார்த்து அனுபவிக்கும் ஆயர் குலப் பெண்களின் ஆடைகளை எல்லாம் கவர்ந்து போய்த் திருவிளையாடல் செய்கிறான். பெரியாழ்வார் திருமொழியில் இந்தக் 'கண்ணன் காவியம்' ஓவியமாக உள்ளது. இதை உள்வாங்கிக் கொண்ட கம்பர், சரயு நதி வெள்ளம் ஆயர்பாடிக்குள் பாய்ந்து தயிர் பால் இவற்றைக் கவர்வதையும், மரங்களைச் சாய்த்து, இழுத்துச் செல்வதையும், பெண்கள் துகிலை அடித்துச் செல்வதையும் கண்ணன் செயலுக்கு உவமையாக்கி, 'பொறி வரி அரவின் ஆடும் புனிதனும் போலுமன்றே' என்று பாடுகிறார். இது முல்லை நிலக்காட்சி.

ஒரு யானை, மதம் பிடித்த யானை வெறிகொண்டு இங்குமங்கும் ஓடுகிறது. வழியில் தென்படும் வீட்டு வாசல் கதவுகளை முட்டித் தள்ளுகிறது. மக்கள் அஞ்சி இங்குமங்கும்

குரலெழுப்பிக் கொண்டு ஓடுகிறார்கள். யானையின் நெற்றியில் இருக்கும் ஓடை என்னும் அணி இங்குமங்கும் அசைகிறது. மதநீரைக் குடிக்க வண்டுகள் மொய்க்கின்றன. யானையின் கழுத்து மாலைகளிலிருந்து மணிகள் சிந்துகின்றன. யானை கட்டப்பட்டிருந்த தறிமரம், தும்பிக்கையால் இழுக்கப்பட்டுச் சாய்கிறது. இப்படி வெறிபிடித்து ஓடுகிறது யானை.

சரயுநதியும் அது போன்றதுதான். தன்னைச் சிறைப்படுத்தியிருந்த மதகின் கதவை முட்டியுடைத்துப் பாய்கிறது. வெள்ளம் பெருகி வருவதைப் பார்த்து மக்கள் ஓலமிட்டு அலறியவாறு இங்குமங்கும் ஓடுகிறார்கள். ஓடைகள் வெள்ள நீரால் நிரம்பித் ததும்பி இங்குமங்குமாக அலைவீசி அசைகிறது. நீர்வளமிக்க சோலையில் பூத்திருக்கும் மலர்களில் வண்டுகள் மொய்க்கின்றன. மலைபடு பொருள்களான மணிகள் சிந்தித் தெறிக்கின்றன. அங்கங்கு தடுப்புக்காக வைக்கப்பட்டிருந்த தறிகளாகிய பலகைகளைச் சாய்த்து வீழ்த்திச் சரயு வெள்ளம் பாய்கிறது. யானை குறிஞ்சி நிலத்துக்குரியது. இது மலைவளம் காட்டும் பாடல். யானையும் வெள்ள நீரும் எல்லாரும் காணும் பொருள்களே. கம்பருக்கு மட்டும் இப்படிச் சிலேடையில் அவை அமர்ந்து கம்ப சித்திரம் ஆகின்றன.

அடுத்துவரும் பாடல் வாழ்வியல் சிந்தனையை உள்ளடக்கியது. ஒரு மனிதனுடைய வாழ்வுப் பயணம் சீராக அமைவதில்லை. மேடும் பள்ளமுமாக ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். காடாக வறண்டு கிடந்த முல்லை நிலம், மரங்கள் நிறைந்த குறிஞ்சி ஆவதும் உண்டு; கடற்கரையில் மணலாக இருந்த நெய்தல் நிலம் நெல்லும் கரும்பும் விளையும் மருதமாவதும் உண்டு. ஆற்று நீரின் போக்கால் இப்படி மாற்றங்கள் ஏற்படுவது அறிந்த செய்திதான். புவியின் வரலாற்றில் நீரோட்ட மாற்றங்கள் பற்றி நிறைய ஆய்வுகளும் செய்துள்ளனர்.

கம்பருக்கு இந்த நீரோட்ட மாற்றம் வேறொன்றை நினைவுபடுத்தியிருக்கிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுப் பாடல் அவர் உள்ளே திரண்டு கிளர்ந்து வெளிப்படுகிறது. 'கல்பொருதிரங்கு மல்லல் பேராறு' – அதன் 'நீர்வழிப்படூஉம் புணை போ' ன்றது மானிட வாழ்வு எனும் அந்தச் சொற்கள் இராமகாதையில் அப்படியே சற்று மாறுபட்டு வருகின்றன. 'ஆருயிர் முறைவழிப்படும்' – ஒவ்வொரு உயிர்வாழ்வும் விதிப்படிதான் இயங்கும் என்பது புறநானூறு கூறும் தெளிவு.

ஊழ்வினை சரயு நதியின் ஓட்டம் போன்றது. வறண்டு போன ஒருவர் வாழ்வை வளமாக்குவதும், வளமிக்க இன்னொருவர் வாழ்வைப் பாலையாக்குவதும் அவருடைய ஊழ்வினையே.

*"எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடுமாறும் நீரால்*
*செல்லுறு கதியில் செல்லும் வினை எனச் சென்றது அன்றே"*
(பால – 28)

என்ற கம்பர் சொற்களில் இந்த மெய்ம்மை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆழிப்பேரலையால்

அழிந்துபோன குடும்பங்களும், வறண்ட நிலத்தை விற்று வளமானவர்களும் இன்றும் நம் முன்னால் இருப்பதைப் பார்க்கிறோமே. இது பொருள் மொழிக்காஞ்சி. 'பொருள் நிலையாமை' என்றும் மாறாமல் இருக்கும் மெய்ம்மையை மக்களுக்குப் புரியது வைப்பது?

ஒரு பெருஞ்செல்வர், அவர் பெற்றுள்ள செல்வத்தை தான் பெற்ற மக்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார். அதை வாங்கிக்கொண்டு சென்ற மக்கள் ஆங்காங்கு அதைப் பெருக்கி வளமாக வாழ்கிறார்கள். தாங்கள் பெற்றதையும் தாமாக ஈட்டியதையும் அவரவர் பிள்ளைகளுக்குப் பிரித்துக்கொடுக்க... இப்படியே காலப்போக்கில் செல்வம் பரவிக்கொண்டே போகிறது. சரயுநதி ஒன்றுதான், பொன்னும் மணியுமாக அது வாரிக்கொண்டு வரும் செல்வத்தை, நீர்வளத்தைப் பல்வேறு இடங்களில் கொண்டு சேர்த்து மக்களை வாழச் செய்கிறது. ஒரு குலம் பிரிந்து பிரிந்து பலவாறாகப் பரவுவது போன்றது இத்தகைய நீரோட்டம். 'கோத்தகால் ஒன்றின் ஒன்று குலம் எனப் பிரிந்தது சரயு வெள்ளம்' என்பதும் கம்ப சித்திரம்.

அடுத்து வரும் பாடல் தமிழகம் அறிந்தது. மேடைகளில் பலரும் மேற்கோளாகக் காட்டுவது. சரயுநதி மலையில் பிறந்து கடலில் கலக்கிறது. (எல்லா ஆறுகளும் தாம், முதலிலும் பார்த்தோம்). ஓர் ஆறு பாயும் வழியில்தான் எத்தனை துறைகள், ஊர்கள், பொய்கைகள், சோலைகள்? ஆங்காங்கிருப்போருக்கு அவரவர் ஊரும் துறையுமே மற்ற எதைவிடவும் சிறந்தது என்று தோன்றுகிறது. இந்தத்துறை இயற்கை அழகுமிக்கது. அந்த ஊர் நீர்வளம் உடையது; எங்கள் ஊரில் ஏரியின் பெருமை சொல்லும் தரம் அற்றது என்பனபோல் வாதம் செய்கிறார்கள். ஒரே நீதிதான். அதில் பாய்வதும் ஒரே நீர்தான். ஏன் இந்த வீண் சண்டை? எதற்காக இந்தப் பேரழிவு?

சமயம், மதம், ஆசாரம் எனச் சண்டையிட்டுக் கலக வழக்கு செய்வோர்கள் மனிதகுல எதிரிகள். மதத்தின் பெயரால் இந்த மண்ணில் இறந்தோர் எண்ணிக்கை போர்களால் இறந்தவருடைய எண்ணிக்கையை விடவும் மிக அதிகம். இது வரலாறு. இன்றும் அந்த வெம்போர் ஓயவில்லை. தெய்வம் ஒன்றுதானே : அது கொள்ளும் வடிவம் பல. அல்லது அதற்கு மனிதன் ஏற்றிச் சொல்லும் வடிவங்களும் கருத்துக்களும் பல. கருத்து முரண்பாட்டில் மனிதர்கள் அடித்துக்கொள்வதற்குத் தெய்வம் என்ன செய்யும்? அளவுகூறமுடியாத, வேதங்கள் கூட 'இதுதான்' என்று சொல்லமுடியாத அரும்பொருள் உலகில் பலவாறாகத் தென்படுவது போலச் சரயுநதி ஓடுகிறது என்ற உலகியல் உண்மையை வைத்துத் தத்துவம் கூறுகிறார் கம்பர். இதை மனுக்குலம் புரிந்து கொள்ளவேண்டும். பாடலைப் படித்துப் போற்றுவோம்.

*"கல்லிடை பிறந்து போந்து கடலிடை கலந்த நீத்தம்*
*எல்லையில் மறைகளாலும் இயம்பரும் பொருளீது' என்னத்*
*தொல்லையில் ஒன்றே ஆகிய துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்*
*பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்தது அன்றே"*
(பால - 19)

சரயுநதி பற்றிய வருணனையில் நிறைவுப்பாடல் அற்புதமானது. ஆழ்ந்த உட்பொருள் கொண்டது. ஆற்றின் நீர்வரத்தால், நீர்வளத்தால் சோலைகள், காடுகள், மரங்கள் செழிக்கின்றன. பூக்கள் மலர்ந்து மணம் வீசுகின்றன. வயல்களில் உணவுப்பயிர்கள் விளைந்து மக்களின் உயிர்களை வாழச் செய்கின்றன. ஒரே ஒரு நதி. கோசல நாட்டில் இத்தனை நன்மைகளையும் செய்கிறது. நீர்,மண், உணவு... என எல்லாப் பொருள்களிலும் சரயுநதியின் உயிர்ப்பே தெரிகிறது. எது போல?

பரம்பொருளாகிய பேருயிர் ஒன்றுதான். வேதங்களாலும் அளந்தறிய முடியாப் பழைமையும் பெருமையும் வாய்ந்தது. 'மண்ணும் நீ விண்ணும் நீ மறிகடல்கள் ஏழும் நீ' என்று சொல்லும் வண்ணம் இறைவன் எல்லா இடங்களிலும் பரந்துள்ளான். புல்லிலும், பூண்டிலும், புழுவிலும், மரத்திலும் .... இப்படியே உயிருள்ளதாய் அல்லதாய் – மாவடையாய் மரவடையாய் இரண்டும் அற்றதாய் – இறைவனின் திருக்கோலமே பொலிகிறது. உலகப் பொருள்கள் வடிவிலும் வண்ணத்திலும் இயங்கு செயல்பாட்டில் வேறுபாட்டாலும் –ஓரறிவுயிர் தொடங்கி ஆறறிவு உயிர்வரை அவற்றை இயக்குவது ஒரே ஆற்றல் தான். பேருயிர்தான். மூலக்கனல், அடிநாதம், வேரூற்று தெய்வமே என்பது தெளிவு. உடம்பு எதுவாயினும் அதை இயக்குவது அந்த உயிரே என்பதை உணர்ந்து மனிதன் ஆற்றையும் வணங்கவேண்டும் சரயுநதியின் நீரோட்டம் இதை நினைவுபடுத்துவது போல இருக்கிறது என்கிறார் கம்பர்.

*"தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்*
*போதவிழ் பொய்கை தோறும் புதுமணல் தடங்கள் தோறும்*
*மாதவி வேலிப்பூக வளம்தொறும் வயல்கள் தோறும்*
*ஓதிய உடம்புதோறும் உயிரென உலாயதன்றே."*

(பால – 31)

பெருங்கவிஞர்கள் தாம் காணும் பொருள்களின் ஊடே புகுந்த எளியமக்கள் காணாத, காண இயலாத நுட்பங்களைக் கண்டறிந்து அவர்கள் பயன்பெறுமாறு செய்வர் என்பதற்குச் சரயுநதி வருணனைப் பாடல்கள் சிறந்த சான்றுகள் ஆகும். காரணம் 'வெள்ளந்தாழ் விரிசடை' என்று சிவபெருமானைப் பாடும் சைவமரபில் நீர் இறையருளின் வெளிப்பாடாகப் போற்றப்படுகிறது.

*'மூவர் நீ முதல்வ நீ முற்று நீ மற்று நீ*
*பாவ நீ தரும நீ பகையுநீ உறவுநீ'*

என்று பின்னால் வரும் வாலியின் துதியிலும் இதைக் காணலாம். கம்பரின் கைவண்ணம் அது.

# அவதாரத்துள் அவதாரம்

கம்பன் கலைச்செம்மல் நா. நஞ்சுண்டன்

அவதாரம் என்ற சொல்லுக்கு இறங்கி வருவது என்று பொருள் கூறுவார்கள் பெரியோர்கள். பரம்பொருள் கருணையால் உருவம் பெற்றுப் பிறக்கிறது என்பது இதன் கருத்து. "பிறப்பிலி" என்று பகவானைக் கூறுகிறோம். என் நின்ற யோனியுமாய் பிறந்தாய் இமையோர் தலைவா" என்று பிறப்பே இல்லாத பகவானைப் பார்த்து நம்மாழ்வார் பிறந்தாய் எனக் கூறுவதன் மூலம், இந்த ஜகத்திலுள்ள உயிர்க் கூட்டங்களைக் காப்பாற்றவே பகவான் அவதரிக்கிறான்.

"கற்பனை கடந்த ஜோதி கருணையே உருவமாகி' என்று சேக்கிழார் பாடுவதும், "ஆதியஞ்ஜோதி உருவை அங்கு வைத்து"இங்கே வந்து பிறக்கிறான் பாம்பணையில் பள்ளிகொண்ட பெருமாள் என்று வைணவ ஆச்சாரியார்கள் கூறி மகிழ்ந்தார்கள். "அம்மான் மகளைத் திருடும் திருடன் பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என அருணகிரியாரும் கூறியுள்ளார். அடியார்களை வாழ்விக்கவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை– அறத்தை நிலைநிறுத்தவும், அதர்மத்தை ஒழிக்கவும் நான் காலங்களிலே அவதரிப்பதாக கீதாசார்யனான கண்ணன் கூறுவதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த அவதாரத்தைப் பற்றி– இரகசியத்தைப் பற்றி கம்பன் சுந்தரகாண்டத்திலே அனுமன் வாயிலாகக் கூறுவதைக் காணவேண்டும்.

*"அறந்தலை நிறுத்தி வேதம்*
*அருள்சுரந்து அறைந்த நீதித்*
*திறம்தெரிந்து உலகம் பூணச்*
*செந்நெறி செலுத்தி தீயோர்*
*இறந்துக நூறித் தக்கோர்*
*இடர்துடைத்து ஏக ஈண்டு*
*பிறந்தனன் தன் பொற்பாதம்*
*ஏத்துவார் பிறப்பு அறுப்பான்"* (சுந். 5585)

என்று கம்பன் சொல்லிப் போந்தது. கூர்ந்து நோக்கத்தக்கது, "ஒளி நெறியாகிய அறமும், இருள் நெறியாகிய அதர்மமும் போராடுவது உலக இயற்கை. இப்போராட்டத்தில் அறத்தின் வெற்றிக்குத் துணை புரியவது தெய்வசக்தி. இந்த தெய்வசக்தியே இராமனாகப் பிறந்தது" என்று அறிஞர் பிஸ்ரீ பொருள் கூறுவார்.

தீயோர்களை தண்டிக்கவும், சரணம் என்று வந்தடைந்த நல்லோர்களைக்

காப்பாற்றவும் பரம்பொருளான திருமால் பல அவதாரங்களை எடுத்தான் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. இவைகளுள் முக்கியமானவை மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகவதாரம், நரசிங்க அவதாரம், வாமனாவதாரம், பரசுராம அவதாரம், ராமாவதாரம், பலராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், கல்கி அவதாரம் என்ற பத்து அவதாரங்களையும் உரிய நேரத்தில் செய்து திருமால் உலகத்தை தருமநெறியில் செலுத்துகிறான் என்பது இந்து சமயங்களின் கொள்கை.

ஜீவன்களாகிய நாம் வாழ்க்கைப் பரிணாமத்தில் முன்னேறுவதற்கு கடைத்தேறுவதற்கு இறைவன் பெருங்கருணை துணை புரிகிறது. இறையருள் கீழே இறங்கிவந்து துணை நிற்கிறது. அருள்புரிகிறது. இதனை மனதில் கொண்டு கம்பனுடைய 'இராமாவதாரத்தில்'' அவதாரத்தில் அவதாரம் எவ்வாறு கதைப்போக்கில் கூறப்பட்டிருக்கிறது என்பதைக் காண்போம்.

## வாமனாவதாரம் :

விசுவாமித்திர முனிவரின் கட்டளைப்படி தாடகையைக் கொன்று அவரது வேள்வி நடைபெறும் இடத்திற்கு முனிவரோடும், இளையவனோடும் வந்துகொண்டிருந்தான் இராமன், பல தொலைவுகள் கடந்து கௌசிகநதி ஓடும் இடத்திற்கு வந்தார்கள். அருகிலுள்ள பைம்பொழில் இடத்தில்தான் முனிவர் வேள்வி செய்வதாக இருந்தது. அது சித்தாஸ்ரமம் என்று அழைக்கப்பட்டது. புனிதமான இடம். இவ்விடத்தின் சிறப்பு என்ன என்று இராமன் கேட்க விசுவாமித்திரன், ''தங்கள் கணவரைத் தவிர வேறு தெய்வம் யாதும் இல்லை என்று கூறும் கற்புடைய மங்கைமார் சிந்தைபோல தூயது என்றும், நான்மறைகளுக்கும் அறியப்படாதவனாயும், தேவர்களின் அறிவிற்கும், பிறர்களுக்கும் எட்டாதவனாக இருக்கும் செங்கண்மால் இங்கே இருந்து நூறு யுகங்கள் தவம் செய்த இடம் என்று சொன்னார்.

*"எங்கள் நான்மறைக்கும், தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச்*
*செங்கண்மால் இருந்து மேல்நாள் தவம் செய்தது அன்றே"*
*"ஈர் ஐம்பது ஊழிக்காலம் இருந்தனன் யோகத்து"*

என்று கம்பன் கூறுவான்.

மாவலியின் வரலாற்றை முனிவர் கூறுகிறார். மாவலி அசுரகுலத்தைச் சேர்ந்தவன். பல கல்யாண குணங்களை உடையவன். இரணியகசிபுவின் வம்சத்தில் வந்தவன். பிரகலாதன் பிறந்த வம்சத்தில் வந்தவனல்லவா! திக்குவிஜயம் செய்தபொழுது, தன்னிடம் தோற்றுப்போன மன்னர்களிடமிருந்த ஏராளமான பொருட்களையெல்லாம் கவர்ந்துகொண்டு தன்னிடம் வந்து கேட்பவர்களுக்கெல்லாம் வாரி வாரி வழங்கி வள்ளல்கள் கூட்டத்தில் அவனும் ஒருவன்.

மகாபலி சக்கரவர்த்தியின் பெருங்குணங்களில் ஒன்று வள்ளன்மை. மகாபலி என்ற சொல்லுக்கு மிக்க பலம் வாய்ந்தவன் என்பது பொருள் : இவனைப்பற்றி கம்பன்

*"ஊனம் இல் ஞாலம் ஒடுங்கும் எயிற்று ஆண்*
*ஏனம் என்னும் மாவலி என்பான்"*

என்று பேசுகிறான். வாமனாவதாரத்திலே பெரிய வடிவத்தோடு தனது ஒரு காலால் பூமியை அளந்தான். அந்த பூமியோ வராக அவதாரத்தின் ஒரு கோரப்பல்லில் ஒரு சிறு பகுதியில் அடங்கிக் கிடந்தது என்பது பொய்கையாழ்வார் கூற்று. அப்படிப்பட்ட அசுரபலம் படைத்தவன் மகாபலி என்பதை இங்கு வராகத்தை உவமையாகக் கம்பன் காண்பிப்பதில் வியப்பேதும் இல்லை.

தனது வல்லமையினாலே உலகம் முழுவதையும் வென்று தனது ஆட்சிக்குள் கொண்டுவந்து, வானவர்களும் செய்ய இயலாத மாபெரும் வேள்வியை செய்ய எண்ணினான். எதன் பொருட்டு என்றால் தன்னால் வெல்லப்பட்ட இவ்வுலகை அந்தணர்களுக்கு வாரி வழங்குவதற்காகத்தான்.

*"ஐயமில் சிந்தையன் அந்தணர்தம்பால்*
*வையமும் யாவும் வழங்க வலித்தான்"*
(பால – 411)

என்பான் கம்பன்.

இவ்வாறு வேள்வி செய்வது தேவர்களுக்குப் பொறுக்கவில்லையாம். எல்லாவற்றையும் வாரி வழங்கிவிட்டால் எங்கே உறைவது என்ற ஏக்கம். நேராகத் திருமாலை வந்து வணங்குகிறார்கள். மாவலியின் வேள்வியைப் பற்றியும், அந்தணர்களுக்கு எல்லாவற்றையும் வாரி வழங்க இருப்பதை முறையிடுகிறார்கள்.

வாரி வழங்குவது நல்லதுதானே ! இருந்தாலும் மாவலியை இவர்கள் நல்லவன் என ஒப்புக்கொள்ளவில்லை. தனது அசுரபலத்தினால் இவ் உலகைக் கவர்ந்தவன் – மேலும் அசுர வம்சத்தில் வந்தவர்கள் எவருமே கொடுத்ததில்லை. உலகத்தையே கவர்ந்து கடலிலே ஒளித்து வைத்திருந்த இரண்யாட்சன் வம்சத்தில், இரணியன் வம்சத்தில் வந்தவன்தானே ? எனவே

*"தீயவன் வெந்தொழில் தீர் என நின்றார்"*

மாவலியைத் தீயவன் என்றும், இவன் செயல்கள் கொடுந்தொழில் என்று தேவர்கள் கருதி திருமாலிடம் முறையிட்டார்களாம்.

திருமாலும் அவர்களுக்கு அபயம் தந்து அவர்கள் துயர்துடைப்பேன் என்று சொன்னார்.

மூன்று காலங்களையும் தனது தவவலிமையால் உணரக்கூடியவரும் அறிவுமிக்க வருமான தவசிரேஷ்டர் காசியபர் என்பவருக்கும் அதிதி என்ற அவரது மனைவிக்கும் மகவாய் பிறந்தானாம் திருமால்.

*"காலம் நுணித்து உணர் காசியன் என்னும்*
*வாலறிவற்கு அதிதிக்கு ஓர் மகவு ஆய்*
*நீல நிறத்து நெடுந்தகைவந்து, ஓர்*
*ஆல்அமர்வித்தின் அருங்குறள் ஆனான்"*
(பால – 413)

என்று கம்பன் வர்ணிக்கிறான். இவ்வாறு குறுகியிருந்தாலும், நெடுமாலின் எல்லையற்ற தெய்வசக்தி முழுவதும் இக்குறளின் வடிவிலே அடங்கிக் கிடந்தது.

"நீலநிறம் கடலின் நிறத்தையும், வானத்தின் நிறத்தையும் நினைவூட்டி, எல்லையற்ற பரம்பொருள் திருமால் என்பதை உணர்த்துகிறது. அந்த நீல மேனி நெடியோன் இந்தக் குள்ளனாகி வந்த முரண்பாடு சிந்தனைக்குரியது. மகாபலியின் குணாதிசயத்திலுள்ள முரண்பாட்டையும் வந்த திருவுருவம் அல்லவா?" என்று அறிஞர் பி.ஸ்ரீ. எழுதுகிறார்.

"ஊனம் இல் ஞாலம் ஒடுங்கும் எயிற்று ஆண் ஏனம் என்னும் திறல்மாவலி" க்கு இணையாக, அன்று ஏனமாக வந்து உலகைக்காத்து ரட்சித்தானோ அந்தப் பரம்பொருள், இங்குவந்து "ஆல் அமர்வித்தின் அருங்குறளனாக" வந்து அவதரித்தது முரண்பாடுதானே !

வாமனன் அவதரித்தபோது சூரியன் அவனுக்கு காயத்திரி மந்திரத்தை உபதேசித்தான். காசிப முனிவர் தர்ப்பையில்லால் முறுக்கேற்றிய அரைநாணை அணிவித்தார். பூமி தேவி மான்தோல் வழங்கினாள். சந்திரன் தண்டம் கொடுத்தான். பிரம்மதேவன் கமண்டலம் கொடுத்தான். அதிதி – தாயார் – கௌபீனம் (கோவணம்) கொடுத்தாள். குபேரன் பிஷா பாத்திரம் கொடுத்தான். பார்வதி தேவி பிஷை இட்டாள். பரத்துவசா முனிவர் வேதங்களை வாமனனுக்கு ஓதுவித்தார். புராணங்களிலே இவ்வாறு வாமனனின் பிறப்பு கூறப்பட்டிருக்கிறது.

பிரும்மச்சாரியாக, தருப்பையின் அரைநாண் அணிந்தவனாக முப்பொழுதும் அந்தணச் சிறுவர்கள் செய்யும் சமிதாதானம் என்றும் சடங்கினை செய்து வருபவனுமாகி வாமனன் – கம்பன் இதனை

*"முப்புரி நூலினன், முஞ்சியன், விஞ்சை*
*கற்பது ஓர்நாவன், அனல்படுகையன்*
*அற்புதன், அற்புதரே அறியும் தன்*
*சிற்பதம் ஒப்பது ஓர் மெய்க்கொடு சென்றான்"* என்பான்.
(பால – 414)

மாவலி வேள்வி செய்யும் இடத்திற்குச் சென்றான் வாமனன். வருவதை அறிந்த "உலகுஎலாம் வென்றவனாகிய மாவலி முந்தி வியந்து எதிர்கொண்டான்.

உங்களை விட பெரிய அந்தணர்கள் யாரும் இல்லை. என்னைவிட பேறு பெற்றவர் யார் உளார் இங்கு என உளம் மகிழ்ந்து வாமனனை வரவேற்றான்.

*"நின்தனில் அந்தணர் இல்லை ; நிறைந்தோய்*
*என்தனினும் உயர்ந்தவர் யார் உளார் என்றான்"*
(பால – 415)

இது கம்பன் வாக்கு.

"உன்னைக்காட்டிலும் அந்தணர் யாரும் இல்லை. என்னைக் காட்டிலும் பாக்கியசாலி இல்லை" என்று இச்சகம் பேசுகிறான். இப்படியொரு குள்ளமான வடிவமா? என்கிற வியப்பை – உள்ளே மறைந்திருக்கும் இகழ்ச்சி மனப்பான்மையை மறைத்துக்கொண்டே இவன் எவ்வளவு கேட்கப்போகிறான் என்று எண்ணி இவ்வுபசார வார்த்தைகளை கூறுகிறானாம்.

இதை அறியாதவனா வாமனன் ! மாவலி கூறிய முகமனுக்கு இவனும் முகஸ்துதி செய்கிறான்.

"உன்னிடம் கொடை பெறுபவர்களின் விருப்பத்தைவிட அதிகமாக அவர்கள் கேட்காமலேயே மிகுதியும் வழங்கும் நீண்டகைகளையுடையோய், உன்னிடம் வந்தவர்கள் மாண்புடையவர் ; அல்லாதவர்கள் மாண்பு இல்லாதவர்கள்" என்று வாமனனும் உள்ளே இருக்கும் எண்ணத்தை – இவனிடமிருந்து – நில உலகை மீட்க தேவர்களின் வேண்டுகோளை – மனதில் கொண்டு எதிர்பேச்சு பேசுகிறான் இதனை கம்பன்

*"நீண்ட கையாய் ! இனிநின்றுழை வந்தோர்*
*மாண்டவர் ; அல்லவர் மாண்புஇலார்"* (பால – 416)
(மாண்டவர் – மாட்சியுடையவர்)

கூறுவான்.

வாமனன் எதிரே நிற்கிறான். அவனது சொற்களால், புகழ்ச்சியால் மனம் மகிழ்ந்து நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்கிறான். என்னுடைய காலால் மூன்று அடி மண் தருவாயா? உள்ளதாயின் எனக் கேட்டு முடிப்பதற்கு முன்னமே மாவலி "தந்தனன்" என்றான்.

அப்போது அவனுடைய குல குருவாகிய சுக்கிராச்சாரியார் தராதே என்று தடுத்தான். வந்திருப்பவன் யார் என்று உனக்குத் தெரியாது. ஆராய்ந்து பார்த்தால் மேகத்தைப் போன்ற நிறம் உடைய குறள்வடிவம் என்று எண்ணாதே ! முன்பு ஒரு காலத்தில் இந்த பூமியையும், அதனைச் சூழ்ந்துள்ள பேரண்டங்களையும் உண்டு உமிழ்ந்தவனாகிய திருமாலே என்பதை அறிந்துகொள் என்று கூறுகிறான்.

*"அண்டமும் முற்றும் அகண்டமும், மேல்நாள்*
*உண்டவான் ஆம் இது உணர்ந்துகொள்"*

எனக் கம்பன் பதிவு செய்கிறான்.

தனது குருவைப் பார்த்து, "எனது கை மேலாக நிமிர்ந்து நிற்க, தனக்கு இயலாதவகை தாழ்வது – தானே வந்து என் முன் தாழ்ந்து நிற்பது கரியநிறம் உடைய திருமாலின் கை என்றால் இதைவிட மேலான நன்மை எது இருக்கிறது என்று கூறினான். என் கைகொடுப்பதற்காக – தானம் கொடுப்பதற்காக மேலே இருக்க – உலகை உண்ட திருமாலின் கை கீழே இருந்து அதைப் பெற்றுக் கொள்வதற்காக இருக்கிறதே இதைவிட மேலான பெருமை ஏதுமே இல்லை என்பது மாவலியின் கருத்து. வேண்டியவர், வேண்டாதவர் என்று வேறுபாடு கருதாது, தாம் செய்ய நினைந்த தானத்தை உயர்ந்தோர் கொள்க என்று சொல்லுவாராயின், இந்த வாமனனைவிட உயர்ந்தவர்கள் யார் இருக்கப் போகிறார்கள். தானம் கொடுப்பது என்று வரும் பொழுது தன் இன்னுயிரையே வேண்டினும் கொடுப்பர். வள்ளன்மை படைத்தவர். கொள்ளுதல் தீது – கொடுப்பது நன்று. இங்கு "நல்லாறெனினும், கொள்ளல் தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்ற திருக்குறளின் கருத்து இங்க கூறப்பட்டிருக்கிறது. இது கம்பனின் கைவண்ணம்.

"இழிவு நேர்ந்தபோதும் யாசிப்பவரே இறந்தோர் ; தானம் – கொடையில் சிறந்து விளங்குபவர்கள் தாம் இறந்தாலும் புகழுடம்புடனே வாழ்பவர் ஆவார். கொடை கொடுப்பதை தடை செய்வார் பகைவர்களுக்கு ஒப்பானவர். அவர்கள் கொடுப்பவரையும் – வள்ளல்களையும் கெடுத்து விடுவார்.

தானம் பெறவந்த – யாசிப்பவரையும் கெடுப்பார். அதோடு மட்டுமா தன்னையே கெடுத்துக்கொள்வார். அதைவிட கேடு, துன்பம் ஏதேனும் உள்ளதா? செல்வம் கையில் உள்ளபோதே அள்ளி, அள்ளித் தரவேண்டும். உள்ளத்தை கெடுப்பது உலோகம் அல்லவா? அறஞ்சொல்லவந்த நீதி நூல்கள் அனைத்தும் இதைத்தானே சொல்லுகின்றன என்று கொடையின் சிறப்பை குருவிடம் விரிவாக எடுத்துச் சொல்லுகிறான் மாவலி.

*"அடுப்ப வரும் பழி செய்ஞ்ஞரும் அல்லர்*
*கொடுப்பவர் முன்பு கொடேல் என நின்று*
*தடுப்பவரே பகை தம்மையும் அன்னார்*
*கெடுப்பவர் அன்னது ஓர் கேடு இல்லை – என்றான்"* (பால – 423)

என கம்பர் இதனை அற்புதமாகப் பதிவு செய்கிறார். மேலும் குரு சுக்கிராச்சாரியாரைப் பார்த்து, "பெருந்தன்மை இல்லாத சுக்கிரனே ! நாடி வந்திருக்கும் ஒருவருக்கு – செல்வம் உடையவர் பொருளை எடுத்துக் கொடுப்பதற்கு முன்பு, கொடுக்கவேண்டாம் என்று தடுப்பது – தடுத்து நிறுத்துவது உனக்கு அழகாகுமா? கொடுப்பதை விலக்கும் கொடியோய், நீயும் உன்னைச் சார்ந்து நிற்கும் சந்ததிகளும், உண்ண உணவும், உடுக்கத் துணியும் இல்லாமல் விடுகின்றாய் இச்செயல்மூலம்" என தனது குருவைக் கடிந்து கொள்ளுகிறான்.

*"எடுத்து ஒருவர்க்கு ஈவதன் முன்னம்*
*தடுப்பது நினக்கு அழகிதோ, தகவு இல்வெள்ளி*
*கொடுப்பது விலக்கும் கொடியோய் உனது அற்றம்*
*உடுப்பதுவும், உண்பதுவும் இன்றி விடுகிறாய்"* (பால - 425)

என்ற கம்பனுடைய இந்த வரிகள் "கொடுப்பதும் அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூம், உண்பதூம் இன்றிக் கெடும்" என்ற வள்ளுவரின் கருத்தை நமக்கு நினைவூட்டுகிறது.

முன்பு வாமனனை "கொடியன்" என்று குலகுருவும், மந்திரியுமான சுக்கிரனின் சொற்களை ஏற்றுக் கொள்ளதவனாகி, குறளான வாமனைப் பார்த்து நீ கேட்ட மூன்று அடி அளவுள்ள நிலத்தை ஏற்றுக்கொள் – அளந்துகொள் என்று சொன்ன உடனேயே வாமனனாய் வந்த திருமால் மாவலி கொடுக்க இருக்கும், கையில் வார்க்க இருக்கும் நீருக்காக கையை நீட்டினானாம். இங்கே கம்பன், வந்தவனோ குறளன், – குள்ளமான உருவத்தை உடையவன்; ஆனால் "நெடியவன் குறுகிய கைநீரில் நீட்டினான்' என்பதை பின்னாலே திருமால் எடுக்க இருக்கும் பேருருவத்தை நினைவூட்டும் வகையில் "நெடியவன்" என்ற சொல்லை அமைத்துப் பாடியதை கண்டு வியக்கிறோம்.

இந்த இடத்திலே கம்பனிலே மிகைப்பாடல்கள் குறிப்பிலே இரண்டு பாடல்கள் வருகின்றன. இச்செய்திகள் விஷ்ணு புராணம், பாகவதம் போன்ற புராணக் கதைகளில் சொல்லப்பட்டிருக்கும் செய்தி. வாமனன் கையில் தானம் கொடுப்பதற்காக தனது குண்டிகையிலிருந்து நீரை ஊற்ற முற்படும்பொழுது, சுக்கிராச்சாரியார் வண்டின் ரூபம் எடுத்து குண்டிகையின் துவாரத்தை அடைத்துத் விடுகிறான். இதனை உணர்ந்த வாமனம், தனது வலக்கையில் மோதிர விரலில் அணிந்திருந்த 'பவித்திரம்' என்ற தருப்பையின் மூலம் துவாரத்தைத் குத்த அது அங்கே வண்டின் ரூபத்தில் இருந்த சுக்கிரனின் ஒரு கண்ணில் குத்தி குருடாக்கியது. இனியும் இங்கிருந்தால் ஆபத்து என அறிந்து குருவும் ஒதுங்கிச் சென்றார் என்கிற செய்தி பதிவாகி உள்ளது. கொடுக்காதே என்று சொன்னது மட்டுமல்லாமல், அதனைத் தடுத்து நிறுத்திய சுக்கிரனுக்கு நேர்ந்த கதியை கண்டு, தடுப்பது எவ்வளவு கொடுமையானது என்பதையும், அதனால் ஏற்படும் விளைவுகள் பயங்கரமானவைகள் என்றும் உணர முடிகிறது. இனி கம்பனில் நுழைவோம்.

மாவலி வாமனன் கையிலே தானம் கொடுப்பதற்கான நீரை ஊற்றியதும், அதனை குறளனாகிய வாமனன் தீண்டியதும் நிமிர்ந்து விடுகிறானாம் ! என்ன நிமிர்வு ! என்ன அற்புதமான வளர்ச்சி ! பார்த்தவர்கள் பிரமிக்கிறார்கள்.

*"கயம் தரு நறும் புனல் கையில் தீண்டலும்*
*பயந்தவர்களும் இகழ் குறளன் பார்த்து எதிர்*
*வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்*
*உயர்ந்தவருக்கு உதவிய, உதவி ஒப்பவே"* (பால - 427)

என்பது கம்பன் வாக்கு. இச்செய்தியைப் பற்றி அறிஞர் பி.ஸ்ரீ கூறுவதைக் காணலாம். "இந்த வளர்ச்சி நிலையில் மூன்று முக்கியமான படிகளையும் காட்டி விடுகிறான். முதல் முதல் எல்லோரும் இகழத்தக்க நிலையில் இருந்தவன். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவர்கள் கண் எதிரிலேயே, வியப்பிற்கு உரியவான நிற்கிறான். பிறகு பயத்திற்கும் உரியவனாகி விடுகிறான். முதல் முதல் இகழ்ச்சி, பிறகு பிரமிப்பு ; கடைசியாக பெரும் பயம்" என்று இதனை விவரிக்கிறார்.

திரிவிக்கிரமானான வாமனனின் நின்ற கால், நிலத்தின் பரப்பையெல்லால் மூடி, இந்த பூமி சிறிய அளவுடைய தென்று, அப்புறம் போய் பரவுவதற்கு இடமில்லாமல் போய்விட்டது. ஒரு காலை கீழே நிறுத்தி மறுகாலை வானாக்கி உயர்த்தி வானமண்டலத்தையே சிறிதாக்குமாறு செய்து, மீண்டும் இடம் கிடைக்காமையால், உம்பரை வென்ற கால் மீண்டது. கம்பன் லாவகமாக இச்செய்தியைக் கூறுகிறான்.

*"நின்றகால் மண்எலாம் நிரப்பி, அப்புறம்*
*சென்று பாவிற்றிலை, சிறிது பார் எனா,*
*ஒன்ற வானகம் எல்லாம் ஒடுக்கி உம்பரை*
*வென்ற கால் மீண்டது வெளி பெறாமையே"* (பால – 428)

ஓர் அடியால் பூமியை அளந்தாயிற்று ; ஓர் அடியால் வானகத்தை அளந்தாயிற்று – மூன்றாம் அடிக்கு இடம் எங்கே என்று நிற்கிறானாம் குறளன். மாவலி மலைத்து நிற்கிறான். முன்னே குரு சொன்ன வார்த்தைகள் நினைவிற்கு வருகிறது. "வந்திருப்பவன் குறளன் அல்லன். அண்டமும், முற்றும் அகண்டமும் மேல்நாள் உண்டவனாகிய திருமால்" என்பதை இப்பொழுது உணருகிறான்.

மூன்றாவது அடிக்கு எதைக் கொடுப்பது என்று சிந்திக்காமல் தன் தலையையே மூன்றாவது அடிக்காக கொடுப்பதற்காக அந்தணனை வணங்கி நின்று முடியை தாழ்த்துகிறான். வாமனன் தனது வலது பாதத்தை அவன் தலையிலே வைத்து லேசாக அழுத்தினான். மாவலியை நேராக பாதளலோகத்திற்கு கொண்டு போய்ச் சேர்த்தது. இங்கு ஒரு செய்தியை நினைவுகூற வேண்டும்.

தேவர்கள் எல்லோரும் "தீயவன் வெந்தொழில் தீர்" என்று திருமாலிடம் வேண்டினார்கள். அவனும் ஒப்புக்கொண்டான். ஆனால் பக்தனாகிய பிரகலாதனுக்கு கொடுத்த வரம் ஒன்று இருக்கிறதல்லவா? "உன்னுடைய தந்தையாகிய இரணியனை உன் முன்னமேயே கொன்று உடலைப் பிளந்தேன். அப்பொழுதும் என் பால் நீ வைத்த அன்பு – பக்தி, வைத்தாய். இதற்கு என்ன கடப்பாடு செய்யவேண்டும் கேள்" என்று நரசிங்கப்பெருமான் கேட்க, பிரகலாதன், தன்குலத்தோர் அனைவரையும் காத்து, ரட்சிக்க வேண்டும் என்று சொல்ல, நரசிங்கப்பெருமாள் கொல்லோம். இனி உன் குலத்தோரை,

குற்றங்கள் எல்லை இலாதன செய்தாரே என்றும்'' சொன்ன வார்த்தைகளை நினைவில் கொண்டு, தேவர்கள் ''தீயவன்'' என்று மாவலியைச் சொன்னாலும் பிரகலாதன் வழிவந்த மாவலியை கொல்லாது விடுத்து அவனிடத்திலே தானம் பெற்று, விண்ணையும், மண்ணையும் மீட்டு மீண்டும் மாவலியை பாதள உலகத்தின் சக்கரவர்த்தியாக செய்கிறான். இன்றும்கூட கேரளத்தில் திருவோண நட்சத்திரம் வரும் நாளன்று ''ஓணம்'' பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அன்று மகாபலி பாதாளலோகத்திலிருந்து மண்ணுலகத்திற்கு வந்து – தனது மக்களைப் பார்ப்பதற்காக வருகிறான் என்பதை உணர்த்த பூக்கோலம் இட்டு அவனை வரவேற்கிறார்கள் என்ற ஐதீகம் இன்றும் உள்ளது.

வாமனனாக வந்து, திரிவிக்கிரமனாக உயர்ந்து, உலகை அளந்து கொண்ட இச்செய்தியையெல்லாம் கம்பன் தனது காவியத்திற்குள் – இராம காதைக்குள் சொல்லவேண்டுமென்ற உந்துதல் எவ்வாறு – எப்படி வந்தது என்று சிந்திக்க வேண்டுமல்லவா?

கம்பன் ஆழ்வார் பாசுரங்களிலே மிகுந்த ஆழுங்கால்பட்டவன் ; ஊன்றி ஊன்றிப் படித்தவன். ஆழ்வார்களது சொற்றொடர்களையெல்லாம் தனது காப்பியத்தில் அப்படியே புகுத்தி எழுதியவன். எனவேதான் வாமன மூர்த்தியின் கதை அவனது உள்ளத்திலே – கவிதையாக ஊற்றெடுக்க ஆழ்வார்களின் பாடல்கள் பேருதவியாக இருந்தது. வாமனாவதாரத்தைப் பற்றிப் பாடாத ஆழ்வார்களே இல்லை. பன்னிரண்டு ஆழ்வார்களும் உருகி, உருகிப் பாடிய பாசுரங்கள் கம்பனுக்கு உறுதுணையாக நின்றன. ஆழ்வார்கள் – குறளனாய் வந்து – மூன்று அடிமண் யாசித்துப் பெற்று, திருவிக்கிரமனாக வளர்ந்து மண்ணையும் – விண்ணையும் தன் திருவடி கொண்டு அளந்த காட்சிகளை – ஆழ்வார்கள் எல்லோருமே – வாமனஸ்ருபத்திலே ஈடுபட்டு – தங்களைக் கரைத்துக்கொண்டு – பாசுரம் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள்.

இவர்களிலே இரண்டு பேரை குறிப்பிடாமல் இருக்கமுடியாது. ஒருவர் ஆண்டாள். மற்றொருவர் நம்மாழ்வார்.

ஆண்டாள் நாச்சியார், 'நாச்சியார் திருமொழி', 'திருப்பாவை' பாசுரங்களிலே வாமனாவதாரத்தை அனுபவித்துப் பாடியிருக்கிறார். அதுவும் – திருப்பாவையிலே – பரந்தாமன் – வாமனனாகி வந்து மூன்று அடி மண் இரந்ததை சொல்லவேண்டும் என நினைக்கிறார். இதனை 3–ஆம் பாசுரத்தில் ''ஓங்கி உலகளந்த உத்தமன்'' என்றும், 17 ஆம் பாசுரத்திலே ''அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த'' என்றும் 24–ஆம் பாசுரத்திலே ''அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி'' என்றும் மனமுருகித் துதிக்கிறாள். வாமனன் கேட்டது 3 அடி மண் – இதனை நினைவில் கொண்டு 3 பாசுரங்களிலே – அதனை நினைவுபடுத்தி – பரந்தாமன் பெருவிளையாட்டை எவ்வளவு அழகாக அற்புதமாக – விவரிக்கும் பொழுது நமக்கு வியப்பு மேலிடுகிறதல்லவா?

நம்மாழ்வார் பாசுரங்களில் தன்னையே நாயக – நாயகியாகப் பாவித்து எழுதியவை பலப்பல. அவற்றுள் ஒன்று ; தன்னுடைய மகள் பரமன் மீது வைத்து வந்த காதலால் எவ்வாறு

மாறி இருக்கிறாள் என்பதை மற்றவர்களிடம் சொல்லுகிறாளாம் தாய். மாணியாக –குறளனாக வந்த – பரந்தாமன் அளந்திட்ட இந்த நிலத்தில் உள்ள மண்ணை தனது சிவந்த கைகளால் – துழாவித் துழாவி வருகிறாள். ஆஹா ! இது அவன் அளந்த மண் அல்லவா? அவனுக்குரிய மண்ணல்லவா? என்று ஏங்கி, ஏங்கி மண்ணைத் துழாவித் தன் தாபத்தைத் தீர்த்துக் கொள்ளுகிறாளாம். இதனை "மண்ணை அளந்து துழாவி, வாமனன் அளந்த மண் இது" என்று நம்மாழ்வார் கூறும் பொழுது அவரது பக்திப் பெருக்கை – அவதாரங்களில் அவருக்கு உள்ள ஆழங்கால்பட்ட தன்மையை கண்டு நாம் பிரமித்து நிற்கிறோம். உள்ளம் சிலிர்க்கிறது.

இவ்வாறெல்லாம் வாமனாவதாரத்தை அனுபவித்தவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் மட்டுமா அனுபவித்தார்கள். சங்க காலப்புலவர்களும் இந்த வாமன அவதாரத்தைப் போற்றிப் புகழ்கிறார்களே ! முல்லைப்பாட்டிலே "நேமியோடு வலம்புரி பொறிந்த மாதங்கு தடக்கை நீர் செலநிமிந்த மாஅல்போல" என்றும், பரிபாடலிலே கடுவன் இளவெயினார், வாமனாவதாரம் செய்து உலகங்களையெல்லாம் அளந்தபோது, பெருமாளின் ஊன்றிய திருவடி ஏழு உலகங்களையும் பொருந்தி நின்றது என்ற கருத்தை "கீழ் ஏழ் உலகமும் உற்ற அடியினை" என்று குறிப்பிடுகிறார்.

எனவே கம்பன் ஆழ்வார்களின் பாசுரங்களையும் சங்க இலக்கியங்களையும் புராண இதிகாசங்களையும் கற்றுத் தெரிந்து தேர்ந்து எங்கெல்லாம் தனது காப்பியத்தில் அச்செய்திகளைச் சொல்ல முடியுமோ அங்கெல்லாம் சொல்லி மனதிற்கு நிறைவு தேடிக் கொள்கிறான். கவிஞனுக்கு அழகு இதுதானே ! கம்பன் தமிழ் நம்மை பிரமிக்க வைக்கின்றது; சிந்திக்க வைக்கின்றது ; மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுகிறது.

# கம்பனில் மூன்று மாயங்கள்

முனைவர் க. முருகேசன்

## முன்னுரை :

பரம்பொருளை வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் என்பதை உணர்ந்த பாத்திரமாகவும், முக்கோடி வாழ்நாளும் முழுதுடைய பெருந்தவமும், பெறற்கரிய வரமும் பெற்ற ஈடு இணையற்ற வீரனாகவும் படைக்கப்பட்டுள்ள எதிர்நிலைத் தலைவன் இராவணன். காப்பியங்களிலும், புராணங்களிலும் உயர்ந்த உன்னத குணங்களைக் கொண்டு திகழும் தலைமை மாந்தர்களைப் படைப்பதைவிட, அறங்கடந்த செயலை அஞ்சாமல் செய்து நஞ்செனும் திருவுருவாய் விளங்கக்கூடிய எதிர்நிலைப் பாத்திரத்தைப் படைத்தளிப்பதில்தான் படைப்பாளியின் – கவிஞனின் ஆளுமைத்திறன் மறைந்திருக்கிறது. கம்பனின் காவியத்தில் ஏழு உலகங்களையும் காத்து அருள்செய்கின்ற பரம்பொருளாகிய இராமனுக்கு நிகராகக் காட்டப்பட்டவன் இராவணன். சீதையின் மனதை மாற்றுவதற்காக இராவணன் இராமனாக எண்ணியதைப் பற்றியும், அசோக வனத்தில் துன்பத்தில் உழன்று அனலிட்ட மெழுகாய் உருகித்தவிக்கும் சீதையை இராமன் வந்து காப்பற்றவில்லை எனில் அவன் இராவணனாகக் கருதப்படுவான் என்று அனுமன் பேசும் வீரஉரையும் இதற்குத் தக்க சான்றுகள் எனலாம்.

இறைவன் இன்னருளை முன்னிறுத்தித் தான் இயங்கும் பெரும்பேறாகிய வாழ்வில் தனியாக வேண்டத்தக்கதென்று ஒன்றில்லை ; வேண்டும் விருப்பமும் இறைவனுடையதே எனக் கருதும் சாருகேசியாகிய இராவணனின் கரையாத வலிமை கொண்ட இதயம், சூர்ப்பனகையின் கொடுஞ் சொற்களாகிய அமுதநஞ்சால் சற்றுக் கலங்கியது ; வீசும் வாடைக் காற்றில் அனைத்துயிரும் நடுங்கித் துன்புறுவதைப் போன்று சூர்ப்பனகையின் வஞ்சகச் சொல்லெனும் புயல்காற்றால் இராவணனின் மனம் சிதைக்கப்பட்டது. தன்னையும், தம்பியையும், மூக்கறுபட்ட தங்கையையும், தன் நாட்டையும் கூட நினைக்க இயலாத இராவணன் தன் நெஞ்சில் பதிய வைத்துக்கொண்ட மங்கையாகிய, சீதையை மறவாதவனாகிறான்.

அவனுடைய மனதில் பதிந்த ஓவியத்திற்கு மேலும் மேலும் வண்ணம் தீட்டும் செயல்கள் நடைபெறுவதாகக் காட்டும் கம்பன், அதற்காக வாய்மை கடந்த மாய காரியங்களைச் செய்யத் துணிந்த இராவணனைக் காட்டுகின்றான். பஞ்சவடியில் கண்கள் இருபதும் அள்ளிச் சுவைத்த சீதையின் நினைவு ஊனிலும் உயிரிலும் கலந்துவிட்ட காரணத்தால், தன் தம்பியர் முதல் மனைவியாகிய மண்டோதரி வரை பல்லோரும் அறமுரைத்தபோதும் யாருடைய சொல்லையும் இராவணன் செவி மடுக்கவில்லை. நினைத்த ஒன்றை அடைந்தே தீருவது என்ற தீரா வேட்கையும் அபரிமிதமான ஆற்றலும் இராவணனை பல மாயங்களைச் செய்யத் தூண்டுகின்றன. அவ்வாறான மாயங்களை வடிவமைப்பதற்கும், அவற்றைக் களத்தில் இறக்கிச் செயல்பட வைப்பதற்கும், அந்த மாயங்கள் வெற்றி கொண்டுவிட்டால் மெய்யாகிய வாய்மையின் வலிமை குறைந்துபோய் விடுமே என்ற கம்பனின் எண்ணம் காரணமாக இருந்திருக்கும் எனத் துணிந்துரைக்கலாம்.

## மாய மான் என்னும் முதல் மாயம் :

கௌதமன் வேள்வியின் போது இராமனுடைய கணையால் கடலில் எறியப்பட்ட போதும், தண்டகாரண்யத்தில் மான் வடிவில் சென்று இராமனைத் தாக்க முயன்ற போதும் உயிர் பிழைத்த மாரீசன், மாய மானாக வடிவெடுக்கும் சூழலில் இம்முறை தான் பிழைப்பது அரிது என்பதை உணர்ந்தவனாகி மாய வஞ்சமே வழியென உரைத்த இராவணனின் வஞ்சக வார்த்தைகளுக்கு வடிவம் கொடுக்கச் சம்மதித்தான். கம்பனின் காவியத்தில் மானாக வடிவெடுக்கும் மாரீசன் இராவணனுக்கு நல்லன சொல்லிய போது ஏற்காத செயல் கண்டு மாயமாகிய வஞ்சனை வேண்டாம், ''அமர்த்தலை வென்று கொண்டு, உன் மறத்துறை வளர்த்தி மன்ன'' (3272) என அறிவுறுத்தினான். அறிவுரைக்கு மனங்கருதாத இராவணன், ''பொன்னின் மான் ஆகிப் புக்க, பொன்னை மால் புணர்த்துக எனக் கட்டளையிட மாரீசனுக்கு மாயா மார்க்கம் உணர்த்தப்படவே, மாயமான் அதற்கு அவன் செல்லலானான்'' என்ற கோவைக் கம்பன் கழகப் பதிப்பின் குறிப்பு இங்கு சுட்டத்தக்கது.

நச்சு நீரில் தப்பிக்க முடியாத மீன்போலத் துடித்த மாரீசன் தனக்கு அழிவு உறுதி என்பதால் விரிகின்ற சுற்றத்தை நினைந்து வருந்தி பொன்மான் உருவம் கொண்டு ''நிலையா மன வஞ்சனை நேயம் இலா, விலை மாதர்கண் யாரும் விழுந்தனவே'' தோன்றினான். இது கைதவம் (வஞ்சனை) என்றுணராத சீதை இராவணன் அழிவும், அறத்தின் புத்துயிர்ப்பும் ஒரு சேர நிகழும் காலம் நெருங்கியதால் மயங்கினாள்.

*"ஆணிப் பொனின் ஆகியது ; ஆய் கதிரால்*
*கேணில் சுடர்கின்றது ; திண் செவி, கால்,*
*மாணிக்க மயத்து ஒரு மான் உளதால் ;*
*காணத் தகும் என்றனள், கை தொழுவாள்"*

(மாரீசன் வதைப்படலம், பா.3285)

என்ற கவி வரிகளில் பளபளக்கும் பொன்மேனியும் மாணிக்கக் காதுகளும் கால்களும் கொண்டிருந்த மானை உண்மையென இராமன் நினைக்க, அதுவே வஞ்சனை என இலக்குவன் நினைத்த தன்மையும், ''பாயும் உருவோடு இது பண்பு அலவால் மாயம்'' எனத் தடுத்த அறிவுக்கூர்மையும் பயன் தரவில்லை. விதி முன் அழைத்துச் செல்ல அதன்பின் போகும் மாந்தர்களைப் போல மாய மானின் பின்சென்ற இராமனின் உள்ளம், ''மன் உயிர்தாம் பல் ஆயிரம் கோடி பரந்துளதால் இல்லாதன இல்லை இளங்குமரா'' என இலக்குவனை மறுத்துரைக்கத் தூண்டியது.

விதியெனும் வலிமை தவறாமல் பயனளிப்பது போன்று மாயமான் தீமை விளைவிக்கத் தவறாது வந்து நின்றதைக் கண்ட இராமனின் மனம் நன்று இது என நினைக்க இராமாவதாரம் நோக்கம் நிறைவேற வழி கிடைத்தது. சீதையை அறியாமையால் ஏழையென்றும், இராமனை அறிவு மயங்கியதால் மாயையை உணராத மணாளனென்றும் சுட்டும் கருத்து இவண் நோக்கத்தக்கது. ஒப்புமை கூறமுடியாத உயர்வு மாயமானின் காட்சி. இதனை இளையானுக்குக் காட்டும் இராமன்,

*"தன் ஒக்கும் உவமை அல்லால், தனை*
*ஒக்கும் உவமை உண்டோ?*
*பல், நக்க தரளம் ஒக்கும் ; பசும்*
*புல்மேல் படரும் மெல்நா*
*மின் ஒக்கும் ; செம் பொன் மேனி ;*
*வெள்ளியின் விளங்கும் புள்ளி"*

(மாரீசன் வதைப்படலம், பா.3294)

என வருணித்து, இதனிடம் ஆசை கொண்டு உள்ளம் கரைந்துருகி, ஊர்வன பறப்பன யாவும் விரிசுடர் விளக்கம் கண்ட விட்டிலில் விழுவது போன்று மானைச் சூழ்வதாகக் காட்டி, அனைத்துயிர்களும் கண்ட போதே மதிமயங்கும் தன்மை கொண்ட இதனிடம் சீதை மயங்கியது தவறில்லை என்பதை இலக்குவனுக்கு நயமாக உணர்த்தினான்.

காவியப் போக்கில் பொய்ம்மைகளும் வஞ்சனைகளும் தோன்றி வலிமை கொள்ளும் இடங்களிலெல்லாம், துணை மாந்தர்களைக் கொண்டு அம்மாயத்தையும் பொய்ம்மைகளையும் களைவதற்குக் கம்பன் வழி தேடுவதைக் காணமுடிகின்றது. எதையும் ஆராய்ந்து பார்த்துச் செயலாற்றும் செயல் வீரனாகிய இலக்குவனின் சொல்லாற்றலின் வழியாக, "வெய்ய வல் அரக்கர் வஞ்சம் விரும்பினார் வினையின் செய்த கைதவ மான்" (3298) என்று மாயம் வெளிச்சமிட்டுக் காட்டப்படுகின்றது. ஆனால் காவியத்தின் குறிக்கோளை நோக்கிய பயணத்தில் பட்டொளிப் பிரவாகம் கூடச் சற்று மங்கிவிடுவதையே காணமுடிகின்றது.

*"முன்னமும் மக வாய் வந்த மூவரில் ஒருவன் போனான்*
*அன்ன மாரீசன் என்றே அயர்த்தனன் இதனை"*

(மாரீசன் வதைப்படலம், பா.3305)

என்றுரைத்த இலக்குவனின் விடாப்பிடியான அறிவுக் கூர்மையையும், கடமை உணர்வையும் சற்றேனும் எண்ணிப் பார்க்காத இராமன் மானினைத் தொடர்ந்தான். திருவிக்கிரமாவதாரம் எடுத்து மூவுலகையும் அளந்த திருவடிகள் சீதையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மாயமானின் பின்னே சென்றன.

விலைமகளிர் போலப் பொன்மான் அமைய, அம்மகளிரிடம் ஆசை கொண்டார் போலப் பிற விலங்குகள் வந்ததாகக் காட்டிய கம்பர், மானின் வேகத்தைக் கவிக் கூற்றாக வைத்து "மன்றல் அம் கோதை மாதர் மனம் எனப் போயிற்று அம்மா" (3309) எனக் கூறிப் போந்தார்.

*"காயம் வேறு ஆகி, செய்யும் கருமம் வேறு ஆகிற்று அன்றே?*
*ஏயுமே ; என்னின் முன்னம் எண்ணமே இளவற்கு உண்டே ;*
*ஆயுமேல் உறுதல் செல்லாம் ; ஆதலால், அரக்கர் செய்த*
*மாயமே ஆயதே, நான் வருந்தியது என்றான் வள்ளல்"*

(மாரீசன் வதைப்படலம், பா.3310)

என்ற பாடலில் அரக்கர் செய்த செயலை இராமன் உணர்ந்து, பகழியால் வென்றான் எனக் கம்பர் காட்டுகின்றார். வஞ்சனையின் வழித்தோன்றும் அனைத்தும் அதன்பாலே ஒக்கும்

என்பதற்கேற்ப, மாயமானாகிய மாரீசன் இராமனின் அம்புக்குச் சிதைக்கப்பட்டு குன்றெனக் கீழே விழும்போதும் கூட ; தன் குரலை இராமன் குரலாக மாற்றி ''சீதா லட்சுமணா'' என்று அழைத்து மடிகின்றான். இக்கூக்குரல்தான் சீதையின் உள்ளத்தில் இராமனுக்கு நேர்ந்த அபாயம் குறித்த அச்சத்தையும், சீதையின் பாதுகாவல் பணியிலிருந்து இலக்குவனைப் பிரியச் செய்து சீதையைத் தனிமைப்படுத்தும் உபாயமாகவும் மாறுகின்றது.

மாயத்தை உணர்ந்த இராமன், தன் தம்பியை திறமையாளன் என்றும் வல்லவன் என்றும், என்னைக் காக்க வந்த பேரறிவாளன் என்றும் சிறப்பிக்கின்றான். அத்துடன் மாரீசனின் கூக்குரலைச் செவிமடுத்த சீதையின் கலக்கத்தைத் தம்பி தீர்ப்பான் என்றும் அவன் மாட்சிமையை எண்ணி ஆறுதல் அடைந்த இராமன் பர்ணசாலையை நோக்கி விரைந்தான்.

அவதார புருஷனாகிய இராமனே, இலங்கை வேந்தனின் கைப்பாவையாகிய மாரீசனின் மாயைக்கு இலக்காகித் துன்புறுவதையும், பெண்மையெனும் மென்மை புதியன கண்டவிடத்துப் பெருவிருப்பம் கொண்டு மயங்குதலையும், அறிவுடையார் எல்லாம் உடையார் என்பதற்கேற்ப நுட்பமான அறிவுடையோர் எத்தீமையையும் முன்கூட்டியே ஆராய்ந்து நுண்ணறிவால் உணர்வதையும் கம்பன் நயமாகக் காட்டியுள்ளார்.

மாரீசனைப் பொறுத்தவரை இப்பொய்மான் வடிவம் எடுத்தலில் தோல்வியைச் சந்தித்தான். இல்லையெனில் அரக்கனாகிய கொடிய இராவணனின் கைகளில் சிக்கி இறப்பதைக் காட்டிலும் தூயவனாகிய இராமனின் வில் அம்புக்கு இரையாவது மேலானது என்று முன்பே ஒரு முடிவை, தனக்கான தெளிவான முடிவை அவனால் எடுக்க முடிந்தது. ஆனால் இராவணனைப் பொறுத்தவரை சீதையைக் கவர்ந்து செல்ல வேண்டும் என்ற வேட்கை அளவில் வெற்றி கிடைத்தாலும் கூட, அறம் வெல்லும் பாவம் தோற்கும். ஆதலால் சீதையெனும் நெருப்பால் அவனும் அவன் குலமும் நாடும் ஒருசேர அழிகின்றன. மாயையைத் தோற்றுவித்து வெற்றி காண நினைத்து இராவணனுக்குக் கிடைத்த வெற்றியும் மாயமாகவே அவன் முன்னால் நின்றது. உயிரிலும் ஒவ்வொரு அணுவிலும் அவனால் பதிவாக்கப்பட்ட வடிவழகைப் பருகிச் சுவைக்க முடியாத இராவணன் தோல்வியையே சந்திக்கிறான் என்ற வகையில் அவன் படைத்த ஒரு மாயம் தோற்றுப்போகின்றது.

## மாயா சனகனெனும் இரண்டாம் மாயம்

அறமற்ற சிறுநெறியிலேயே மனம் நிலைத்துப்போன இராவணனின் உள்ளம் சீதையை அடைதலாகிய வேட்கையிலிருந்து மீளாத நிலையில் ''வெல் வழி மாயை ஒன்று, வேறு இருந்து எண்ணி வேட்கை'' உற்றதாகக் கம்பர் காட்டும்போது,

*"உணர்த்துவென், இன்று நன்று ; ஓர் உபாயத்தின் உறுதி மாயை*
*புணர்த்துவென், சீதை தானே புணர்வது ஓர் வினையம் போற்றி ;*
*கணத்து, வன் சனகன் தன்னைக் கட்டினென் கொணர்ந்து காட்டின்-*
*மணத் தொழில் புரியும் அன்றே - மருத்தனை உருவம் மாற்றி"*

(மாயா சனகப் படலம், பா.7634)

என்று மகோதரன் இராவணனுக்கு உபாயம் உரைத்ததாகக் காட்டுகின்றான். அவனை மார்பு இறுகப் புல்லி அன்பு காட்டிய பின்பு, சீதையைக் காணச் சென்று காமவயப்பட்டு நிலவு வெப்பத்தைச் சுமப்பது போலவும், நஞ்சுதோய் அமுதம் உண்டவன் போலவும், வயிரத்தோள் மெலிந்தவனாகவும், ஆண்மை மாசுறுமளவுக்கு காமநோயால் வதைக்கப்பட்டவனாகவும் பல்வேறு அவத்தைகளுக்கு ஆளாகிய இராவணன் சீதையிடம் மனமிரங்கி அருள்தர வேண்டும் என விண்ணப்பம் செய்கின்றான்.

வாய் வந்தன சொல்லி, மனம் உவந்தன செய்யும் முறையற்றவன் எனக் கடிந்தும், தனக்கு உயிர் இராமனே என்றும் சீதை கூறியதைக் கேட்ட இராவணன் வெகுண்டு, "என்னை வென்று இராமன் உன்னை மீட்டபிறகு, அந்த இராமனோடு உயிர் ஒன்றாகியது என்று கூறுமாறு வாழ்வாய் போலும்" என பேரிடி முழங்கினான். மேலும்,

*கொற்றவாள் அரக்கர் தம்மை அயோத்தியர் குலத்தை முற்றும்*
*பற்றி நீர் தருதிர் ; அன்றேல், பகுந்தலை கொணர்திர் ; பாரித்து*
*உற்றது ஒன்று இயற்றுவீர் என்று உந்தினேன் ; உந்தை மேலும்*
*வெற்றியர் தம்மைச் செல்லச் சொல்லினென் விரைவின்"*

(மாயா சனகப் படலம், பா.7659)

என்று அயோத்தி மீதும் சனகன் மீதும் போர்தொடுக்கப் படையை ஏவிய செய்தியை உரைத்தான் இராவணன். மாரீசனை மாய மானாக அனுப்பிக் கிழவேடத்தில் தன்னை நிலத்தொடும் பெயர்த்து கொண்டு வந்த மாயச்செயல் செய்தார்க்கு அழிவே நிலைக்களன் என சீதை எண்ணிக் கொண்டிருந்த சமயத்தில் மகோதரன், ஏற்கெனவே இராவணனிடம் தீட்டிய சதித்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் மருத்தன் என்னும் அரக்கனைச் சனகன் வடிவு கொள்ளச் செய்து, அவன் வாய்விட்டுக் கதறுமாறு துன்புறுத்தி இராவணனுக்கு முன்பு நிறுத்தினான். மாய சனகனாகிய அவன் இராவணனை வணங்குவதைக் கண்ட சீதை, "தாய் எரி வீழக் கண்ட பார்ப்பு எனத் தரிக்கிலாதாள்" எனத் துயரடைந்து, புரண்டழுது, மெய்ம்மை சிதைந்ததோ, வஞ்சமோ வலியதோ, தருமமேயோ என அரற்றினாள்.

தன் தந்தையின் பெருமைகளையெல்லாம் நினைந்து நினைந்து மனம் வெந்த சீதை அவலச்சுவை மிகப் புலம்புமிடம் மிதிலை மன்னனுக்கு ஏற்றத்தைக் கொடுக்கத்தக்கது. சனகன் ஒவ்வொரு நாளும் வேதமுறையின்படி வேள்வி செய்பவன் ஆதலால் தன் மகள் இருந்த அயோத்திக்கு வந்து தங்கியதில்லை என்றும், பெண்ணாகிய தன்னைப் பெற்றலால் இன்று பெரிய பழியைப் பெற்றான் என்றும், சனகனின் பரம்பரையோடும் அழியுமாறு தான் செய்துவிட்டதாகவும், இப்பகைவர்கள் நந்தியம்பதியில் தவம் செய்து கொண்டிருக்கும் பரதனையும் கைப்பற்றுவர் ; அதைக்கேட்டு இராமனும் வாழமாட்டான் ; "விரதம் உற்று, அறத்தில் நின்றார்க்கு இவைகொலாம் விளைவ மேன்மேல்" என்றும் பலவாறு புலம்பி வருந்தினாள்.

மீண்டும் இராவணன் சீதையை இணங்குமாறு வேண்டும்போது, ''ஆம் உயிர் இவனை உண்ணேன் அஞ்சலை'' எனவும், ''புத்தேள் வலம் கிளர் வாளும் வேண்டில், வழங்குவென் யாதும் மாற்றேன்'' எனவும் அடிபணிந்து நின்றவனை, துச்சமெனத் தூற்றிய சீதையை வாளால் வெட்ட முனைந்த இராவணனை மகோதரன் தடுத்து நிறுத்தினான். அப்போது உயிரை விடுவான் போலக் கிடந்த மாயா சனகன் எழுந்து இராவணன் கருத்துக்கு இயங்குமாறு சீதையை நோக்கிப் பேசலுற்றான்.

*"என்னை என் குலத்தினோடும் இன் உயிர் தாங்கி ஈண்டு*
*நல் நெடுஞ் செல்வம் துய்ப்பேன் ஆக்கினை நல்கி வாளும்*
*உன்னை வெஞ் சிறையின் நீக்கி, இன்பத்துள் உய்ப்பாய், என்னா*
*பொன் அடி மருங்கு வீழ்ந்தான், உயிர் உகப் பொருமுகின்றான்"*

(மாயா சனகப் படலம், பா.7694)

என்றவாறு உயிர்நீங்கும் அளவுக்கு மாயா சனகன் பேசுவதைக் கேட்டு சீதை செவிகளை மூடிக்கொண்டு மயங்கிச் சினந்து கிளர்ந்தெழுந்து, ''இன் உயிர் வாழ்க்கை பேணி எந்தை இவ்வுரை கூறான் செவ்வுரை அன்று இது'' என்று எண்ணி தோற்றம்தான் சனகனே அன்றி சொல்லால் சனகன் இல்லை என்று தெளிகின்றாள். இது தந்தையின் அறநெறி வாழ்க்கையில் புதல்வி கொண்டிருக்கும் ஆழமான நம்பிக்கையைத் தெளிவாக்குகின்றது.

மாயா சனகனைக் கொன்றுவிடுவதாக இராவணன் அச்சுறுத்தியபோதும் சீதையின் மனம் மாயத்தை நம்பாதது கண்டு இராவணன் ஆத்திரமடையும் சமயத்தில், கும்பகர்ணன் வெஞ்சமரில் வீழ்ந்த செய்தி வந்து சேர்ந்தது. இங்குக் காம உணர்வோடு வந்து வீரம் குன்றி மானம் குறைபட நிற்கும் இராவணன் காதில், ''போரில் வீரமும் மானமும் இழுக்கா மாவீரனின் மரணம் விழுந்தது'' எனக் காம விருப்பமும், சோக மரணமும் அடுத்தடுத்து ஒரே நேரத்தில் நிகழுமாறு மாற்றிக் கொண்டு செல்லும் மகாகவியின் கவித்திறமை வியந்து பாராட்டுதற்குரியது.

அமிழ்தம் போன்ற செம்மைச் செயலையுடையவளாகிய திரிசடை சீதையின் மனதில் பதியும்படியும், கலக்கம் நீங்கும்படியும் மாயா சனகனாகப் பொய்வடிவம் பூண்டு வந்தது மருத்தனே என்பதை எடுத்துரைத்தாள். ஆக இரண்டாவது மாயமும் இராவணனுக்குத் தோல்வியையே கொடுக்கின்றது. சீதைக்கு மனக்கலக்கம் ஏற்படுத்தியதைத் தவிர வேறு பயனொன்றும் இம்மாயத்தால் இராவணனுக்குக் கிடைக்கவில்லை.

## மாயா சீதையெனும் மூன்றாவது மாயம்

நிகும்பலை யாகம் செய்வதன் மூலமாகப் பகைவரை அழித்துவிட முடியும் எனக் கூறிய இந்திரசித்து சீதைபோன்று ஒரு மாயாசீதையை உருவாக்கி அவளை அனுமனின் முன்பு வெட்டிக் கொன்றுவிட்டு அயோத்தி சென்று அங்குள்ளவர்களை அழிப்பதாகப் போக்குக் காட்டினால் பகைவர் கவனத்தைத் திசை திருப்பலாம் என்று ஆலோசனை கூறியதன்படி மாயாசீதை உருவாக்கப்படுகின்றாள்.

அனுமனின் முன்னிலையில் மாயா சீதையின் கூந்தலைப் பற்றி இழுத்து வந்த இந்திரசித்து அவளைக் கொல்வேன் என்றான். அசோகவனத்தில் தான் கண்ட அதே சீதைதான் இவள் என்று தவறாக எண்ணிய அனுமன் துயரக்கடலில் விழுந்த புழுவாகத் துடித்து, இந்திரசித்துவிற்க்கு பெண்ணும் கொல்லும் பாவம் கூடாது என்றும் புகழ்கெட்டொழியும் என்றும் அறிவுரை கூறியபோதும் அவன் ஏற்கவில்லை.

*"ஆளுடையாய் ! அருளாய் ! அருளாய் ! என்று*
*ஏழை வழங்குறு சொல்லின் இரங்கான்*
*வாளின் எறிந்தனன் ; மா கடல் போலும்*
*நீள்உறு சேனையினோடு நிமிர்ந்தான்"*

(மாயாசீதைப் படலம், பா.8878)

என்று மாயா சீதையை இந்திரசித்து வெட்டிவீழ்த்திய செய்தியைக் கம்பர் காட்டுகின்றார். இது மாயமாக இருக்குமோ என ஐயுற்ற வீடணன் இராமனிடம் கூறிவிட்டு வண்டு உருக்கொண்டு சென்று அசோகவனத்தில் இருக்கும் சீதையைக் கண்டபின்பு மனம் தெளிவடைந்து, நிகும்பலை வேள்வி செய்வதற்காகச் சென்ற இந்திரசித்துவை நோக்கிப் படைகளைத் திருப்பினான். நிகும்பலை யாகம் அழியவும், இந்திரசித்துவிற்க்கு இறுதிநாள் வாய்க்கவும் அவனால் உருவாக்கப்பட்ட மாயம் காரணமாகின்றது.

## நிறைவாக

ஆதலால் மூன்று மாயங்களும் அறங்கடந்த பகைவனுக்கு உதவவில்லை. அறத்தின்வழி நிற்கும் அன்புடைய நெஞ்சத்தவர்களால் மாயை என்னும் மயக்கங்கள் தெளிவிக்கப்பட்டு உண்மை உணர்த்தப்படுகின்றது. மாய மானாக வந்து சீதையை மயக்கியவன் அரக்கனே என்பதைத் தெளிவாக உணர்ந்து இலக்குவனை உரைக்கச் செய்த கம்பன், மாயா சனகனைப் பொய்ம்மை என்று திரிசடையின் மூலம் உணர வைத்ததுடன், மாயா சீதையெனும் மாயத்தை வீடணனின் நுண்ணறிவால் மயக்கமின்றித் தெளிவித்தான். காப்பியப்போக்கில் மூன்று மாயங்களை உருவாக்கிக் களத்தில் கொண்டு வந்து காட்டிய கம்பன், தர்மத்துடன் அம்மாயங்கள் போர் புரிந்தாலும், மாயங்கள் வெற்றி பெறாமல் இறுதியில் தர்மமே வெற்றி பெற்றதாகக் காட்டிக் காவியத் தலைமக்களின் பெருமை சற்றேனும் மாசுபடாமல் கொண்டு செல்லும் போக்கு கற்று உணர்ந்து சுவைக்கத்தக்கது.

# கம்பன் கவியே கவி

புலவர் சு. முரளி

நற்றமிழில் பாடிடவும்
நற்புலமை பெற்றிடவும்
சொற்றிறமை நாளும் உயர்ந்திடவும்
உற்றதுணை -
காஞ்சி நதிப் பேரூர் வாழ்
ஆதியுடன் அந்தமில்
சாந்தலிங்கர் தந்த தமிழ்.

பாட்டின் தளையும்
பதமும் பொருளுடன்
கூட்டும் வகையறியேன்
கற்றோரே
கோட்டுசிலை ஐயன் இராமன்
அருட்சரிதம் சிலசொல்வேன்
ஆசையால்!
ஏற்பீர் மதித்து!

நாடறியும் நல்லவனை
தெய்வத் திருமணியை
வீடுபேறு நல்கும் விமலனை -
ஆடரவின் மேலே துயில்வானை
கோசலை பெற்றிட
மேலோர் புகழ்ந்தனர் மகிழ்ந்து.

விண்ணுலகம் வாழ
மறைவேதியர்கள் போற்றிட
மண்ணுலகில் மாலவன் தோன்றிட
எண்ணில்லா ஆற்றல்மிகு
அரக்கர் அழிந்திட வேண்டியே
போற்றுவோம் தாளைப் பணிந்து!

ஆன்றோர் தவம்போல்
ஈன்றோர் மகிழ்ந்திட
ஊன்றிய வில்லேந்தி
தாடகையைத் தகர்த்தெறிந்து
கானில் தவமுனி வேள்வி காத்தான்
வானின்று
கீழிறங்கி வந்த மகன்!

அருளொழுகு கண்ணும்
அமுது ஒழுகு வாயும்
இருள் ஒழுகு மேனி எழிலும்
மருவிலா நன்முகமும் காண
இருவரும் கூடி
இணைந்து மணந்தார் இனிது.

ஆழி உலகம் அடல்பரதன் ஆளநீ
ஏழிரண்டு ஆண்டுகள்
ஏகுக கான்
தாழ்சடை தாங்கித் தவம்புரிக
என்றான் நின் தந்தையென்று
ஓங்கி உரைத்தாள் கைகேயி!

பரதன் இராமனின் பாதுகை பெற்றும்
அரசாள எண்ணா அரசன் அவனே!
பரதன் குணம்போல குணமுண்டோ
வணங்கி மதிப்போம் உவந்து.

தேனும் தினைமாவும்
ஊனுடை மீனுடன்
கானிடை வந்தான் குகனென்பான்
வானோர்
தொழுதேத்தும் வள்ளலைத் தானும்
தொழுது விழுந்தெழுந்தான் பணிந்து

மின்னொளியோ பொன்னொளியோ
மேனியொளி -
ஐயையோ
என்னென்று சொல்வேன்
பொன்மான்தான்!
என்றென்றும் இப்புவியில்
யான்கண்ட தில்லை இல்லையே!
அப்பெண்மான் கண்டாள் அதை!

பொய்வேடம் பூண்டந்தப் பொல்லா இராவணன்
மெய்தீண்ட அஞ்சியே மைதிலியைப் பைய
குடிலுடன் தூக்கிய வண்ணம் வானில்
கடிதினில் சென்றான் கொடிது!

கண்டனன் கற்பினுக்கு அணியாளை
பொற்பு உடையாளைக் கண்களால்
விண்டுரைக்க மாட்டா வியப்பெய்தி
சண்டமாருதி சடுதியில் தந்த ஐயன்
கணையாழி கண்டாள் களித்து!

முக்கோடி வாழ்நாளும்
முறைதவமும் முன்நாள்
எக்கோடி யாராலும் வெல்லா வரமும்
திக்கோடு உலகனைத்தும்
செருக் கடந்த மார்பில்
புக்கோடி உயிர்பருகி போயிற்று
இராகவன் புனித வாளி!

அரியணை அஞ்சனை மைந்தன் தாங்கிட
பரதன் குடைகவிக்க
உடைவாள் அங்கதன் ஏந்திட
இருவரும் கவரிபற்றி நின்றிட
அரிய சடைவள்ளல் மரபுளோன் தந்திட
வசிட்டன் மணிமுடி புனைந்தான் உவந்து.

இருசெவியில் தேன்பாய்ச்சும்
இன்பக் கவிதைகள் இயற்றிட முயன்றேன்
அம்புவி யன்றியும்
உம்பரும் போற்றுகின்ற
கம்பன் கவியே கவி!